











# மீள்பார்வை

මීළ්පාර්වෛ
Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038
Meelparvai Fortnightly
meelparvai.net
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்
இதழ் - 422 • 30 ஒகஸ்ட் 2019 வெள்ளிக்கிழமை • துல்-ஹஜ் 1440 • விலை 40.00




**புலரும் புது வருடம் பூத்துக் குலுங்கும் புன்னகைகளால் நிரம்பி வழியும் முகங்களை நாட்டுக்குத் தர வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்**

# முதற் தடவையாக சர்வதேச பயங்கரவாதிகளின் பட்டியலில் இலங்கைப் பயங்கரவாதிகள்



இலங்கையில் அடையாளப்படுத்தப்பட்ட பயங்கரவாதிகளின் பெயர்களை உலகில் அறியப்பட்டுள்ள ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகளின் பட்டியலில் இணைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது என இன்டபோலின் செயலாளர் ஜர்கன் ஸ்டொக் தெரிவித்தார்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக இலங்கை இன்டபோலின் அங்கத்தவராக இருந்த போதிலும், இன்டபோலினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள

(பக். 14)



## ஜனாதிபதிக்கு இன்டர்போல் விருது

ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னரான இன்டர்போலின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைத்ததை மெச்சும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனவுக்கு இன்டர்போல் விருதொன்று வழங்கி வைக்கப்பட்டது. இன்டர்போலின் பொதுச் செயலாளர் ஜர்கன் ஸ்டொக் ஜனாதிபதி மாளிகையில் வைத்து இதனைக் கையளித்தார்.

## பட்டிகலோ கம்பஸை திறக்க விட மாட்டேன்



பாரிய நிதி மோசடிக்குக் காரணமாகவுள்ள ஹிஸ்புல்லாவின் பட்டிகலோ கம்பஸ் ஜனவரியில் திறக்கப்படுவதற்கு விடமாட்டேன் என பாராளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லாஹ் அவர்களின் வங்கிக் கணக்குக்குக் கிடைத்துள்ள கோடிக்கணக்கான பணம் தொடர்பில் முறையாக விசாரிக்கப்பட்டு வழக்கு முடிவடையும் வரை இதனைத் திறப்பதற்கு நான் விட மாட்டேன் எனத் தெரிவித்துள்ள அவர், ஜனவரியில் இது ஆரம்பிக்கப்பட வேண்டுமாக இருந்தால், வழக்கு முறையாக விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். ஜனவரியில் புதிய ஜனாதிபதி நியமிக்கப்படுவார். அதன் அடிப்படையில் நாங்கள் செயற்படுவோம் எனவும் தெரிவித்தார். ஹிஸ்புல்லாவுக்குத் தேவையான மாதிரியெல்லாம் திறக்க முடியுமென்றிருந்தால் இது ஒரு நாடு அல்ல. இது போன்ற பாரிய நிதி மோசடி வேறெந்த நாட்டிலாவது நடந்திருந்தால் அவர் இன்று சிறையில் எனவும் அவர் தெரிவித்தார்.

## வெறுப்புப் பேச்சுக்களை இலங்கை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும்



இலங்கைக்கு விஜயம் செய்த நம்பிக்கை அல்லது மதச் சுதந்திரத்துக்கான ஐநாவின் விஷேட அறிக்கையாளர் அஹமட் சஹீட், தேசிய நல்லிணக்கத்துக்கான பல முன்மொழிவுகளை முன்வைத்துள்ளதோடு, வன்முறையில் ஈடுபடுகின்றவர்களைத் தண்டிப்பதற்கும், வெறுப்புப் பேச்சுக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் முறைமைகளை வகுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(பக். 15)

## சொத்துக்களை வெளியிட்ட 10 பேரில் அலி ஸாஹிர் மௌலானா



சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனப்படுத்தும் சட்டத்துக்கிணங்க இலங்கைப் பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களில் 10 பேர் தமது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் இதுவரை பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இவர்களுள் ஆசு மாரசிங்க, ஹர்ஷ டி சில்வா, விமலவீர திசாநாயக்க ஆகியோர் 2018/19 ஆம் ஆண்டுக்கான சொத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களான தாரக பாலசூரிய, வாசுதேவ நாணயக்கார, (பக். 15)

## ஈஸ்டர் தற்கொலைதாரிக்கு இந்து மயானத்திலும் இடமில்லை



மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் ஏப்ரல் 21ஆம் திகதியன்று தற்கொலைத் தாக்குதல் நடத்தியவரின் உடற் பாகங்களை மட்டக்களப்பு - கள்ளியங்காடு இந்து மயானத்தில் அடக்கம் செய்தமைக்கு எதிராகவும், அந்த உடற் பாகங்களை தோண்டியெடுக்குமாறும் கோரி, அந்தப் பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். (பக். 14)

## சவேந்திர சில்வா நியமனம்

### பழைய கோவைகளைத் தேடுகிறது ஐ.நா.



புதிய இராணுவத் தளபதியாக ஜனாதிபதியால் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டதையிட்டு கவலை வெளியிட்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுனர்கள் குழுவினர், பாதுகாப்புத் துறை தொடர்பாக நீண்ட காலம் நிலுவையில் உள்ள சீர்திருத்தங்களை முன்னெடுக்கவும் பழைய இராணுவ துஷ்பிரயோகங்களை விசாரிக்கவும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. (பக். 15)

## 2005 தேர்தலில் வாக்களித்த அமெரிக்கப் பிரஜை?



இலங்கைப் பிரஜை அல்லாத நிலையில் 2005 ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ எப்படி வாக்களித்தார் என்பது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்குமாறு சிங்களப் பத்திரிகை ஒன்றின் பிரதி ஆசிரியர் செய்த முறைப் பாட்டில் கவனம் செலுத்துமாறு தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (CMEW) கேட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையகத்துக்கு இவர் செய்த முறைப்பாட்டில், 2005 ஜனாதிபதித் தேர்தலுக்கான வருடாந்த தேர்தல் இடாப்பில் கோத்தாபய ராஜபக்ஷவின் பெயர் உள்ளடக்கப்பட்டிருந்ததாகவும், இந்தத் தேர்தலில் அவர் இலங்கையரல் லாத நிலையில் வாக்களித்திருப்பதாக அறிய வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள் ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் (பக். 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர்..! உங்களுக்கு இன்னொரு சாட்சி தேவையில்லை...!

புத்தளம் மரிக்கார்

வாழ்வில் பலரை சந்திக்கிறோம்...

சிலர் மட்டுமே மனதில் தங்கிவிடுகிறார்கள்...!

பலரது நல்ல வார்த்தைகளால் வசீகரிக்கப்படுகிறோம்...

ஆயினும் சிலர் மட்டும் அவற்றுக்காக வாழும் ஆசைகளையும் எமக்குள் வைத்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள்...!

கொள்கையும் - செயலும் ஒன்றாக இருக்கும் நல்லாத்மாக்களுக்கே அத்தகு தகுதிகள் சாத்தியம்..!

உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர்..!

பலரது உள்ளங்களில் வாழும் மனிதர்... தான் வாழ்ந்த சமூகத்தில் மனித நேயத்தை மார்க்கமாக முன்வைத்தவர்...!

இஸ்லாத்தின் பெயராலேயே இத்தேசத்தை நேசிக்குமாறு, இலங்கையில் தன் இதயத்தால் பேசியவர்...!

அவரது எழுத்துகள், வெளியீடுகள், இலங்கை முழுதும் ஆற்றிய பல தசாப்தங்களை தாண்டிய உரைகளுக்கு அப்பால்...

அந்த சமாதான விரும்பிக்கு இன்னொரு சாட்சி தேவையில்லை...!

எளிமையாலும், தூய்மையாலும், நீதியான நிலைப்பாடுகளாலும்... இரவு பகலாய் விரும்பிச் செய்த இஸ்லாமியப்பணியாலும்...

தனது கொள்கையை வாசிக்கும் புத்தகமாகவே தனது வாழ்க்கையை அவர் அமைத்துக்கொண்டிருந்த விதத்துக்கு அப்பால், இந்த நாட்டின் நேர்மையான பிரஜைக்கு இன்னொரு ஆதாரம் தேவையில்லை...!

கண்கள் கசிகிறது...!

இந்தக்கைது ஆச்சரியத்தை தருகிறது...!

சிறைக்கம்பிகளின் பின்னால் நிறுத்தி விசாரிக்க வேண்டிய சிந்தனையா இது..!? என நெஞ்சம் கனக்கிறது...!

மென்மையும், புன்சிரிப்பும், என்றுமே கோபப்பட்டு கண்டிராத சகோதர சுபாவமும் கொண்ட ஒரு வெண்புறாவின் வலி என் இதயத்தை குடைகிறது...!

நெருக்கமில்லாதவர்கள், ஒரு முறையேனும் நேரில் சந்திக்காதவர்கள் மாத்திரமே இத்தகு ஆளுமைகள்




## சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

மீது இல்லாததை சொல்ல முடியும்..!

தேச நலன் பற்றி அவர் அமைதியாகப் பேசும் அந்த அலுவலக மேசை...!

'சுரக்கிமு ஸ்ரீலங்கா' என்ற எண்ணக்கருவுக்கு எழுந்து நின்ற பொழுதுகள்..!

அடுத்த இயக்கத்தாரோடு அன்பு செலுத்தக் கற்றுத் தந்த வகுப்பறை...!

ஒரு குருவிக்கும் தண்ணீர் தரும் அவரது மனோநிலை...!

தெரிந்தவர்கள் சொல்வார்கள்...

முஸ்லீம்களுக்கு மட்டுமல்ல அவர் இந்த நாட்டின் சொத்து என்று...!

அரசியல் அவலத்தில்...

உயர்ந்த விழுமியங்கள் கருகிப்போகும் வீதியில்....

என் பிறந்த மண்ணை நேசித்த ஓர் உயர்ந்த ஆளுமையை கண்ணீர் மல்கப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்...!

நல்லவர்கள் நசுக்கப்படும் ஒரு தேசத்தின் எதிர்காலத்தை பேய்களே கொண்டாட முடியும்...!

வல்ல அல்லாஹ் பாதுகாப்பானாக...!

இந்த நாட்டை மலருள்ள மரங்களால் நிரப்புவானாக...!

தனது ஆயுளை நண்மைகளுக்காக அர்ப்பணித்த மதிப்பிற்குரிய உஸ்தாத் அவர்களை

விரைவான நீதியின் மூலம் மீட்பானாக..!

பிரார்த்தனைகளோடு

# உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பரின் கைது....

உஸ்தாத் எஸ்.எச்.எம். பளீல்



இந்தத் தகவல் கிடைத்தவுடன் மிகுந்த கவலையும் ஆச்சரியமும் ஏற்பட்டது. 1980 களிலிருந்து எனக்கு அவரைத் தெரியும். அவரிடம் பல நற்பண்புகள் காணப்பட்டன.

எவரைத் தான் சந்தித்தாலும் புன்முறுவலை உதிர்ப்பதும் உடனடியாக கைகளைப் பற்றி அக்கறையுடன் சலாம் கூறுவதும் சேமம் விசாரிப்பதும் அவரது பணிவினது அடையாளங்களாக இருந்தன.

எளிமையான உள்நாட்டு ஆடையுடன் கூடிய தோற்றத்திலேயே அவர் எப்போதும் இருப்பார். ஆனால் அவரது தோற்றத்தில் அன்றி அவரது இஸ்லாமிய ஆர்வத்திலும் அறிவிலும் பண்பாடுகளிலும் தான் அவரது ஈர்ப்பு இருந்தமையை காண முடிந்தது. இதனால் தான் அவர் மீது ஆழ்ந்த மரியாதையுடன் கூடிய நம்பிக்கை வைத்த அவர் தலைமைத்துவம் கொடுத்த இயக்க உறுப்பினர்கள் அவரை பல்லாண்டுகளாக இயக்கத் தலைவராக ஏற்று பின்பற்றியிருக்கிறார்கள்.

அவர் தன்னை தனது ஆதரவாளர்கள் விரும்பிய நிலையிலும் கூட சமூக நலன் கருதி தலைமைத்துவ ஆசையின்றி தலைமைத்துவத்தை விட்டுக் கொடுத்தார்.

இம்மண்ணில் மட்டுமன்றி கடல் கடந்த தேசங்களிலும் சென்று தனது சக்திக்கு உட்பட்ட வகையில் தஃவாப் பணி புரிந்த ஒரு தாஈக்கு அல்லாஹ்வின் அருளும் மனநிம்மதியும் கிட்டட்டும்.

எந்தவொரு ஆழமான கருத்தையும் மிக எளிமையான உதாரணங்களோடும் ஆழமான உவமேயங்களோடும் விளக்கும் ஆற்றலை அவருக்கு அல்லாஹ் வழங்கியிருக்கிறான்.

தான் சரியெனக் கருதும் எக்கருத்தையும் எடுத்துரைக்கும் துணிச்சல் அவருக்கிருந்தது. தஃவாவில் சமயோசிதமும் தூர நோக்கும் அவசியம் என்பதை தனது உரைகள் மற்றும் எழுத்துக்கள் வாயிலாகவும் சதாவும் அவர் வலியுறுத்தி வந்திருக்கிறார். அவரும் மனிதன் என்ற வகையில் தப்புத் தவறுகள் இடம் பெற்றிருக்கலாம். அதற்காக அவர் மன்னிப்புக்கு அப்பாற்பட்டவர் எனக் கூற முடியாது.

தனது உடன்பிறந்த சகோதரரும் அவர் புத்திரர்களும் கடும்போக்காளர்களாக இருப்பதை அடையாளம் கண்டபோது அவர்களை இயக்கத்தை விட்டும் ஓரம் கட்ட அவர் நடவடிக்கை எடுத்தமை குடும்ப உறவை விட இஸ்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அவருக்கிருந்த அக்கறைக்கு சான்றாகும். இந்த இலங்கைத் திருநாட்டில் முஸ்லிம்கள் சமாதான சகவாழ்வை மேற்கொள்ள இந்த தீவிரவாதம் தடையாக அமையும் என்று அவர் நம்பினார். இதனால் தான் ஈஸ்டர் தினத்தில் அரங்கேற்றப்பட்ட அடாவடித் தனத்தை அவர் கடுமையாகக் கண்டித்தார்.

எமது அறிவுக்கு எட்டிய வரையில், அவரது சிந்தனைகளும் செயல்பாடுகளும் நாட்டின் இறைமைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அமையவில்லை என்பதற்கும் அப்பால் அவர் சமூக நல்லிணக்கத்துக்காகவும் தேச நலனுக்காகவும் உழைத்திருக்கிறார். அத்தகைய ஒருவர் கைதுசெய்யப்பட்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

அவர் பிழையாகப் புரியப்படிருக்கிறார். அல்லது அவர் பிழையாகப் புரியப்பட வேண்டும் என்று கங்கணம் கட்டிச் செயற்படும் சிலரால் பிழையாக இனம்காட்டப்பட்டிருக்கிறார். அவர் குற்றவாளியாக இருப்பின் தண்டிக்கப்பட வேண்டும் என சட்டமும் மனசாட்சியுடன் கூறுகின்றன. ஆனால், அவர் நிரபராதியாயின் அவர் பற்றிய அவதூறைக் கூறி அவரை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியவர்கள் இனம் காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் மட்டுமே சரியான நீதி கிடைக்கும். நீதிபதிகளுக்கெல்லாம் பெரிய நீதிபதி அவன்தான்.

சிறை சென்ற பலரை உலகம் கண்டிருக்கிறது. யூசுப் (அலை), இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், நெல்சன் மண்டேலா, காந்தி போன்றோர் நல்ல உதாரணங்கள்.

எனவே சிறை செல்வது ஒன்றும் ஆச்சரியமானதல்ல என்பது வரலாறு கூறும் உண்மையாகும். அல்லாஹ்வுக்கு மட்டுமே மிகச் சரியாக மனிதர்களை மட்டிட முடியும். எமது பதிவுகள் எமது அறிவின் எல்லைக்குள் இருந்து மட்டுமே வருகின்றன.

அல்லாஹ் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பொறுமையும் உயர்ந்த கூலியையும் கொடுப்பானாக!

# நெற்றியில் முத்தமிட்டு கட்டியணைக்க துடிக்கிறது மனம்!

மனாப் அஹமத் ரிஷாத்

உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களின் கைது மனதை ரணமாக்கி கொண்டே இருக்கிறது. அதற்கு பல காரணங்கள் என்னுள் இருந்தாலும் அதில் முதன்மையாக அமைவது ஜமாத்தே இஸ்லாமி உறவும் அதனூடாக விளைந்த அன்பும் நட்பும் ஆகும்.

சிந்தனை ரீதியாகவும், செயல் ரீதியாகவும் இலங்கை தேசத்தையும், இலங்கை மக்களையும் வளப்படுத்தும் பணியை செய்த ஒரு நேர்மையான இஸ்லாமிய அறிஞர். மனதிற்கு நெருக்கமானவர்களுக்கு ஏதாவது நடக் கும் போது வேதனையும் வலியும் எம்மை இயல்பாகவே ஒட்டிக் கொள்ளும். உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களின் கைதும் அதே நிலையை என்னுள் உருவாக்கியிருக்கிறது. நான் ஆத்மார்த்தமாக ஏற்றுக் கொண்ட ஒரு முன்மாதிரியான தலைமை. அதுவே அதற்கு பிரதான காரணம்.

இந்த கைதுக்கு பின்னால் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றில் ஒன்றேனும் ஒரு பொழுதேனும் உண்மையாகாது.

திட்டமிட்டு அரங்கேற்றப்படும் அழிவுகள் நிச்சயம் ஓர் நாள் வெளிப்படும். அந்நாளில் நாம் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களை மலர்ந்த முகத்துடன், தலை நிமிர்ந்து, புறமுதுகு காட்டி ஓடும் கூட்டத்தை விட்டும் தூரமாகி இருப்பதை இன்ஷா அல்லாஹ் நிச்சயம் பார்ப்போம். அதுவரை துஆ, பொறுமை மட்டுமே எங்கள் கைகளில் உள்ளது.

"காலத்தின் மீது சத்தியமாக நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். ஈமான் கொண்டு ஸாலிஹான நல் அமல்கள் செய்து சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தவர்களை தவிர."

NATIONAL DIPLOMA IN
PRE SCHOOL TEACHER TRAINING
(NURSERY TEACHING)

A/L எழுதியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

100% Government Recognition
இத்துறையில் அரச அங்கீகாரம் பெற்ற முதல் முஸ்லிம் கல்வி நிறுவனம்
13 வருட அனுபவம்
இப்போதே இணைந்து கொள்ளலாம்
ஒரு முன்பள்ளியை நடத்துவதற்கு இச்சான்றிதழ் கட்டாயம் என்பது குழந்தை அபிவிருத்தி அமைச்சின் சட்டமாகும்.
DURATION 1 YEAR
Qualifications
G.C.E. A/L சித்தியடைந்திருத்தல் (3S)
(இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
G.C.E. O/L பரீட்சையில் 6 பாட சித்தியுள்ளவர்கள்.



COURSE CENTERS
THIHARIYA | COLOMBO | BERUWELA | MAWANELLA | KINNIYA | WELIGAMA



CERTIFICATE IN
PSYCHOLOGICAL COUNSELING
வாழ்வின் அனைத்துவிடயங்களுக்கும் அடிப்படையான, உள்ளத்தைப்பற்றி படிக்கின்ற அதன் உண்மை நிலையை அறிகின்ற ஒரு பாடநெறி. தொழில் வாய்ப்பை மட்டுமின்றி ஆளுமை விருத்தியையும் ஏற்படுத்திக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.
CONTENTS
Introduction to Psychology
Child Psychology
Teenage Psychology
Introduction to Counseling
Family Counseling & Successful Parenting
சமூக சேவை அமைச்சின்
National Institute of Social Development (NISD)
நிறுவனத்தின் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் வைத்தியர்கள் மூலம் விரிவுரைகள் நடாத்தப்படும்
COURSE CENTER THIHARIYA DURATION 3 MONTHS

DIPLOMA IN
PHARMACY MANAGEMENT
(PHARMACY CORUSE)
QUALIFICATIONS
3S in Science / Maths in A/L, (இவர்களுக்கு Medical Council இன் Pharmacy Licence பெறலாம்.
O/L, பரீட்சை எழுதியவர்கள் (இவர்களுக்கு AGRA வின் Course Certificate வழங்கப்படும்.
COURSE CENTER THIHARIYA 1 DURATION YEAR

AAT English Medium
After O/L & A/L
In this September Class will Be Started for 3rd Stage
Students Will Be Enrolled For 1st, 2nd & 3rd Stages
COURSE CENTER THIHARIYA 6 DURATION MONTHS

சகல பாடநெறிகளுக்குமான பெயர் பதிவுகளுக்கு
பெயர், முகவரி, TP இல, கல்வித்தகைமை, தொடர விரும்பும் பாடநெறி, நிலையம் என்பவற்றுடன் சுய விண்ணப்பம் ஒன்றை முகவரிக்கு அனுப்பவும் or SMS அனுப்பவும்.
140/1C, KANDY ROAD, (MINHATH MW), THIHARIYA.
ÂGRA INSTITUTE
0718 07 37 97
0779 90 54 19
ALL COURSES WILL BE COMMENCED IN THIS SEPTEMBER

100 நாள்
மடவலையில் 16-25 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கான வதிவிட வசதியுடனான கற்கைநெறி
மாணவிகளின் புத்தாக்க சிந்தனையையும் வாழ்வின் மாற்றத்தையும் உண்டாக்க விஷேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறி
ENGLISH & LIFE SKILLS
இக் கற்கைநெறியில் உள்ளடங்குபவை:
- English Language (Special)
- Information Technology (IT)
- Life Skills & Motivation
- தஜ்வீத், தர்பியா மற்று அஹ்லாக்
- Sinhala Language
- Art & Craft (சுயதொழில் பயிற்சி)
- Cookery
- Dress Making (தையல்)
- Home Management வீட்டு முகாமைத்துவம்
- Counseling (உளவியல்)
- Psychology
- Beauty Culture (Natural)
- Bridal Dressing
- Social Media & Safety
இவற்றுடன் மேலும் சில பாடநெறிகள்
Starts on
17th Batch : Sep 14
18th Batch : Sep 23
அரச அங்கீகார (TVEC) சான்றிதழ் மற்றும் சர்வதேச (ISO) சான்றிதழ் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்
HOT LINE : 0777 877 966
EMERRAD
LADIES COLLEGE
No 36/3B, Srimalwattha, Madawala Bazaar, Kandy. Tel : 081 2050600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• பியாஸ் முஹம்மத்

# காவல் தெய்வத்துக்காக காத்திருக்கும் பக்தர்கள்



ஜனாதிபதித் தேர்தலில் இந்த முறை தேசிய பாதுகாப்பு என்பதே தொனிப் பொருளாக இருக்கப் போகிறது. ஆனாலும் தேசிய பாதுகாப்பு என்பது என்ன என்பது இன்னும் தெளிவாக வரையறுக்கப்பட வில்லை என்றே தோன்றுகின்றது.

இலங்கையை முற்று முழுதான பௌத்த தேசியமாகக் கருதுபவர்கள் தேசிய பாது காப்பு என்பதை பௌத்தத்தையும் பௌத்த மக்களையும் பாதுகாப்பது என்பதாகவே கருதுகிறார்கள். மகாநாயக்கர்களைச் சந் தித்த எல்லா வேட்பாளர்களிடமும் அவர் கள் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதைத் தான் தலையாய பணியாக எடுத்துரைத் திருக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் கருதப்படும் சஜித் பிரேம தாசவிடம் இந்தக் கோரிக்கை முன்வைக் கப்பட்ட போது அவர் 1123 சைத்தியக் களைக் கட்டி பௌத்த மதத்தைப் பாது காப்பதற்காக உழைப்பேன் என்று கூறி யிருக்கிறார். ஆனால் கோத்தபாய ராஜ பக்ஷ வேட்பாளராக அறிவிக்கப்படுவ தற்கு முன்னரே ஹிட்லராக மாறியாவது நாட்டைக் காப்பாற்றுங்கள் என பௌத்த பிக்குகள் அவருக்கு வரம் தந்துள்ளனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாள ராக யார் வந்தாலும் அவர்களுக்கு பௌத் தத்தைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கிறது. இந்தக் கோஷத்தை முன்வைத்தால் மட்டுமே பௌத்த மதகுரு மார்களின் ஆசியும் ஆதரவும் வேட்பாளர் களுக்குக் கிட்டும் என்ற நிலைதான் இருக் கிறது. ஆனால் பௌத்தத்தைப் பாதுகாத் தல் என்பதில் சஜித்தும் கோத்தாவும் வேறு வேறான நிலைப்பாட்டில் இருப்பது தெரி கிறது. சஜித் பிரேமதாச புத்தர் போதித்த அகிம்சாவாதத்தை நோக்கிப் பேசுவதாகத் தெரிகிறது. ஆனாலும் கோத்தபாயவைப் பொறுத்தவரையில் அண்மைக் காலமாக மாறிவரும் இராணுவப் போக்கான மிலிட் டரி பௌத்த சித்தாந்தத்தையே நோக்காகக் கொண்டிருப்பது புரிகிறது.

த நியூயோர்க் டைம்ஸில் ஹனா பீச் எழுதிய கட்டுரையொன்றில் இலங்கை யில் அகிம்சாவாத பௌத்தம் சிதைந்து மிலிட்டரி பௌத்தமே நிலைபெற்றிருப்ப தாகக் குறிப்பிட்டிருந்தார். கோத்தபாய ராஜபக்ஷ இந்த பௌத்தத்தைத் தான் பாது காப்பதாகக் கூறியிருப்பதாகவே தெரிகி றது. ஹிட்லருடைய சாம்ராஜ்யத்தில் அகிம்சாவாதத்தை எதிர்பார்ப்பது பசுத் தோல் போர்த்திய புலி பசிக்கும் போது புல்லுத் தின்பதை எதிர்பார்ப்பதற்குச் சம மானது.

அந்த வகையில் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய சொல்லுகின்ற தேசிய பாது காப்பு நிச்சயமாக மிலிட்டரி பௌத்தத் தின் துணையோடு தான் மேற்கொள்ளப் படப் போகிறது. ஏற்கனவே இலங்கையில் இஸ்லாமியர்களை எதிரிகளாகச் சித்திரித்து வைத்துள்ள பௌத்த தீவிரவாதம், இந்த நெருப்புக்கு எண்ணெய் ஊற்ற முடியும்.

ஜனாதிபதி சிறிசேனவும் இதற்கு ஒத் துழைக்கின்ற நிலைமையை அவதானிக்க முடிகிறது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக் கான வேட்பாளராக கோத்தாபய ராஜ பக்ஷ அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் புதிய இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வாவை அவர் புதிய இரா ணுவத் தளபதியாக நியமித்திருக்கிறார். ஜேவிபி கிளர்ச்சியை அடக்குவதில் பெரும் பங்கு வகித்த இவர், மாத்தளை வன்முறை களின் போது முதலாவது கஜபா படை யணியை வழிநடத்திய கோத்தபாய ராஜ பக்ஷவின் கீழால் பணிபுரிந்தார். மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர் இவர் என ஐ.நா.வும் அமெரிக்கத் தூதுவரும் அதிருப்தியை வெளியிட்ட போதிலும் ஜனாதிபதி இவரை இராணுவத் தளபதி யாக நியமித்திருக்கிறார்.

அதேபோல மஹிந்த ராஜபக்ஷ நடத் திய இறுதி யுத்தக் காலத்தில் இராணுவக் கட்டளைத் தளபதியாக விளங்கிய ஜென ரல் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக லத்தீன் அமெரிக்காவில் யுத்தக் குற்றச் சாட்டு வழக்குகள் உள்ள போதும் ஜனாதிபதி சிறி சேன இவரை பிரேசில், கொலம்பியா, பெரு, சிலி, ஆர்ஜன்டினா, சூரினாம் ஆகிய நாடுகளுக்கான தூதுவராக நியமித்திருந் தார். இவர் அண்மையில் ஆற்றிய உரை யொன்றில் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின் னர் நாட்டில் இராணுவ ஆட்சி கொண்டு வரப்பட வேண்டும் எனக் கருத்து வெளி யிட்டிருந்தார்.

இப்படி முன்னும் பின்னும் இராணுவ ஆட்சியை வேண்டும் பக்த கோடிகளே ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜ பக்ஷவைச் சூழ்ந்துள்ள நிலையில் அவர் இதனை நோக்கித் தான் செயற்படுவார் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இலங் கையின் தேசிய பாதுகாப்பு தற்பொழுது எல்லை கடந்த பாதுகாப்பின் அங்கமாக இருப்பதனால் பிராந்திய நாடுகளும் சர்வ தேசச் சக்திகளும் கூட இலங்கையின் தேசிய பாதுகாப்பில் கவனம் செலுத்தி வருகின்றன.

கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதியா வதற்கு தடையாக இருக்கின்ற அமெரிக்க பிரஜா உரிமை தொடர்பில் இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் அண்மையில் டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கியிருந்த பேட்டியில் தெரிவித்திருந்த மெத்தனமான கருத்துக்கள், இலங்கையின் தேசியப் பாது காப்பு என்கின்ற கோஷம் அமெரிக்காவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை புலப் படுத்துகிறது. சவேந்திர சில்வா இராணு வத் தளபதியாக நியமிக்கப்பட்ட போது விசனம் வெளியிட்ட அமெரிக்கா கோத்த பாய ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப் பட்ட போது மௌனம் சாதித்தது. இவ் விருவருக்கும் எதிராக மனித உரிமை மீறல் முறைப்பாடுகள் இருக்கின்றன.

விசனத்தை வெளிப்படுத்துவதில் அமெ ரிக்கா ஏன் இப்படி வித்தியாசமாக நடந்து கொள்கிறது என டெய்லி மிரர் ஊடகவி யலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பெப்லிட்ஸ், இராணுவத் தள பதி ஓர் அரசாங்க அதிகாரி. ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு வர ஆசைப்படும் ஒருவர். ஓர் அரசியல் கட்சி வேட்பாளரை நியமிப்பதற்கும் ஓர் அரசாங்கம் உத்தி யோகபூர்வ பதவியில் ஒருவரை நியமிப்ப தற்கும் இடையில் வேறுபாடு இருக்கிறது என அவர் தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர், குடியுரிமையைத் துறப்பதற்கு சம்பந்தப் பட்டவருக்கு எதிராக குற்றவியல் (Crimi nal) முறைப்பாடுகள் இருக்கக் கூடாது. கலிபோர்னியாவில் இவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவை சிவில் வழக்குகளே என்றும் தெரிவித்திருக்கிறார். இது தவிர கோத்தாபய தொடர்பில் அவர் தெளிவான கருத்துக்கள் எதனையும் தெரி விக்கவில்லை. அந்த வகையில் எதிர் வரும் நவம்பரில் வெளியிடப்படும் குடி யுரிமை துறப்புப் பட்டியலில் இவரது பெயர் குறிப்பிடப்படுவதற்கான வாய்ப் புக்கள் இருக்கின்றன. சிலவேளை இது பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்களுக் காகவும் இடம்பெறலாம் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது. பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடப் போவதாக ஜனாதி பதி வேட்பாளர் கோத்தபாய அறிவித் திருக்கின்ற நிலையில் இவ்வாறான ஒப் பந்தங்கள் அவருக்குத் தேவைப்படுவதற் கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

மறுபுறத்தில் இந்தியா தனது நாட்டில் இலங்கையிலிருந்து வந்த ஐஎஸ் தீவிர வாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக நாளொரு மேனியும் செய்தி வெளியிட்டு வருகிறது. தனது நாட்டின் பாதுகாப்புக்கு இலங்கையின் தேசியப் பாதுகாப்பு முக் கியமானது என்பதையே அது இவ்வாறு சொல்லி வருகிறது. இந்த வகையில் பிராந்திய சக்திகளுக்கும் சர்வதேச சக்தி களுக்கும் இலங்கையின் தேசியப் பாது காப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமை கிறது. இதனால் இந்த முறைய தேர்தலில் தேசியப் பாதுகாப்பு என்ற கோஷம் பெரியதொரு இடத்தைப் பெறப் போகி றது. எமக்கு அரசியல் செய்வதற்கு ஓர் எதிரி வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க சொன்னதற்கேற்ப இஸ்லாமிய எதிரிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள னர். இதனையொட்டிய கைதுகளும் ஆரம் பமாகி பிரச்சாரங்களும் மீண்டும் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. நாட்டின் பாது காப்பு தான் கடன் சுமைகளை விட, பொருளாதார முன்னேற்றத்தை விட முக் கியமானது என்பதில் மக்களும் நம்பிக்கை கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

அகிம்சாவாத பௌத்தத்தை இன்னும் நம்பியிருப்பவர்களால் இது சாத்தியப்படப் போவதில்லை.


O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேடமான பாடநெறிகள்

AUTOMOBILE
ENGINEERING TECHNOLOGY
1st Level 4 Months
2nd Level 6 Months
Medium - English & Tamil
Next Batch Sep-9 & 16
Obtain 3 Certificates including NVQ + International ISO
With 100% Practical Training
By : Well Qualified Lecture Panel

DIPLOMA IN CONSTRUCTION MANAGEMENT
AUTO CAD
MS PROJECT
MEP - AUTO CAD
REVIT ARCHITECTURE
PRIMAVERA P6
CONSTRUCTION PROCEDURES & CENTERING ESTIMATION
DURATION 09 MONTHS
Next Batch in September

LIVE, STUDY & WORK IN JAPAN
Japanese Language Classes
▶ NAT
▶ JLPT
▶ SPOKEN JAPANESE
Full Time or Part Time Class Availabel

Business Management
● Business Objectives ● Marketing Management
● Entrepreneurship ● HRM
● Accounting & Finance ● Production
HND ↑ Adv. Diploma ↑ Diploma
Duration: 3 Months
Next Batch Sep - 9 & 16

AIRLINE TICKETING
Course Contents
+ Airline Ticketing
+ Air Fare Calculation
+ Airline Geography
+ Operation of a Travel Agency
+ Airline & Travel Terminology
+ Reservation Procedures
+ IATA International Regulations
+ GDS / AMADEUS
Duration: 1-3 Months
Full Time/Part Time
Individual classes are also available

ENGLISH + IT With Skills Training
TOEFL / TOIEC APPROVED EXAM CENTER
English Language
Grammar & Spoken Activities
Listening & Writing Skills
Skills Training
Personal Grooming
IT
Ms Office Packages Or Hardware Engineering Or Computerized Accounting
Duration: 2 Months
Full Time (Mon to Sat)
Next Batch Sep - 9 & 16
Obtain 03 Certificates Including an International Certificate.

ஆண்/பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு - Hostel Available

Golden College Learning For Success
GOLDEN COLLEGE CITY CAMPUS
An ISO 9001 : 2015 Certified Institute | TVEC Reg No : (P09/0148)
#548, Peradeniya Road, Kandy.
www.goldencollege.lk
HOTLINE 0777 222 529 0812 205 544


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, S. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# அநியாயமான கைதுகள் நிறுத்தப்பட வேண்டும்

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் முன்னாள் தலைவர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது. ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னர் இவ்வாறான கைதுகள் பரவலாக இடம்பெற்றன. எவ்வித நியாயங்களும் இன்றி ஏராளமானோர் கைது செய்யப்பட்டு பல மாதங்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இன்னும் சிலர் விசாரணை என்ற பேரில் பல மாதங்கள் கடந்தும் இன்று வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தான் அணிந்திருந்த ஆடையில் தர்மச் சக்கரம் போல ஒரு சித்திரம் இருக்கிறது என்பதற்காக அபலைப் பெண்ணான மஸாஹிமா அநியாயமாகக் கைது செய்யப்பட்டார். இராணுவத்தினருக்குப் பரிச்சயமில்லாத உபகரணங்களை வைத்துக் கொண்டிருந்ததற்காக பலர் கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டார்கள். முஸ்லிம்களின் பரிபாஷையில் பாவிக்கப்படும் அப்பாவுக்கும் வாப்பாவுக்கும் வித்தியாசம் தெரியாததால் வயோதிபர் ஒருவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இப்படி எண்ணிலடங்காத கைதுகள் நியாயமான காரணமின்றி கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூட இதனைக் கண்டித்திருந்தது.

இதற்கு அப்பால் கைது செய்தபின் குற்றங்களை ஜோடிக்கின்ற புதியதொரு நடைமுறையும் இலங்கையின் நீதித் துறைக்குள்ளால் இக்காலப்பிரிவில் நுழைந்திருக்கிறது. வைத்தியர் ஷாபியின் கைது விவகாரம் இப்படியான விசித்திரங்களை நாட்டில் நடைமுறைப்படுத்திக் காட்டியது. தற்போது உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பருடைய கைதும் இது போன்றதொன்றாகவே தெரிகிறது. ஆரம்பத்தில் விசாரணைக்கெனவே அழைத்துச் செல்லப்பட்டபோதும் பின்னர் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தடுப்புக் காவலில் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஊடகங்கள் வாயிலாக பல குற்றங்களும் சந்தேகங்களும் அவர் மீது புனையப்பட்டு வருகின்றன.

புத்தர் சிலையை உடைத்த கும்பலின் சூத்திரதாரியாக அவரைச் சித்திரித்துள்ள ஒரு பத்திரிகை முஸ்லிம் இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி பயங்கரவாதப் பயிற்சிகளை அவர் வழங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளது. மற்றுமொரு சிங்களப் பத்திரிகையில் அவர் ஆப்கனிஸ்தான் யுத்தத்துக்கும் சென்றுள்ளார் எனவும், 70 க்கு மேற்பட்ட நாடுகளுடன் தொடர்புபட்டிருப்பதாகவும், 2027 இல் நாட்டைக் கைப்பற்றும் திட்டமும் அவருக்கிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

வைத்தியர் ஷாபிக்கு நடந்தது போல ஊடகங்கள் கண்டபடி குற்றச் சாட்டுக்களை முன்வைத்து மக்களை நம்ப வைக்கின்ற பணியை ஆரம்பித்திருக்கின்றன என்பதையே இவை காட்டுகின்றன.

உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் கைது செய்யப்படும் போது அவசர காலச் சட்டம் அமுலில் இருக்கவில்லை. நள்ளிரவில் அவர் அழைத்துச் செல்லப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரைப் பார்ப்பதற்கு சட்டத்தரணிகளுக்கோ உறவினர்களுக்கோ கூட அனுமதி வழங்கப்படவில்லை. இப்படி நீதி நடைமுறைகளுக்கு முரணான பல விடயங்கள் அவருடைய விடயத்தில் நடந்தேறியிருக்கின்றன. தவிரவும் ஸஹ்ரான் தீவிரவாதியாவதற்குப் பல வருடங்களுக்கு முன்னர் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டமையும் அவர் மீதான குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டிருக்கிறது.

உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் சமூகத்தின் அனைத்துத் தரப்பினராலும் மதிக்கப்படுகின்ற ஓர் ஆளுமை. சமூகத்தை நல்ல வழியின் பால் வழிநடத்துகின்ற சிந்தனைவாதியும் செயற்பாட்டாளரும் கூட. தீவிர வழியை இளைஞர்கள் தேர்ந்தெடுக்காமல் கவனமாக வழிநடத்தியவர். வன்முறையையும் தீவிரவாதத்தையும் வன்மையாக எதிர்ப்பவர்.

இப்படியெல்லாம் சமூகத்தில் பேரெடுத்த ஒருவருக்கு இந்த நிலை என்றால் முஸ்லிம் சமூகத்தின் சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்களின் நிலையைப் பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. இது முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமன்றி நாட்டின் அனைத்து செயற்பாட்டாளர்களுக்கும் பொதுவானதொன்று தான். தாய்நாட்டின் மீதான பற்றின் காரணமாக நாட்டு நலனுக்காக உழைப்பவர்கள் மீது அநியாயமான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுவது நாட்டு நலனில் உண்மையான அக்கறையுடைவர்களைக் களையெடுக்கும் செயற்பாடாகவே அமையப் போகிறது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

[illegible]

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka
www.pccsl.lk

# நாட்டை மீட்பவர்கள் யார்?

• திசரணி குணசேகர

அமெரிக்க புராணக் கதைகள் நிபுணர் ஜோசப் காம்பல் அவர்களினால் நவீன கால தொன்மங்கள் (Mythic Inflation) எனும் கருதுகோள் அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது, தனது தேசத்தை / மக்களை மீட்டெடுப்பதற்கான தெய்வீக ஆணையுடன் எழுச்சியடைந்து வரும் ஆட்சியாளர் ஒருவரை விளக்குவதற்காக அவர் அந்தப் பதத்தை பயன்படுத்தினார். அவ் ஆட்சியாளர் தனது கொடுங்கோல் அரசில் ''மனிதர்களுக்கூடாக பெற்றுக் கொண்ட முடியாட்சி பாத்திரத்தை வகிப்பார். அவர் கடவுளின் சித்தம், கருணை என்பவற்றின் அவதாரமாக இருப்பதுடன், அகிலத்தின் போஷகராகவும் இருப்பார்'' (Occidental Mythologies).

நீண்ட காலமாக இடம்பெற்ற ஈழப் போரை முடிவுக்கு கொண்டு வந்ததன் பின்னர் இலங்கையில் ராஜபக்ஷ ஆட்சி தொடர்பாகவும் இதே மாதிரியான ஒரு மீள் வரைவிலக்கணத்தை முன்வைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கு நான்கு பிரம்மாக்களின் ஆசியுடன், விண்ணிலிருந்து அனுப்பப்பட்ட மன்னராக மஹிந்த ராஜபக்ஷ போற்றிப் புகழப்பட்டார். தொலைக்காட்சி தொடர்களில் இலங்கை வரலாற்றை தொகுத்துக் கூறும் நடிகர் ஜக்சன் அந்தனி துட்டகைமுனு மன்னனுக்கு ஊடாக ராஜபக்ஷ குடும்பத்தினரின் வரலாற்றை புத்தபெருமான் வரையில் பின்னகர்த்திச் செல்லும் ஒரு குடும்ப விருட்சத்தை முன்வைத்தார்.



கோட்டாபய ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் (SLPP) ஜனாதிபதி வேட்பாளராக வந்தால் (அதாவது, கலிபோர்னியா மத்திய மாவட்ட நீதிமன்றம் மற்றும் ஐக்கிய அமெரிக்க ராஜாங்க திணைக்களம் என்பன அதற்கு அனுமதி அளிக்கும் பட்சத்தில்) அவரும் இதே மாதிரியான ஒரு மகுடத்தை தனக்குச் சூட்டிக் கொள்வார். தன்னை புத்தபெருமானின் ஓர் உறவினராகவும், தேவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நபராகவும் அவர் தன்னை சித்திரிப்பார்.

கோட்டாபய ராஜபக்ஷ தனது ஆதரவுத் தளத்தை கட்டியெழுப்புவதற்கென கடந்த 4 ½ வருட காலத்தைச் செலவிட்டுள்ளார். வியத்மக மற்றும் எலிய போன்ற அமைப்புகளுக்கூடாக, தனது சகோதரர்களிடமிருந்து ஓரளவுக்கு அரசியல் மற்றும் கட்டமைப்பு ரீதியான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் முயற்சித்தார். மஹிந்த மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் முற்று முழுதான ஆதரவு இல்லாத நிலையில் அவரால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியாது. ஆனால், அவர் நாட்டின் நிறைவேற்றதிகாரம் மிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் மஹிந்த ராஜபக்ஷவின் ஒரு கையாளாக மாத்திரம் செயற்படுவார் என்று கூற முடியாது.

மாறாக, அடுத்து வரும் சில வருடங்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும், அவருடைய கூட்டாளிகளும், மனைவிமாரும், பிள்ளைகளும் அதிகாரம், செல்வாக்கு என்பவற்றுக்காக ஒருவருடன் ஒருவர் சண்டை பிடித்துக் கொள்ளும் சகோதரப் பகைமை மற்றும் மோதல் என்பவற்றைக் கொண்ட ஆண்டுகளாகவே காணப்பட முடியும்.

இத்தகைய எதிர்கால ஆபத்துக்களை மஹிந்த ராஜபக்ஷ அறிந்திருப்பதன் காரணமாக தனது வாரிசாக கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முடி சூட்டும் விடயத்தில் அவர் தயக்கம் காட்டி [illegible] றொரு காரணம் தனது மூத்த மகனின் அரசியல் எதிர்காலம் குறித்த கரிசனைகள் ஆகும். நாமல் ராஜபக்ஷ 2024/2025 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தேவையான வயது வரம்பை எட்டுவார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானால் ஐந்து வருடங்களின் பின்னர் அவர் அதிலிருந்து ஒதுங்கி, தன்னுடைய சகோதரரின் மகனுக்கு வேட்பாளர் பதவியை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் பூச்சியத்திலும் குறைவாகவே காணப்படுகின்றன. அவருக்கு இரண்டாவது பதவிக் காலம் ஒன்று தேவைப்பட முடியும். அதேபோல அவருக்கும் ஒரு மகன் உள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தனது சகோதரருக்கு முடிசூட்டும் விடயத்தில் தயக்கம் காட்ட முடியும். ஆனால், கோட்டாபய அணியிலிருந்து தொடர்ச்சியாக உரத்த குரலில் முன்வைக்கப்பட்டு வரும் கோரிக்கைகள் மற்றும் பொது மக்களின் தரப்பிலிருந்து வரும் அழுத்தம் என்பவற்றை அவரால் அலட்சியம் செய்ய முடியாதிருப்பது போல் தெரிகின்றது.

ஜனாதிபதிப் பதவி மீதான தீராத ஆசை சிறிசேன-விக்கிரமசிங்க ஆட்சியை சீர்குலைத்துள்ளது. அதே ஆசை ராஜபக்ஷ குடும்பத்திற்குள்ளும் பிளவுகளை உருவாக்கி வருகின்றது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்தால் குடும்பச் சண்டை ஒரு வழமையாகவும், நாட்டில் பதற்றங்களைத் தோற்றுவிப்பதற்கான ஒரு மூலாதாரமாகவும் இருந்து வரும்.

### கோட்டாபயவின் எழுச்சியும் சஜித்தின் கனவும்

கோட்டாபய ராஜபக்ஷவின் பிரஜா உரிமை இன்னமும் சந்தேகத்திற்கு இடமானதாக இருந்து வரும் நிலையில், அவருடைய ஆதரவாளர்கள் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கும், தனது சேவைகளை வழங்குவதற்காகவும் வெளிநாட்டு கௌரவங்களைத் தியாகம் செய்யும் ஒரு வீரராக அவரை சித்திரித்துக் காட்டுவதற்கான ஒரு முயற்சியில் இறங்கியுள்ளனர். வியத்மக அமைப்பு இணையத்தில் வெளியிட்டிருக்கும் ஒரு பதிவு இதற்கான உதாரணமாகும். அப்பதிவில் கோட்டாபய ராஜபக்ஷவின் படமும், மஹிந்த தேரரின் பாணியில் எழுதப்பட்டிருக்கும் ஒரு கவிதையும் சேர்க்கப்பட்டுள்ளது.

''தரணி புகழ் தாய்த்திரு நாடு (என்னை) 'வருக' என அழைக்கும் பொழுது மற்றொரு நாட்டு பிரஜா உரிமை எனக்கு எதற்குத் தேவை?'' என கவிஞர் கேட்கின்றார். ''நான் எல்லா கௌரவங்களையும் துறந்து, எனது தாய்நாட்டிற்கு வருவேன். உங்களை பாதுகாக்கும் பணியை முன்னெடுப்பதற்கு வருவேன்.''

கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவில் எத்தகைய கௌரவங்களையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. பல இலட்சக்கணக்கான மக்களைப் போன்று அவரும் அங்கு குடிபெயர்ந்து சென்ற ஒரு சாதாரண பிரஜையாக இருந்ததுடன், கடின உழைப்பில் ஈடுபட்டு, வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைமையை சாதித்துக் கொண்டிருந்தார். வரிகளை செலுத்துவதன் மூலமும், பரீட்சைகளுக்கு தோற்றுவதன் மூலமும், தனது தாய்நாட்டுடனான பிணைப்புக்களை துறப்பதன் மூலமும், ஐக்கிய அமெரிக்காவுக்கு முற்று முழுதான விசுவாசத்தைத் தெரிவிப்பதன் மூலமும் அவர் அமெரிக்க குடியுரிமையை பெற்றுக் கொண்டிருந்தார். அவ்விதம் மிகவும் கஷ்டப்பட்டு பெற்றுக்கொண்டிருக்கும் குடியுரிமையை அவர் கைவிடுவதற்கான நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

அவருடைய ஆதரவாளர்கள் கோட்டாபி கமனய (கோட்டாபயவின் வருகை) என இதனை வரவேற்று வரும் நிலையில், இன்றைய சூழ்நிலையில் அவர் தன்னை சிங்கத்தின் குணாதி[illegible] கூடிய ஒரு புருஷராக சித்திரித்துக் காட்டுவது ஏன் என்பதனைப் பார்க்க வேண்டியிருக்கின்றது. இவர் இராணுவத்திலிருந்து முற்கூட்டியே (அநேகமாக முழுமையான ஓய்வுதியத்துடன்), ஓய்வு பெற்றது ஏன் என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

இரண்டாவது, எல்.ரீ.ரீ.ஈ யுத்தம் தீவிரமடைந்த கால கட்டத்தில் அமெரிக்க நாட்டிற்குச் செல்வதற்காக அவர் தனது தாய்நாட்டை கைவிட்டது ஏன்? அவரிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்ட போது, தனது மனைவியின் மீது பழி சுமத்தினார். அதாவது, ''நான் அதனைச் செய்ய விரும்பவில்லை. எனது மனைவியே அவ்வாறு செய்யுமாறு தூண்டினார்.''

தனது மனைவி அப்படிக் கூறியதாக இவர் தெரிவித்த கருத்தானது 'இறுதியில் அயோமா தான் விரும்பியதை சாதித்துக் கொண்டார்' என்பதாக ஒரு கட்டுரைக்கு தலையங்கமும் தீட்டப்பட்டிருந்தது. கோட்டாபயவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு நேர்காணலைத் தழுவி எழுதப்பட்டிருந்த இந்தக் கட்டுரை கோட்டாபய ராஜபக்ஷவின் களங்கமற்ற நிலையையும், அயோமாவின் குற்ற உணர்வையும் வாசகர்களை நம்ப வைக்கும் விதத்தில் விரிவான விளக்கங்களைக் கொண்டுள்ளது.

லெப்டினன்ட் கேர்ணல் ராஜபக்ஷ இறுதியில் தனது மனைவியின் வேண்டுகோளுக்கு அடிபணிந்து, இராணுவத்திலிருந்து விலகிச் செல்வதற்கு தீர்மானித்த பொழுது இராணுவத்திலிருந்த அநேகமானவர்கள் அவர் தனது முடிவை மாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன வெலிஓயாவிற்கு விமானத்தில் சென்று, நேரடி இராணுவச் செயற்பாடுகளிலிருந்த லெப்டினன்ட் கேர்ணல் ராஜபக்ஷவுக்கு இடமாற்றமொன்றை வழங்குவதற்கும் முன்வந்தார். அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று நாட்டிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு திட்டமிட்டுக் கொண்டிருந்த லெப்டினன்ட் கேர்ணல் ராஜபக்ஷ ''தனது படையணி எங்கெல்லாம் பணியில் அமர்த்தப்படுகிறதோ அங்கங்கெல்லாம் அந்தப் படையணியுடன் சேர்ந்து செயற்படவே தான் விரும்புவதாகக்'' கூறியிருந்தார்.

அமைச்சர் விஜேரத்ன இந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு நிலையைத் தெளிவாகக் கண்டு கொண்டார். அவர் லெப்டினன்ட் கேர்ணல் ராஜபக்ஷவை கொத்தலாவல பாதுகாப்பு கல்விக் கழகத்தின் பிரதிக் கமாண்டராக நியமனம் செய்தார். (அப்போது அவருடைய படையணி எங்கிருந்தது என அந்தக் கட்டுரையில் சொல்லப்பட்டிருக்கவில்லை.) அமைச்சர் விஜேரத்ன கொழும்பு நகரில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் கொல்லப்பட்ட பொழுது, லெப்டினன்ட் கேர்ணல் ராஜபக்ஷ இந்தப் பதவியிலேயே பாதுகாப்பாக இருந்து வந்தார்.

''அமைச்சர் விஜேரத்ன அவர்களின் கொலையை அடுத்து லெப்டினன் கேர்ணல் ராஜபக்ஷ ஓய்வு பெறுவதற்கான தனது ஆவணங்களை அனுப்பி வைத்தார்'' என அக் கட்டுரை குறிப்பிடுகின்றது.


இந்த நீண்ட கதையில் துணைப் பாத்திரங்களை வகித்து வந்த லெப்டினன் கேர்ணல் ராஜபக்ஷவின் பல மூத்த மேலதிகாரிகளின் பெயர்களையும் அக்கட்டுரை குறிப்பிடுகின்றது. கலிபோர்னியாவின் பாதுகாப்பான சூழலில் கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமையைப் பெறுவதற்கான பயணத்தில் ஈடுபட்டிருந்த போது, அவருடைய மூத்த சகாக்களில் பலர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் கொல்லப்பட்டார்கள்.

தனது பெயருக்கு பின்னால் பல பட்டங்களை சூட்டி, தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷவின் செயல், அவரால் கொழும்பு நகரம் அலங்கரிக்கப்பட்டதைப் போல ஒரு மேல்பூச்சான விடயம் மட்டுமே ஆகும். வெறும் வண்ணங்கள் மீது மட்டுமே கவனம் செலுத்தப்பட்டது. வண்ணக் கலவை ஒரு மினுமினுப்பைக் காட்டுவதற்காக அங்குமிங்கும்ள தூவிவிடப்பட்டது. இதன் இறுதிப் பெறுபேறு அந்தப் பிரகாசத்திற்கு அடியில் மறைந்திருக்கின்றது: ஆள் அதே ஆள்தான்.

Daily FT நாளிதழின் மூத்த ஆசிரியர் மேரியன் டேவிட் பொது இடங்களில் பெண்கள் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்த பொழுது, அவரை கோட்டாபய நாட்டு குடி மக்கள் டுவிட்டரில் திட்டித் தீர்த்தார்கள். திருமதி டேவிட் உலகின் கண்களுக்கு முன்னால் இலங்கையை அசிங்கப்படுத்துவதாகவும், சுற்றுலாத்துறையின் மீட்சிக்கு இடையூறு விளைவித்து வருவதாகவும் வியத்மக ஆட்கள் அவர் மீது குற்றம் சாட்டினார்கள். கோட்டாபய ராஜபக்ஷவின் கையாள்களில் ஒருவரான ஓய்வு பெற்ற அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம திருமதி டேவிட்டிடம் இப்படிக் கூறினார். ''தயவு செய்து இந்த நாட்டை விட்டுச் சென்று விடுங்கள்! இது உங்களுக்குச் சொந்தமான இடம் அல்ல.''

விஜேவிக்கிரமவின் இந்தப் பேச்சு கோட்டாபய ராஜபக்ஷவின் மற்றொரு (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆறு வருடங்களில் எதுவும் செய்யாத மஹிந்த குடும்பத்தினர் மீண்டும் ஆட்சிக் கட்டிலைக் கைப்பற்றி ஆறு மாதங்களில் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவார் என்பது எவ்வளவு வினோதமான கனவு என்பதை டக்ளஸ் தேவானந்தா நன்கு தெரிந்து வைத்திருப்பார். ஆனாலும் என்ன, அந்தக் குடும்ப ஆட்சிக்குக் குடைபிடித்தால் மீளவும் ஓர் உயர்ப் பதவி நிலை தமக்குக் கிடைக்கும் என்ற நப்பாசையில் இப்படி மாயா ஜாலம் காட்டுகிறார் அவர்.

### தேர்தல் திருவிழாவுக்காக

# கோமா நிலையிலிருந்து மீண்டும் வரும் அரசியல்வாதிகள்

• ஸாஹிப் மரிக்கார்

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்து ஐந்தாண்டுகள் நிறைவடைவதற்கு வெறும் நான்கு மாதங்கள் எஞ்சியுள்ள நிலையில், நாடு மற்றொரு தேர்தலை எதிர்நோக்கியுள்ளது. நான்கரை ஆண்டுகளாக மக்கள் நலப் பணிகளிலோ மூலோபாயமிக்க அபிவிருத்தித் திட்டங்களிலோ நிலையான கவனம் குவிக்காத அரசியல்வாதிகள், நான்கரை வருட கோமா நிலையிலிருந்து கண்விழித்துள்ளனர்.

நாடு முழுவதும் அபிவிருத்திச் சூறாவளி எகிறி வீசுகிறது. பாடசாலைகளா, பல்கலைக்கழக கட்டடங்களா, மத ஆலயங்களா, திறப்பு விழாக்கள், கூட்டங்கள் என்று தேர்தல் திருவிழா களைகட்டத் தொடங்கியுள்ளது. நான்கரை ஆண்டுகள் சட்டம் ஒழுங்கைப் பேணி வந்த அரசாங்கம் இன்று மக்கள் நல அரசாக மறுபிறவி எடுத்துள்ளது.

ஆளும் கட்சி மட்டுமன்றி, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தவின் பொதுஜன பெரமுனவும் தேசிய பாதுகாப்பிலும் அரசியல் தீர்விலும் பொருளாதார அபிவிருத்தியிலும் முழுக் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. கோத்தாபயவின் உருவப் படம் பொறிக்கப்பட்ட நடுத்தரமானதும் பிரமாண்டமானதுமான 'கட்அவுட்கள்' கொழும்பு-கண்டி பிரதான பாதை, மாத்தறை-கொழும்பு பிரதான பாதை, குருநாகல்-கண்டி பிரதான பாதை இரு மருங்குகளிலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

2018 இன் இறுதிப் பகுதியில் தொடங்கி 2019 ஆகஸ்ட் 31 இற்குள் முடிவுறுத்தப்பட்ட கம்பெரலிய அபிவிருத்தித் திட்டம் குறித்து பிரதமர் ரணிலின் எக்களிப்பு வேறு. கிராமிய எழுச்சி குறித்து மேட்டுக்குடி பாரம்பரியத்தில் வந்த பிரதமர் பொரிகிளப்பி வருகிறார்.

கிழக்கின் முன்னாள் ஆளுநர் வரதராஜப் பெருமாள் சொன்னது போன்று கம்பெரலிய என்பது அடுத்த தேர்தலை ஒட்டி வாக்காளர்களுக்கு முன்கூட்டியே வழங்கப்படும் மாபெரும் லஞ்சமாகவே தோன்றுகிறது. நாட்டில் தரமான உட்கட்டமைப்பினை மேம்படுத்தல், மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல், பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தல் போன்ற நோக்கங்களுடன் கம்பெரலிய எனப்படும் துரித கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டம் 2018 இன் இறுதியில் ஆரம்பமானது.

2019 ஆம் ஆண்டு கம்பெரிலிய கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் நலன்புரி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டப் பணிகளுக்காக தேர்தல் தொகுதி ஒன்றுக்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 2019 ஆகஸ்ட் 31 இற்குள் திட்டத்தை அவரசமாக நிறைவுக்குக் கொண்டு வருமாறு திரைசேரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்தது.

மிக அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் அரசியல் உள்நோக்கம் என்ன? வெளிப்படையாக கிராமிய மக்களின் முன்னேற்றத்திற்கு இது வகை செய்த போதும், அரசியல்வாதிகளுக்கு தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் உள்ளது. தேர்தலுக்கு சற்று முன்னர் மக்கள் மனங்களில் கட்சி பக்தியை உருவாக்கி, வாக்குகளை வேட்டையாடுவதுதான் நமது அரசியல்வாதிகளின் ஒரே குறிக்கோள். அதனால்தான் நான்கரை ஆண்டுகளாகப் பிறக்காத அபிவிருத்தி ஞானம் இறுதி ஆறு மாதத்திற்குள் பிறந்திருக்கிறது.

ஆக, வாக்குகளுக்கு வழங்கப்படும் இத்தகைய லஞ்சத்தின் பக்க விளைவுகள் பல. அவரசரமாக ஒப்பேற்றும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இத்திட்டங்களால் அதிகபட்ச இலாபமடைவது கொந்தராத்துக்காரர்களே. கட்டப்படும் பாலங்களோ, அமைக்கப்படும் வீதிகளோ ஒதுக்கப்படும் பணத்தின் அளவுக்கு தரம் வாய்ந்ததாக அமைவதில்லை. எதிர்வரும் ஒரு சில மாதங்களில் அவற்றில் வெடிப்புக்கள் விழும். பாவனைக்கு லாயிக்கற்றதாய் மாறும். கொந்த ராத்துக்காரர்கள் புகுந்து விளையாடும் கேள்விப் பத்திரங்களே அன்றாடம் பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

உண்மையான மக்கள் நலனை இலக்காக வைத்து மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் காலத்தால் நீடிக்கக் கூடியவை. ஆனால், கம்பெரலியவின் கீழ் உருவாக்கப்படும் கட்டுமானங்களும் கட்டடங்களும் இன்னும் சில வருடங்களில் காரைபெயர்ந்து பல்லிழித்து நிற்கப்போகின்றன என்பதில் சந்தேகமில்லை.

தேர்தல் வேகம் அபிவிருத்தி விவேகத்தைக் குறைத்து விடுகின்றது. மக்கள் நலப் பணிகளில் அரசியல் வாதிகளுக்கு தன்னியல்பான ஆர்வமோ திட்டங்களோ இல்லை என்பதையே இது உணர்த்துகின்றது. வெளிநாடுகளிலிருந்து பெறும் கடனில் ஒரு தொகையைச் சுருட்டிக் கொண்டு மற்றதை இத்தகைய துரித அபிவிருத்திப் பணிகளில் கொட்டி கொந்தராத்துக்காரர்களையும் மாவட்ட, பிராந்திய கட்சி அமைப்பாளர்களையும் திருப்திப்படுத்துவதே அரசாங்கங்களின் குறிக்கோளாக இருக்கின்றது.

ஒரு தேசிய பொருளாதாரக் கொள்கையோ திட்டமிடலோ அரசியல் தூரதரிசனமோ இல்லாத, ஐந்து வருடங்களுக்குக் காலத்தை இழுத்தடிக்கும் அரசாங்கங்கள் தேர்தலுக்கான ஒரு பொறிமுறையாகவே இதுபோன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன. எதிர்கால நோக்கும் மக்கள் நலப் பார்வையும் கொண்ட இனவாதமற்ற பரந்துபட்ட நோக்குக் கொண்ட ஓர் அரசியல்வாதி இதற்குப் பின்னர்தான் பிறந்து வர வேண்டும் என்று மக்கள் எண்ணும் அளவுக்கு நமது அரசியல் களம் நெறி கெட்டுப் போயுள்ளது.

தேர்தல் காலங்களில் எத்தனை வாக்குறுதிகள், எத்தனை ஆசை வார்த்தைகள், எத்தனை ஒப்பந்தங்கள், எத்தனை கொடுக்கல்-வாங்கல்கள். இவற்றை நோக்கும்போது அதிகாரம் எவ்வளவு சுவையானது என்பதையும் மக்கள் எவ்வளவு மடையர்கள் என்பதையுமே இலகுவில் புரிந்துகொள்ள முடிகின்றது.

நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு வழக்குகளை எதிர்கொண்டுள்ள ஒரு ஜனாதிபதி வேட்பாளர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அறைகூவல் விடுத்துள்ளார். தமது ஆட்சியில் அத்தகைய விசாரணையே நடத்தப்படும் என்று கார்டினல் மெல்கம் ரஞ்சித்தை அரவணைத்துக் கொள்ளும் அந்த வேட்பாளர் அமெரிக்க நீதிமன்றத்தில் தனக்கு எதிராக லசந்தவின் மகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் ராஜதந்திர சலுகையை எதிர்பார்த்துள்ளதாகவும் கூறியுள்ளார். இதில் எத்தனை முரண்பாடுகள்?

இது குறித்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தனியான ஒரு அறிக்கையையே வெளியிட்டுள்ளது. எமது ஆட்சியில் சுயாதீன விசாரணை முன்னெடுக்கப்படும். கடமையைத் தவற விட்ட அனைவரும் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவர் என கடந்த 26-08-2019 இல் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய அறிவித்துள்ளார். அந்த அறிக்கை பின்வருமாறு நீள்கிறது.

“உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் கத்தோலிக்க ஆயர்கள் சபை மற்றும் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் வெளியிட்ட அறிக்கை குறித்து கவனம் செலுத்தினேன். முழு நாடும் கவலை கொள்ளும் நிலையில் இடம்பெற்ற இத்தாக்குதலினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி வழங்கப்படாமையினால் மனம் வருந்திய நிலையில் பேராயர் அத்தகைய கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள், பின்னணியிலிருந்து சூழ்ச்சி செய்தவர்கள், அமைப்புகள், அதற்கு அனுசரணை வழங்கியவர்கள், தாக்குதலைத் தடுக்காது கடமையைத் துஷ்பிரயோகம் செய்தவர்கள், சந்தேக நபர்களை கைதுசெய்யாத நிலை, தண்டிக்கப்பட வேண்டியவர்கள் விடுவிக்கப்பட்டமை போன்ற நிலைமைகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் சுயாதீனமான அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன்.



திஸ்ஸ விதாரண



டக்ளஸ் தேவானந்தா

அதேபோன்று எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல் இடம்பெறாத வகையில் பாதுகாப்பான நாடாக இலங்கையை மாற்றுவேன். பேராயரின் சுயாதீன ஆணைக்குழுவொன்றை உருவாக்குவதற்கான கோரிக்கை நியாயமானது. இது எமது அரசாங்கத்தில் நிறைவேற்றப்படும். அதேபோன்று பயங்ரகவாதம் மற்றும் அடிப்படைவாதமற்ற நாடாகவும் இலங்கையை மாற்றுவேன். இந்நாட்டில் அச்சமற்ற சூழலொன்றை உருவாக்குவேன் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் ஒவ்வொரு வாசகமும் எவ்வளவோ பொருள் செறிந்தது. கருத்தாழமிக்கது. நமது உள்ளுணர்வை உசுப்பக் கூடியது மனங்களை வென்று வாக்குகளை அளிக்கச் செய்ய வல்லது. ஆனால், இது யாரிடமிருந்து, எங்கிருந்து வருகின்றது என்பதுதான் மிகுந்த கவலைக்கிடமானது.

மஹிந்தவின் பத்தாண்டு கால ஆட்சியில் சுயாதீன விசாரணை ஏதேனும் நடந்ததா? கடமையைத் தவறவிட்டவர்கள் தண்டிக்கப்பட்டார்களா? அடிமட்டத்தைச் சேர்ந்த அப்பாவி மக்களுக்கு நீதி கிடைத்ததா? அதிகாரத் துஷ்பிரயோகிகளும் சூழ்ச்சிக்காரர்களும் சட்டத்தின் பிடியில் சிக்கினரா? குடிநீர் கேட்ட அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிகள் திருப்பப்பட்டன. வெள்ளாடை அணிந்த மாணவர்களை வெள்ளை வேன் துரத்தியது. போரை முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம் அச்சமின்றி வாழக் கூடிய சூழலை உருவாக்கினோம் என்று கூறுவதில் ஓரளவு உண்மை உள்ளது. ஆனால், வெள்ளை வேன்களால், கிரீஸ் பூதங்களால் மக்களின் உள்ளங்களில் மீளவும் அச்சம் விதைக்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள் ஒடுக்கப்பட்டதன் மூலம், கொல்லப்பட்டதன் மூலம் அச்சம் விதைக்கப்பட்டது. எல்லா ஆட்சியாளர்களின் காலத்திலும் இதுபோன்ற குற்றங்கள் நிகழ்ந்தே உள்ளன. ஆக, புதிய சுடலை ஞானம் அதிகார அடுப்பங்கரைக்கு வரும் வரைதான். ஆற்றைக் கடக்கும்வரை அண்ணன் தம்பி என்று அணைத்துக் கொள்வதும் கடந்ததன் பின்னர் காலால் உதைப்பதும் அரசியல்வாதிகளுக்கு ஒன்றும் புதிதல்ல.

நடப்பு அரசாங்கத்தின் செயற்பாடுகளை பேராயர் தனது நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தி தோலுரித்துள்ளார். பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகளிலோ ஜனாதிபதி மைத்திரி பாலவின் ஆணைக்குழு அறிக்கையிலோ தனக்கு நம்பிக்கையில்லை என்பதை வெளிப்படுத்தி அனைத்துமே அரசியல் மயமாக்கப்பட்டுள்ளதை அம்பலப்படுத்தி விட்டார் மெல்கம்.

கடந்த வாரம் பேராசிரியர் திஸ்ஸ விதாரன யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்து பல்வேறு கோணங்களிலிருந்தும் விவாதிக்கப்படுகின்றது. கோத்தாபய ஜனாதிபதியானால் அவருக்கு வீணாக அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில், அதிகாரம் அவரிடம் இருக்காது என்று மாக்சிஸ கம்யூனிச இடதுசாரி எனப் புகழப்படும் பேராசிரியர் தமிழ் மக்களைக் கேட்டுள்ளார்.

அவரது வார்த்தையில் சொல்வதாயின், ''ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் கோட்டபய ராஜபக்ஷ 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பேரளவில் அதிகாரம் கொண்டவராகவே இருப்பார். பாதுகாப்பு அமைச்சுக் கூட அவரிடம் இருக்காது. முழுமையான அதிகாரம் பிரதமராக வரும் மஹிந்த ராஜபக்ஷவிடமே இருக்கும். எனவே கோட்டாபய ராஜபக்ஷ குறித்து வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை'' (26-08-2019) என்பது அவர் வாதம்.

திஸ்ஸ விதாரண மீது மக்களிடமுள்ள நல்லபிப்பிராயத்தை கீழே போட்டு மிதித்துக் கொண்டே அவரது மஹிந்த வாசகத்தை நோக்க வேண்டியுள்ளது. அவர் ராஜபக்ஷ குடும்பத்திற்கு வடக்கிலும் கிழக்கிலும் வாழும் சிறுபான்மை மக்கள், குறிப்பாக, தமிழர்கள் அஞ்சுவது நியாயமானதுதான் என்பதை ஏற்றுக் கொண்டு, அவர்களை ஆசுவாசப்படுத்துவதற்கே ஜனாதிபதியாக அவர் வந்தாலும் அதிகாரமற்றவராகவே இருப்பார் என்று கதை அளக்கின்றார். இன்னொரு புறம் காதில் பூச்செருகுகின்றார்.

இந்தக் கதையை அவரால் யாழ்ப்பாணத்தில் வேண்டுமானால் பேசலாம். எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் ஊடக அலுவலகத்தில் சிங்கள ஊடகவியலாளர்கள் மத்தியில் திஸ்ஸவினால் இப்படிப் பேச முடியுமா? ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத நிலையில், வெறும் பாதுகாப்புச் செயலாளராக விளங்கிய கோத்தாபய அவரது ஆட்சிக்காலத்தில் செய்தவற்றை சிறுபான்மை மக்கள் இலகுவில் மறந்து விட மாட்டார்கள். இந்நிலையில், மஹிந்தவே முழு அதிகாரத்தையும் கொண்டிருப்பார் என்பதால் கோட்டாபயவுக்கு தமிழர்கள் பயப்பட வேண்டியதில்லை என்று வெட்கம் கெட்ட நிலையில் அவர்களின் வாக்குகளுக்காக ஏங்கி நிற்கின்றார் ஓர் இடதுசாரித் தலைவர் என்பதுதான் கவலைக்கிடமானது.

அதிகாரத்தின் தெவிட்டாத சுவையை ருசித்த அரசியல் பூனைகள் அதிகாரத்தின் அடுப்பங்கரையை மீள மீள நாடிச் செல்வது ஒன்றும் அதிசயமல்ல. டக்ளஸ் தேவானந்தா கோட்டாபய ஜனாதிபதியானால் ஆறு மாதத்திற்குள் 13 முழுமையாக அமுலுக்கு வரும் என்று கூறியுள்ளார். 2019 ஆம் ஆண்டின் தேர்தலுக்கு முந்திய முதல் நகைச்சுவையாக இது பதியப்படப் போகின்றது. தேவானந்தா கூறுவது இறுதிப் பொய் அல்ல என்பதை வடக்குத் தமிழர்கள் நன்கு அறிவார்கள். டக்ளஸ் தனக்கான அதிகாரப் பாதையைத் தக்கவைத்துக் கொள்ள தமிழினம் அஞ்சும் ஒருவருக்கு அவர்களின் வாக்குகளைத் தாரைவார்ப்பதற்கு இப்படிப் போடுகிறார் ஜால்ரா.

2009 இல் போர் முடிவுக்கு வந்தது. போருக்குப் பின்னர் இலங்கையில் சிறுபான்மை என்று எவருமில்லை எனக் கூறிக் கொண்டே அதிகார விளையாட்டில் இறங்கினார் மஹிந்த. 2015 தேர்தலில் அவர் தோற்கடிக்கப்படுவரை அவருக்கு ஆறு ஆண்டுகள் இருந்தன. அந்த இடைவெளியில் நிதானித்துப் பார்த்து தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை முன்வைத்து ஏற்றுக் கொள்ளச் செய்யும் அதிகாரமும் அரசியல் ஆளுமையும் அப்போது அவரிடமிருந்தது. ஆறு ஆண்டுகள் அது குறித்து உருப்படியாக எதனையும் செய்யாது இரண்டாவது சிறுபான்மையான முஸ்லிம்களை ஒடுக்குவதற்கு அவர் கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருந்தார்.

ஆறு வருடங்களில் எதுவும் செய்யாத மஹிந்த குடும்பத்தினர் மீண்டும் ஆட்சிக் கட்டிலைக் கைப்பற்றி ஆறு மாதங்களில் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவார் என்பது எவ்வளவு வினோதமான கனவு என்பதை டக்ளஸ் தேவானந்தா நன்கு தெரிந்து வைத்திருப்பார். ஆனாலும் என்ன, அந்தக் குடும்ப ஆட்சிக்குக் குடைபிடித்தால் மீளவும் ஓர் உயர்ப் பதவி நிலை தமக்குக் கிடைக்கும் என்ற நப்பாசையில் இப்படி மாயா ஜாலம் காட்டுகிறார் அவர்.

தேர்தல் காலங்களில் தேசப்பற்று, தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, கல்வி மேம்பாடு என்றெல்லாம் பொறி பறக்க விளாசித் தள்ளும் எங்கள் அரசியல் தலைவர்கள் தேர்தலில் வெற்றி பெற்ற கையோடு அடுத்த தேர்தல் வரும் வரை கோமாவில் மூழ்கிக் கிடப்பதுதான் நமது தலைவிதி என்றால் இந்த நாடு எந்த வகையில் உருப்படப் போகின்றது. மக்கள் உணர்ச்சிவசப்படாமல் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய காலம் இது. தனிப்பட்ட பதவிகள், கட்சி நலன்கள், குடும்ப இலாபங்கள் அவற்றையெல்லாம் ஒரு புறம் வையுங்கள். நாடு முதன்மையானது என்ற இலக்குடன் தேர்தல் களத்தைப் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## சகவாழ்வை கட்டியெழுப்புவதில் சகல தரப்பினதும் ஒத்துழைப்பு அவசியம்

சகவாழ்வை கட்டியெழுப்புவதில் அரசியல் தலைமைகள், சமயத் தலைமைகள், ஊடகங்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட சகலரதும் ஒத்துழைப்பு அவசியம்.

ஆப்கானிஸ்தான் சோவியத் யூனியன் ஆளுகைக்கு எதிராக கிளர்ந்தெழுந்த போது அமெரிக்கா ஆப்கானிஸ்தானுக்கு உதவ முன்வந்தது. 'அல்காயிதா' அமைப்பை உருவாக்கத் தேவையான ஒத்துழைப்பையும் அமெரிக்கா வழங்கியது. டொனால்ட் ட்ரம்ப் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது ஐஎஸ்ஐஎஸ் அமைப்பை உருவாக்கியது பராக் ஒபாமா என்று தெரிவித்திருந்தார்.

இவ்விடயங்களிலிருந்து விளங்குவது யாதெனில் தமது முதலீடுகளை சுதந்திரமான முறையில் மேற்கொள்வதற்கான சுதந்திரம் ஒரு நாட்டில் இல்லாமல் போகின்ற போது உலக வல்லரச நாடுகள் ஒரு நாட்டின் ஆட்சியையே மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கும் என்பதாகும். எகிப்து, லிபியா, ஈராக், சிரியா போன்ற நாடுகளும் இத்தகைய நிலைக்கு முகம்கொடுத்தன. பலஸ்தீனில் ஆட்சிக்கு வந்த ஹமாஸ் தமக்கு அடிபணியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவ்வமைப்பு பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தப்பட்டது.

அத்துடன் உலகின் பலம் பொருந்திய ஊடகங்கள் மக்களுக்கு சிந்தித்து முடிவெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்காமல் 'ஹமாஸ் பயங்கரவாதிகள்' என அவைகளே தீர்ப்பு வழங்கின. ஊடக நிறுவனங்களினால் ஒலி, ஒளி பரப்பப்படுகின்ற தகவல்களை அவ்வாறே ஏற்றுக்கொள்ளாமல் விடயத்தை ஆராய்ந்து பார்த்ததன் பிறகே முடிவுகளுக்கு வரவேண்டும். இவ்வாறான நிலையில் குறிப்பாக எமது நாட்டிலும் ஊடகங்களும் அரசியல்வாதிகளும் இதையும் விட பொறுப்புடன் நடந்துகொள்வது மிக முக்கிய விடயமாக காணப்படுகின்றது. இதற்கு அரசியல் ரீதியில் மிகப்பெரும் அர்ப்பணிப்பும் சீரிய அரசியல் நோக்கமும் அவசியப்படுகிறது.

தற்போது எமக்கு மத்தியில் உருவாகியுள்ள அவநம்பிக்கை, சந்தேகம், அச்சம், பீதி என்பன இயல்பாக உருவானதல்ல. செயற்கைத்தனமாக உருவாக்கப்பட்டவையாகும். இந்நிலையை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுப்பது அரசியலினதும் சட்டத்தினதும் பொறுப்பாகும். பிரிவினைவாதக் கருத்துக்களை முன்வைப்போரை தராதரம் பாராது, எவ்வினத்தை சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களுக்கு சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

எனினும் அது இற்றை வரை சரியான முறையில் முன்னெடுக்கப்படவில்லை. இதன் மூலம் எம்மாலேயே இந்தக் கருத்துக்கள் பரவுவதற்கான களம் அமைக்கப்படுகிறது என்பது புலப்படுகிறது. எனினும் உலகின் ஏனைய நாடுகளில் இத்தகைய நிலைமைகள் இல்லை என்பதுடன் அவர்களுக்கு தேவையான தீர்வையும் சட்டத்திற்குள் கண்டுகொள்ள முடிகின்றது.

ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதலை தொடர்ந்து காதினல் மல்கம் ரஞ்சித் செயற்பட்ட விதம் எல்லோரதும் பாராட்டுக்களுக்கு உள்ளானது. இதனால் தீவிரவாதிகள் எதிர்பார்த்த மோதல் உருவாகாமல் தடுக்கப்பட்டது. ஏப்ரல் 21 தாக்குதல் காரணமாக ஏற்பட்ட வேதனைகள், கவலைகளுடன் எமக்கு மத்தியிலும் அம்முஸ்லிம் இளைஞர்கள் தொடர்பில் கோபமான எண்ணங்கள் உருவானது.

எனினும் காதினல் அவர்கள் இப்பிரச்சினையின் யதார்த்தத்தை புரிந்துகொண்டது மாத்திரமல்லாமல் அவர் ஆவேசமான முறையில் தீர்மானங்கள் எடுக்கவில்லை. பிரச்சினையின் ஆழத்தை புரிந்து தீர்மானம் எடுத்தார். மக்களையும் தெளிவூட்டினார். இதுவே சரியான மார்க்கத் தலைமைத்துவம். இதுவே நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய முன்மாதிரியாகும்.

எமக்கு மத்தியில் சகவாழ்வை கட்டியெழுப்புவதில் அரசியல் தலைமைகள், சமயத் தலைமைகள், ஊடகங்கள், கல்வியலாளர்கள், அறிவுஜீவிகள் போன்ற சகலரதும் அர்ப்பணிப்பும் தியாகமும் ஒத்துழைப்பும் அவசியம். 'அநீதிக்கு எதிராக கிளர்ந்தெழுங்கள், (அது) உமது பெற்றோருக்கு எதிரானதாக இருந்தாலும், உமது உறவினருக்கு எதிரானதான இருந்தாலும், உமது நண்பர்களுக்கு எதிரானதாக இருந்தாலும் சரியே, நீதி நியாயத்திற்காக கிளர்ந்தெழுங்கள்' என்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

அத்துடன் 'ஏதேனும் ஒரு செயலை செய்ததன் பிறகு கவலைப்பட நேரிடுமாயின் அத்தகைய செயல்களிலிருந்து விலகியிருப்பது நல்லது' என்பதாக தம்ம பதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து புலப்படுவது யாதெனில் எமது சமயங்கள் இதற்கு வழங்கியிருக்கும் பெறுமானங்கள் ஒன்றாகும் என்பது. இவ்வொற்றுமையை புரிந்து தீவிரவாத எண்ணங்களை விட்டும் விலகியிருக்கும் போது ஒரே குடும்பமாக நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கின்றது.

# இலங்கையின் கௌரவ நீதியரசர் உட்பட உயர்நீதிமன்ற அனைத்து நீதிபதிகளுக்கும் நாட்டின் நலன் கருதி முன்வைக்கும் மேன்முறையீடு

01. இந்த மேன்முறையீட்டின் உள்ளடக்கம் குறித்து இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது. பொது மக்களின் வாக்குகளால் நிறைவேற்று அதிகாரத்திற்காகவும், பாராளுமன்றத்திற்காகவும், மாகாண சபைகளுக்காகவும், பிரதேச சபைகளுக்காகவும் தெரிவாகின்ற மக்கள் பிரதி நிதிகள் மக்கள் தம் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை சிதைத்து சட்ட விரோதமாக அரச சொத்துக்களை கொள்வனவு செய்தல், அரசுடன் வியாபாரங்களை மேற்கொள்ளல், அரசின் டெண்டர் நடைமுறைகளை மீறி அவற்றின் ஊடாக பயன் பெற்றுக்கொள்ளல், தமது அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக சட்டத்திற்கு முரணான அடிப்படையில் அனுமதி பெற்றுக் கொள்ளல் போன்ற அடிப்படையில் நீண்ட காலமாக செயற்பட்டு வருகின்றனர்.

இந்த சட்ட விரோத செயற்பாடானது முழு அரசையும் ஊழலுக்கு உட்படுத்தல், அரசினால் ஈட்டப்படும் வருமானங்களின் அளவு குறைவடைதல், முழு சுற்றாடலும் பாதிப்புக்குள்ளாகுதல், நாடு வெளிநாட்டுக் கடன்களில் தங்கியிருக்க வேண்டிய வங்குரோத்து நிலைக்குள்ளாதல், சட்ட விரோத அனுசரணைகள் கிடைக்கப் பெறாத ஏனைய நடுநிலையான வியாபாரங்களின் முன்னேற்றத்திற்கு தடை ஏற்படல், நாட்டிற்கு பயன் தரக்கூடிய விதமான வெளிநாட்டு முதலீடுகளின் வருகை தடைப்படல், பொது மக்கள் மீது அதிக வரிச் சுமை சுமத்தப்படல். உழைப்புக்கான சந்தையை மந்தகரமாக மாற்றி தொழில் அற்றோர் தொகையை அதிகரித்தல், படித்தவர்கள் நாட்டைத் துறந்து செல்லல், வறியவர்கள் மேலும் மேலும் வறுமைக்குட்படுத்தப்படல், சட்ட வரையறைக்கு கட்டுப்படாத வியாபாரங்கள் உருவாகுதல், சட்டத்தின் ஆளுமை வலு குறைதல், அரசியலமைப்பு விகாரமாக்கப்படல், மக்கள் பிரநிதிகள் நியமிக்கப்படுவதன் நோக்கம் மற்றும் அவர்களிடம் இருக்க வேண்டியதான தன்மைகள் விகாரமாதல் என்ற அடிப்படையில் முழு இலங்கையும் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, சுற்றாடல் போன்ற அனைத்துத் துறைகளிலும் பின்நோக்கிச் செல்லும் நாடு என்பதாக உலக மக்கள் ஏற்றுக் கொள்ளும் தரப்படுத்தல்களின் ஊடாக அடையாளப்படுத்தப்படலாம் என்பதுடன், அதன் ஊடாக முழு இலங்கை வாழ் மக்களினதும் அடிப்படை உரிமைகள் கடுமையாக மீறப்படுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

02. பொதுமக்களின் சார்பாக முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினையை மக்களின் நலனை நோக்காகக் கொண்டு வழக்கு ஒன்றாக முன் வைக்காது, மக்கள் முறைப்பாடாக நாம் உயர் நீதிமன்றத்திற்கு முன்வைப்பது இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம் மற்றும் அதன் பாரதூரம் என்பவற்றை கருத்தில் கொண்டேயாகும். மேலும் இப்பிரச்சினையை கருத்தில் கொண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கான அதிகாரமும் இயலுமையும் உயர் நீதிமன்றத்தின் வசம் இருப்பதனால் உயர் நீதிமன்றத்தில் பூரண நம்பிக்கை வைத்து அவ்வாறு செயற்படுமாறு எமது வழக்கறிஞர்கள் வழிகாட்டியதுடன் அவ்வழிகாட்டல்கள் எமக்கு நம்பிக்கையை வழங்குவதாக இருந்ததுடன் அந்த வழிகாட்டல் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதனாலாகும்.

03. மக்களின் வாக்குகள் மூலமாக ஜனாதிபதியாக அல்லது பாராளுமான்றத்திற்காக தெரிவாகும் ஆட்சி அதிகாரத்தை தன்னகத்தே பெறுகின்ற எவரும் அரசாங்கத்துடன் வியாபார கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடக்கூடாது என்பது ஜனநாயக அடிப்படையில் சிந்திக்கும் எவரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு சித்தாந்தமாகக் குறிப்பிடலாம். இது தொடர்பில் அனைத்து ஜனநாயக நாடுகளிலும் கடுமையான சட்ட திட்டங்கள் காணப்படுவதுடன், இலங்கையிலும் 1977 ஆம் ஆண்டு வரையில் இது தொடர்பான கடுமையான கொள்கைகள் பின்பற்றப்பட்டன. 1977 ஆம் ஆண்டு முதல் இது தொடர்பான சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதை மந்தமாக்கும் அடிப்படையிலான நடைமுறையொன்று இன்றுவரை நிலவி வருகின்றது. அதன் காரணமாக மக்கள் பிரதிநிதிகளிடம் சட்டம் தொடர்பில் இருக்க வேண்டிய அச்சம் இல்லாமலாக்கப்பட்டு இந்த விடயம் தொடர்பிலான சட்டங்களை மீறும் நிலை பாரிய அளவில் இடம்பெறும் ஒரு விடயமாக உருவெடுத்துள்ளது.

04. பாரிய அதிகாரத்துடன் இயங்கும் மக்கள் பிரதிநிதிகளால் தம்மிடம் பொறுப்பளிக்கப்படும் பெறுமதியான பொதுச் சொத்துக்களை தங்களது குடும்பத்தவர்கள், தமது கட்சியின் அங்கத்தவர்கள், தமது உற்ற நண்பர்கள் ஆகியோருக்கு பெயரளவிலான விலைகளுக்கு விற்றுவிடும் ஊழலான முறையொன்று உருவாகியுள்ளது. இந்த முறையின் கீழ் மக்கள் பிரநிதிகளின் பெரும்பாலானவர்கள் அரசுடன் வியாபார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வியாபாரிகளாக மாறியுள்ளனர். அரச காணிகள், அரசு சார்ந்த டெண்டர்கள், அரசு சார்ந்த வியாபார அனுமதிப் பத்திரங்கள் போன்ற துறைகளிலேயே இந்த சட்ட விரோத செய[illegible]

05. மக்கள் பிரதிநிதிகள் அரசுடன் வியாபாரத்தில் ஈடுபடுவதானது சட்டவிரோதமான செயற்பாடாகக் கருத முடியும் என்றபோதிலும், 1977 ஆண்டு முதல் இன்று வரை அரச தலைவர்களும் பயன் அடையும் விதத்திலும் அவர்கள் அறிந்த நிலையில் பூரண அனுசரணையுடனுமே இடம் பெற்றுவருகின்ற செயற்பாடாகவே கருதப்பட வேண்டும்.

06. அது தொடர்பில் கீழ்வரும் உதாரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அ) ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன அவர்கள் தனக்குச் சொந்தமாக இருந்த கவனிப்பாரற்றுக் கிடந்த தென்னங் காணி ஒன்றை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு வழங்கி அந்த ஆணைக்குழு வசமிருந்த வளமான தென்னங் காணி ஒன்றை சொந்தமாக்கிக் கொண்டார். அத்துடன் குறித்த ஆணைக்குழுவுக்கு சொந்தமாக இருந்த பெறுமதியான கட்டிடங்களை பெயரளவு விலை ஒன்றில் கொள்வனவு செய்வதற்காக ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் தனது நெருங்கியவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங் கினார்.

இந்த செயற்பாட்டை முன்மாதிரியாகக் கொண்டு அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியினர், குறித்த ஆணைக்குழு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பன வசம் இருந்த காணிகளை தமது குடும்ப அங்கத்தவர்கள், கட்சியின் உறுப்பினர்கள், உற்ற நண்பர்கள் ஆகியோருக்கு பெயரளவில் குறிப்பிடும் விலைக்கு பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் அளித்தனர். இதன் மூலமாக மாத்திரம் ஏற்பட்ட நட்டம் டிரில்லியன் ரூபா அளவில் இருக்கலாம்.

ஆ) பொருளாதார அடிப்படையில் பாரிய பெறுமதிமிக்க சிக்கனமான வளமாகக் குறிப்பிடப்படும் தொலைக்காட்சி, வானொலி அலை வரிசைகள் ஒரு பொதுச் சொத்தாகக் கருதப்படுகின்றது. இந்த வளங்கள் மக்களின் பயன்பாட்டுக்காக மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பது உறுதிசெய்யப்படும் அடிப்படையில் பல்வேறு வகையான நிபந்தனைகளுக்கு உட்படுத்தி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யும் நடைமுறையொன்றையே ஜனநாயக நாடுகள் கடைப்பிடித்து வருகின்றன. அத்துடன் அவை பாரிய தொகைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியின் காலப்பகுதியிலிருந்து வானலைவரிசைகள் விற்பனை செய்யும் நடைமுறை ஆரம்பிக்கபடுகின்றது. அது தொடக்கம் இன்று வரை வானலைவரிசைகள் ஒரு பெயரளவு விலையிலேயே தமது நெறுங்கியவர் களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தமது நெறுங்கியவர்களுக்கு குறைந்த விலையில் விற்கப்படும் வானலை வரிசைகள் மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்தல் ஊடாக ஈட்டிய வருமானம் மிக விசாலமானது. இதன் ஊடாக அரசுக்கு கிடைக்காமல் போன வருமானம் நூறு பில்லியன் ரூபாவிலும் அதிகமாகும்.

இ) மதுபான விற்பனை நிலைய அனுமதிப் பத்திரம் என்பது பொதுவாக அரசாங்களுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு ஊடகமாகும். ஆனால் இலங்கையில் இவ்வாறு பெற்றுக் கொள்ள முடியுமான வருமானங்களை தடுக்கும் அமைப்பில் பெயரளவுப் பெறுமானத்திற்காகவே மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவே விற்பனை செய்யப்பட்டன. இதன் விளைவாக ஆளும் கட்சியின் உறுப்பினர்களில் அதிகமானவர்கள் நேரடியாக அல்லது வேறு விதமாக மதுபான உற்பத்தியில் ஈடுபடுவோராகினர். பாரிய அளவிலான மதுபான உற்பத்திச்சாலை உரிமையாளர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே காணப்படுகின்றனர். மீன் ஏற்றுமதி, மணல், கல், மண், மரம், போக்குவரத்து அனுமதிப் பத்திர உரிமையாளர்களும் மக்கள் பிரதி நிதிகளின் பட்டியலில் காணப்படுகின்றனர்.

07. 1977 ஆம் ஆண்டின் பின்னரான காலப் பகுதியில் கூட அரசுடன் வியாபார நடடிக்கைகளில் ஈடுபட்டதாகக் காரணம் காட்டி இரண்டு சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரின் (எல்பட் சில்வா, ராஜித சேனாரத்ன) பாராளுமன்ற உறுப்பினர் பதவி நீதிமன்றத்தி னால் நீக்கப்பட்டது. குறித்த நீதிமன்றத் தீர்ப்பு எழுதப்பட்டமை உலர்வதற்கு முன்னதாக வேறு முறைகளில் அவர்களுக்கு பாராளுமன்ற அங்கத்துவம் வழங்குவதற்கு அன்றைய தலைவர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர். பாராளு மன்ற உறுப்பினர் பதவி நீக்கப்பட்ட எல்பட் சில்வாவுக்கு துண்டு முறையின் அடிப்படையில் கும்புறுபிடிய தொகுதிக்கு நியமிப்பதற்காக ஜே.ஆர் ஜயவர்தன நடவடிக்கை மேற்கொண்டார். பாரளுமன்ற உறுப்பினர் பதவி துறந்த ராஜித சேனாரத்னவுக்கு ரணில் விக்ரமசிங்க மூலமாக தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்ற அங்கத்துவம் வழங்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட நாட்டின் அரசியல் தலைவர்கள் தயாராக இல்லை என்பதுடன், தமது சொத்துக்களை அதிகரித்துக் கொள்வதற்காக நடைமுறையில் இருக்கும் முறைமையைப் பாதுகாத்துக் கொள்வதே அவர்களது தலையாய நோக்கம் என்பதனை மேற்படி இரண்டு சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

08. நாட்டின் பொதுச் செத்துக்களின் தற்காலிக பொறுப்பாளர்களாக செயற்படும் மக்கள் பிரதிநிதிகளான ஆட்சியாளர்கள், தமது பொறுப்பிலிருக்கும் சொத்துக்களை முறையற்ற அமைப்பில் பயன்படுத்தல் காரணமாக அரசுக்கு நீண்ட காலமாகவே நட்டம் ஏற்பட்டு வந்துள்ளது. அதன் விளைவாக நாட்டின் வருமானம் குறை வடைந்து வெளிநாட்டுக் கடன்கள் மீது தங்கியிருக்க வேண்டிய நிலை உருவாவதுடன் நின்றுவிடாது, முழு அரசும் ஊழல் மயமாவ தற்குக் காரணமாகவும் அமைந்துள்ளது.

அதன் ஊடாக அரசியல் யாப்பின் 12 (1) ஏற்பாடுகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட விதத்தில் இந்த மேன்முறையீட்டில் கையொப்பமிடும் எம் அனைவரினதும் மட்டுமன்றி முழு நாட்டு மக்களினதும் அடிப்படை உரிமை கடுமையாகவும் தொடராகவும் மீறப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கின்றோம்.

09. இந்தப் பிரச்சினையின் ஆழ அகலம் மற்றும் அதனது முக்கியத்துவம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு,

அ) இது குறித்து நீதிமன்ற பரிசோதனை ஒன்றை ஆரம்பிக்குமாறும்,

ஆ) மக்கள் பிரதிநிதிகள், அவர்களாக அல்லது அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் மூலமாக அல்லது வேறு ஒருவர் மூலமாக அரசுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பிலும், சட்டத்திற்கு புரம்பாக அல்லது அரசுக்கு நட்டம் ஏற்படும் விதத்தில் அரச சொத்துக்களை அவர்களுக்கு வழங்குவது தொடர்பிலும், குறித்த காலப் பகுதிக்குள் அவசரமாக கணக்காய்வு ஒன்றை மேற்கொண்டு குறித்த தகவல்களை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளருக்கு கட்டளையிடுமாறும்,

இ) மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளில், விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள், விசாரணைகள் நிறைவுசெய்யப்பட்ட ஆனால் வழக்குத் தொடரப்படாத முறைப்பாடுகள் மற்றும் விசாரணை மேற்கொள்ளப்படாத முறைப்பாடுகள் குறித்து அறிக்கை ஒன்றை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு குறித்த ஆணைக் குழுவிற்கு கட்டளையிடுமாறும்,

ஈ) தேர்தல்களுக்கு வேட்பாளர் முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளும் போது வேட்பாளர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லது வேறு நபர்களால் ஊடாக அரசுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்பதாக உறுதிமொழி பெறுவதை கட்டாயமாக்குமாறு தேர்தல் ஆணை யாளருக்கு கட்டளையிடுமாறும்,

உ) சட்டத்திற்கு முரணாக அரசுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அல்லது அரச சொத்துக்களை தமது உடமையாக்கிக் கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்து அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமையை பொறுத்தமான காலப்பகுதிக்கு தடை செய்யுமாறும், குற்றவாளியான குறித்த நபர்கள் மூலமாக சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் கொடுக்கல் வாங்கல் ஊடாக அரசுக்கு ஏதும் நட்டம் ஏற்பட்டிருப்பின் அவை அவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்காக அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யுமாறு நீதிபதிக்கு உத்தரவிடுமாறும்,

ஊ) நீதிமன்றத்திற்கு புலப்படுகின்ற வேறு ஏதேனும் பொறுத்தமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்,

கீழே கையொப்பமிடும் நாம் அனைவரும் கௌரவ நீதியரசர்கள் உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இதில் சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன், தியாகடுவெ சோமானந்த தேரர், பொறியியலாளர் திலக் சில்வா, முன்னாள் கணக்காய்வாளர் மாயா துன்னே, Dr. ஸைபுல் இஸ்லாம், சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.எச்.எம். பழீல், பேராசிரியர் இஸ்மாயில் மௌஜூத், திரைப்பட இயக்குனர் அசோக ஹந்தகம, பராக்கிரம கிரயெல்ல, வணபிதா சரத் இத்தமல்கொட, பேராசிரியர் அன்டன் மீமன, பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஐ.எம். தௌபீக், பொறியியலாளர் குப்ரான் இஸ்மாயில், கலாநிதி நிமல் சந்திரசிரி, கலாநிதி ராஜன் ஹூல், முன்னாள் கல்விப் பணிப்பாளர் டி.எம்.பிரேமவர்தன, பொறியியலாளர் திலக் டி சில்வா, ஊடகவியலாளர் சீதா ரஞ்சனி, சிரேஷ்ட சட்டத்தரணி நீல் ராஜகருணா, திரைப்பட இயக்குனர் விமுக்தி ஜயசுந்தர, எழுத்தாளர் மஹிந்த ஹத்தக, ராவய பிரதம ஆசிரியர் விமலநாத் வீரரத்ன உட்பட 62 பேர் கைச்சாத்திட் டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

**தேசிய மக்கள் சக்தியை உருவாக்குவதற்கு அடிப்படையாய் அமைந்த காரணிகளை சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

முதலாவது எமது நாடு 71 வருடங்களாகப் பின்பற்றி வருகின்ற சமூக, பொருளாதார, அரசியல் கொள்கைகள் எமது நாட்டை அழிவின் விளிம்பிற்குத் தள்ளிவிட்டுள்ளது. இதனால் இக்கொள்கையை மாற்றியமைப்பது மிக முக்கிய விடயமாக மாறியிருக்கிறது. எல்லாத் துறைகளிலும் இதனை மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தில் மக்கள் உள்ளனர். இதற்காக வேண்டி அனைவருக்கும் ஒன்றுசேர முடியுமான நீண்ட கால நோக்கம் கொண்ட அமைப்பொன்று தேவைப்படுகிறது. இதற்கானதொரு அமைப்பாகவே நாம் தேசிய மக்கள் சக்தியை கட்டியெழுப்பினோம். எமது நாட்டின் இடதுசாரி அமைப்புக்கள், ஜனநாயக அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் அனைத்தினதும் மற்றும் பொது மக்களினதும் பிரார்த்தனையாக இருப்பது 71 வருட கால ஆட்சி முறையை மாற்றியமைப்பதாகும். எனவே இதற்கான மக்கள் சக்தியை அணிதிரட்ட வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது.

அதுவல்லாமல் தேசிய மக்கள் சக்தி தனியானதொரு சமூகத்தை மாத்திரம் குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் அமைப்பொன்றல்ல. இன்று எமது நாட்டில் பல அமைப்புக்கள் தனித்துவமான அரசியல் சுற்றுநிருபங்களை கையில் வைத்துக் கொண்டு செயற்படுகின்றன. முஸ்லிம் சமூகத்திற்குள் முஸ்லிம் இனவாத அரசியலில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் உள்ளன.

அதேபோன்று சிங்கள சமூகத்திலும் சிங்கள இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகளும் இயங்கி வருகின்றன. தமிழ் சமூகத்திலும் தமிழ் இனவாதக் கட்சிகள் செயற்பட்டு வருகின்றன. இதனால் இம்மக்களை தனித்தனியாக விளிப்பதற்கு இன வாத அரசியல்வாதிகள் காணப்படுகின்றனர். ஆனால் தேசிய மக்கள் சக்தி என்பது இம்மூன்று சமுதாயங்களையும் பற்றிப் பேசுகின்ற ஒரே மக்கள் அமைப்பாகக் காணப்படுகின்றது.

எமக்குத் தேவையில்லை. அதனால் இச்சகல மக்களினதும் பங்குபற்றலுடன் ஆட்சி முறையொன்றை உருவாக்குவது எப்படி என்பதே எமது முதன்மையான விடயமாகும். எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு அரசியல் தீர்வை வழங்குவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். அது என்னாலோ அல்லது இன்னுமொரு அமைப்பினால் தயாரிக்கப்பட்ட தீர்வொன்றாக அல்லாமல் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலின் மூலம் இதற்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும் என நான் நினைக்கிறேன்.

# பிரதான கட்சிகள் எந்த வேட்பாளரை நிறுத்தினாலும் நாட்டிற்கு எவ்விதப் பலனும் கிட்டப்போவதில்லை



## அநுரகுமார திசாநாயக்க

ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளர்

**தேசிய மக்கள் சக்தியை இன்னும் பலப்படுத்துவதற்கு நீங்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் என்ன?**

குறிப்பாக நாம் இன்னுமுள்ள சிவில் சமூக அமைப்புகள், அரசியல் அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதுபோன்று நான் நினைக்கிறேன் அரசியல் தலைவர்களுடன் அரசியல் மேடைகளில் ஏறி கைகளை கட்டிக்கொண்டு 'நாம் நண்பர்கள், நாம் நண்பர்கள்' என்று கூறுவதால் மக்கள் அமைப்பு உருவாகப்போவதில்லை. பொது மக்களை இதில் பங்குகொள்ளச் செய்வதன் மூலம் மாத்திரமே ஒரு பலமான மக்கள் சக்தியைக் கட்டியெழுப்ப முடிகின்றது. அதனால் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு போன்ற சகல பகுதிகளிலும் உள்ள மக்களை இவ்வமைப்பில் பங்கு கொள்ளச் செய்வதே எமது நோக்கமாகும்.

மக்களை ஒன்று திரட்டாமல் பெரிய கூட்டணிகளை உருவாக்குவதில் எவ்விதப் பலனுமில்லை. எனவே இவ்வமைப்பை சூழ மக்களை இன்னுமின்னும் அணிதிரட்டும் நடவடிக்கைகளை தற்பொழுது நாம் பரவலாக முன்னெடுத்து வருகிறோம்.

**இலங்கை அரசியலில் பெரும்பான்மை இனத்தின் வாக்குகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் போக்கு நடைமுறையில் உள்ளது. இவ்வடிப்படையில் பெரும்பான்மையின் வாக்குகளைப் பெறுவதற்கு தேசிய மக்கள் சக்தி முன்வைத்திருக்கும் திட்டங்கள் குறித்து சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை தனித்தனியாக வெற்றிகொள்ளும் போராட்டம் எம்மிடம் கிடையாது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களாகிய நாம் எல்லோரும் இப்பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்திருக்கிறோம். தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள் தங்களது விவசாய உற்பத்திகளை (கிழங்கு உற்பத்தி) சரியான விலைக்கு விற்றுக் கொள்ள முடியாத பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருகின்றனர். வாழ்க்கையை முன்னெடுப்பதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர். எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த மக்களது சுகாதார உரிமைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இன்று எல்லா மக்களும் கல்விக்காக வேண்டி அதிக பணத்தைச் செலவிட நேர்ந்துள்ளது. பல்வேறு நிவாரணங்களும் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்நாட்டில் அநேகவிதமான பிரச்சினைகளை எதிர்நோக்கிக்கொண்டுள்ள மக்களுக்கு இதை விட நல்லதொரு சமூக வாழ்க்கையை பெற்றுக்கொடுப்பதே எமது வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். அத்துடன் எமது நாட்டிலுள்ள இதர சமூகங்களும் ஏதேனும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளார்கள் எனில் அப்பிரச்சினைகளையும் தீர்த்து அவர்களுக்கு நீதியான முறையில் வாழ்வதற்கான உரிமையை பெற்றுக்கொடுப்பதும் எமது குறிக்கோளாகும்.

**இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தல் தொடர்பாக நீங்கள் முன்வைக்கும் திட்டங்கள் என்ன?**

நாட்டின் பொருளாதாரம் ஐம்பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளது. ஒன்று கடன் நெருக்கடி, இரண்டாவது ஏற்றுமதி இறக்குமதிச் சந்தை நெருக்கடி, மூன்றாவது உற்பத்திகளின் வீழ்ச்சி, நான்காவது, அரசின் வருமானம் குறைந்திருப்பது, ஐந்தாவது, வருமானம் பிரிந்து செல்வதில் காணப்படும் பிரச்சினை. இதனால் இவ் ஐம்பெரும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான பொருளாதாரத் திட்டமே எமக்கு அவசியப்படுகின்றது.

இங்கு கடன் நெருக்கடியை நோக்கும்போது, கடன் பெறுதல் என்பது கூடாத விடயமொன்றல்ல. உலக நாடுகள் இரண்டு குறிக்கோள்களின் அடிப்படையில் கடன் பெறுகின்றன. ஒன்று, எமக்கு அவசியமான முதலீட்டுத் தேவைகளை நிறைவுசெய்துகொள்வதற்கு, இரண்டு எமக்குத் தேவையான தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொள்வதற்கு. நாம் பெற்றுக்கொண்ட கடனுக்கு உரிய சொத்துக்கள் உருவாகாமையே கடன் நெருக்கடிக்கு பிரதான காரணமாகும். தேவையான வளங்களை நாம் உருவாக்கவில்லை. வீண்விரயமான, தூரநோக்கற்ற திட்டங்களுக்கு கடன் தொகைகள் பயன்படுத்தப்பட்டமையே அது பெரும் சுமையாக மாறுவதற்கு காரணமாய் அமைந்திருக்கிறது.

இதனால் இக்கடன் பொறியிலிருந்து விடுதலையாவதற்கு சில வழிமுறைகள் உள்ளன. அதில் ஒரு விடயமாக கடன் பெற்று நன்கு பிரயோசமான இலாபங்களைப் பெறக்கூடிய திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலமே பழைய கடன்களையும் புதிய கடன்களையும் அடைக்க முடிகிறது. இதனால் யாராவது நாளைய தினம் ஆட்சிக்கு வந்ததன் பிறகு கடன் பெறுவதில்லை எனக் கூறினால் அவ்வாறு கடன் பெறாமல் முன்னகர முடியாத நிலைக்கு எமது நாடு தள்ளப்பட்டுள்ளது. ஆனால் நல்ல பிரயோசனமிக்க திட்டங்களுக்குக் கடன் தொகைகள் பயன்படுத்தப்படுமாக இருந்தால் மாத்திரமே இந்தக் கடன் நெருக்கடியிலிருந்து கரை சேர முடியும். எனவே கடனிலிருந்து விடுதலையாவதற்கு நீண்ட காலத் திட்டமொன்று எமக்குத் தேவைப்படுகின்றது. அந்தத் திட்டத்தையே நாம் தேசிய மக்கள் சக்திக்கூடாக முன்வைத்திருக்கிறோம்.

**தமிழ் மக்கள் முகம்கொடுத்துள்ள அரசியல் பிரச்சினைக்கு வழங்கக் கூடிய நிரந்தரத் தீர்வு எதுவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

எமது நாட்டிலுள்ள சகல மக்களினதும் அடிப்படையான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என நாம் நம்புகிறோம். அவர்களது பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். சகல இன மக்களும் தாம் பேசுகின்ற மொழி, தாம் பின்பற்றுகின்ற சமயம், தமது கலாசார அடையாளங்களுடன் கூடியதான சம உரிமைகளுடன் வாழக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும். இதற்குள்ளாலேயே நாம் வடக்கின் பிரச்சினையையும் நோக்க வேண்டும். சகல இனமக்களும் அரசியலில் பங்காளர்களாக மாற வேண்டும். அப்போதே வடக்கின் பிரச்சினை எமது பிரச்சினையாகத் தென்படும். அதுவல்லாமல் [illegible] அதிகாரத்திலிருந்து தூரமாக்கின்ற [illegible]

**அரபு மத்ரசாக்களுக்கான மாணவர்களை 16 வயதில் இணைத்துக்கொள்ள வேண்டும், குறைந்த வயது திருமணம் மற்றும் LGBT தொடர்பாக ஜேவிபி முன்வைத்துள்ள சில கருத்துக்கள் இன்று சமூக வலைத் தளங்களில் விமர்சிக்கப்பட்டு வருகின்றன. தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கும் முஸ்லிம்களுக்கு எதிராக இருக்கும் முஸ்லிம்கள் இந்தக் குற்றச்சாட் டுக்களை முன்வைக்கின்றனர். இது தொடர்பாக நீங்கள் அவர்களுக்கு வழங்கும் பதில் என்ன?**

நாட்டில் ஒரு பொதுவான சட்டமுள்ளது. அது போன்று அந்தந்த நாடுகளின் கலாசாரங்களுக்கு அமைவான பண்பாடுகளும் பழக்க வழக்கங்களும் சட்டங்களும் உள்ளன. எனினும் எமது நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றால் எமக்கு மத்தியில் வேறுபாடுகள், வித்தியாசங்களை ஏற்படுத்துவதன் மூலமல்ல. ஒன்றுபட்டு எல்லோரையும் அரவணைத்துச் செல்வதன் மூலமாகும்.

எல்லா சமயங்களுக்கும் அந்தந்த சமயங்களைப் பின்பற்றுபவர்களுக்கு அந்தச் சமயத்தை பற்றி சரியான முறையில் போதிக்கின்ற உரிமையுள்ளது. இம்மதங்கள் குறித்து சரியான விளக்கங்களை அம்மக்களுக்கு வழக்க முடியாமல் போயிருப்பதன் மூலம் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெற்றிருக்கிறது. நாடெனும் வகையில் ஒன்றாக நாம் முன்னோக்கிச் செல்கையில் எமக்கு மத்தியில் பொதுவான சட்டம் காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பெரும்பாலானவர்கள் உள்ளனர் என்பதையும் நாம் மறுக்கக்கூடாது.

**2015 ஜனவரி 8ஆம் திகதி இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு கடந்த ராஜபக்ஷ ஆட்சியை தோற்கடித்தது போன்று தேசிய மக்கள் சக்தியாலும் ஒரு மாற்றத்தை இம்முறை ஏற்படுத்த முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?**

நாம் வெற்றியை எதிர்பார்க்கின்றோம். ஏனெனில் பிரதான கட்சிகளின் ஆளுகையின் கீழ் இந்நாடும் மக்களும் களைப்புற்றுள்ளது. இவர்களின் கீழால் இந்நாட்டை தொடர்ந்தும் ஒப்படைக்க முடியாது. வெற்றியின் எதிர்பார்ப்பில் நாம் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் குதித்துள்ளோம். தொடர்ந்தும் இவ்வழிவுகரமான பாதையில் செல்வதற்குப் பதிலாக புதிய பாதையை தெரிவுசெய்யுமாறும், அதற்காக எமது வெற்றிக்கு பங்களிக்குமாறும், எம்முடன் கைகோர்க்குமாறும் நாம் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எமது முன்னோர்கள் எடுத்த பிழையான தீர்மானங்களின் காரணமாக இந்நாடு இத்தகைய அழிவு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. எனவே இளைஞர்களாகிய நீங்கள் எமது மூதாதையர்கள் மேற்கொண்ட பிழையான அரசியல் முடிவுகளுக்குப் பதிலாக புதிய முடிவுகளுக்கு வர வேண்டும் என கூறுகிறோம். அத்தகைய எதிர்பார்ப்புடனும், நல்லெண்ணத்துடனுமேயே நாம் இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறோம்.

**பிரதான கட்சிகள் இரண்டும் முன்னிறுத்துகின்ற வேட்பாளர்கள் உங்களுக்குச் சவாலாக இருப்பார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

(பக்.14)



எழுவாய், பயமில்லை

அபூ ஷாமில்

# சுத்திகரிக்கும் மகத்தான பணி

சொர்க்கம் என்பது நமக்கு சுத்தம் உள்ள பூமிதான் என்றொருவர் பாடிவைத்திருக்கிறார். இன்று மீண்டும் சுத்தம் தொடர்பான பிரச்சினை நாடெங்கும் தலைதூக்கியிருக்கிறது. டெங்கு நோயின் பரவல் தனது சுற்றுப் புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாதவர்களுக்கான தண்டனையாகத் தான் அமைந்திருக்கிறது. அதனால் பூமி பலருக்கும் நரகமாகி வருகிறது. தன்னுடைய ஊத்தையை துப்புரவாக்கி தான் ஆரோக்கியமாக வாழா விட்டாலும் பரவாயில்லை. தன்னுடைய அலட்சியப் போக்கு காரணமாக அடுத்தவனுக்கு டெங்கு நோயை உண்டாக்கி கொலை செய்யும் மாபாதகச் செயல் அதனைவிடவும் கொடூரமானது. இது பற்றி நமது சமூகம் சிந்திப்பதில்லை.

இத்தனைக்கும் சுத்தம் பற்றி அதிகம் பேசுவது முஸ்லிம் சமூகமாகத் தான் இருக்கிறது. குளிப்பது, மல சலம் கழிப்பது, பல் துலக்குவது, நகம் வெட்டுவது முதல் சுற்றுப் புறச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதை இபாதத்தாகக் கருதுகிற சமூகம் அது. எப்பொழுது பள்ளிவாசல்களில் பிக்ஹ் வகுப்புக்கள் தொடங்கினாலும் சுத்தம் பற்றிய முதல் பாடத்திலேயே நீண்ட காலம் தேங்கி நிற்கும் அளவுக்கு சுத்தத்தின் ஆழத்தை சமூகத்தின் ஆளுகை மையங்கள் எல்லாம் தெரிந்து தான் வைத்திருக்கின்றன. ஆனாலும் இன்றுவரை சுத்தம் தொடர்பான பிரச்சினைகளால் தான் சமூகம் அள்ளுண்டு செல்கிறது.

அண்மையில் காலி முகத் திடலில் நடைபெற்ற இலங்கையின் மூன்றாம் சக்தியின் அரசியல் கூட்டத்தின் பின்னர் சில முக்கிய பிரமுகர்கள் கூட்டம் நடந்த இடத்தைச் சுத்தம் செய்யும் காட்சி சமூக வலைத்தளங்களில் இவர்கள் பற்றிய ஒரு பிரமையையே ஏற்படுத்தி விட்டது. இதற்கு முன்னரும் ஜேவிபி கட்சியின் பல கூட்டங்களில் இந்தவகையான முன்மாதிரிகள் பின்பற்றப்பட்டு சமூகத்தின் நன்மதிப்பை வெல்லக் காரணமாக இருந்திருக்கின்றன.

சுத்தத்தை விரும்பும் மனிதர்களெல்லாம் இத்தகைய பண்பாடுகளை மெச்சும் நிலையில் முஸ்லிம் சமூகத்திலிருந்தும் இதற்கான பாராட்டுதல்களும் வாழ்த்துக்களும் குவிந்திருந்தன. அடுத்தவர்களைப் பற்றி போற்றுவதிலும் தூற்றுவதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கின்ற இந்தச் சமூகம் தன்னளவில் எப்படி இருக்கின்றது என்பது நகைப்புக் குரிய கேள்வியாக இருக்கிறது.

பள்ளிவாசல்களில் நிகாஹ் நடத்துவது இப்பொழுதெல்லாம் வழமையாகப் போயுள்ளன. நிகாஹ் மஜ்லிஸின் போது பரிமாறப்படும் உணவு வகையறாக்களும் பல வடிவங்களை எடுத்திருக்கின்றன. பெட்டிகளில் இட்டு அழகாக சிற்றுண்டிகளும் மென்பானங்களும் பரிமாறப்படுகின்றன. சிலர் அவற்றை வீட்டுக்கு எடுத்துச் செல்ல பலர் அங்கேயே அவற்றை அனுபவிக்கின்றனர். நிகாஹ் முடிந்து திரும்பிச் செல்கையில் பள்ளிவாசலில் பல இடங்களிலும் மென்பான போத்தல்களும் சிற்றுண்டிப் பெட்டிகளும் பரவிக் கிடக்கும். தூய்மையான பள்ளிவாசலிலேயே எமது மக்களின் நிலை இப்படித் தான் என்றால்..... அடுத்தவர்களிடம் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் தானா இந்த முன்மாதிரிச் சமூகம் இருக்கிறது ?

மார்க்க விவகாரங்களில் மயிர் பிளக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட் டுள்ள இந்தச் சமூகம் மனிதனாக வாழ வேண்டிய முன்மாதிரிகளை ஏன் மறுக்கின்றது? மார்க்கத்தை வெறும் இபாதத்துக்காக மட்டும் வைத்துக் கொண்டு நடைமுறை வாழ்க்கையில் மாற்றமாக நடப்பது தான் நமக்கான முன்மாதிரியா? ஐந்து மணிக்கு நடப்பதாக அறிவிக்கப் பட்டிருந்த கூட்டத்துக்கு ஆறு மணிக்கு வந்து விட்டு, 6.30 க்கு மஃரிபுடைய அதான் சொன்னவுடனேயே தொழுகை நேரத்துக்கு நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று என்று தொழுகைக்காக எழும்பிச் செல்பவர்கள் நம்மில் பலர் இருக்கிறார்கள். நேரத்துக்கு நிறைவேற்றப் பட வேண்டியது தொழுகை மட்டும் தான் என்று இவர்கள் நினைக்கி றார்கள். தொழுகை என்பது நேரத்துக்கு இயங்குவதற்கு மனிதனுக்கு வழங்கப்படும் பயிற்சி என்பதைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

பள்ளிவாசலைத் துப்புரவாக வைத்தலுக்கு அதிக நன்மைகள் முன்மொழியப்பட்டுள்ளதன் காரணமும் இதனூடாக சமூகத்தின் சுத்தத்தை உறுதிப்படுத்துவதாக இருக்க முடியும். நிகழ்ச்சிகள் முடிந்து பள்ளிவாசலையே குப்பை கூளமாக்கி விட்டுச் செல்வதாக இருந்தால் இந்த சமூகத்திடம் சுத்தத்தை எப்படி எதிர்பார்ப்பது?

இந்த நாட்டில் முஸ்லிம் சமூகம் வாழ்வதாக இருந்தால் ஏனைய சமூகங்களுக்கு முன்மாதிரியாகவே வாழ வேண்டும். அல்லாத பட்சத்தில் அவர்கள் இங்கு வாழ்வதில் எந்த நியாயமும் இருக்கப் போவதில்லை. அந்த வகையில் இலங்கையில் முஸ்லிம் கிராமங்களில் ஒன்றாவது மிகச் சுத்தமான நகரம் என்று பெயர் எடுக்க முடிந்திருக் கிறதா ? எந்தப் பள்ளிவாசலாவது இதற்கானதொரு வேலைத் திட்டத்தை முன்னெடுத்திருக்கிறதா ?

ஒவ்வொரு முஸ்லிம் கிராமமும் தமது ஊரை சுத்தமான ஊர் என தைரியமாக நாட்டுக்குப் பறை சாற்ற முடிந்தால் இந்த நாட்டின் சூழல் பாதுகாப்புக்கு, மருத்துவத் துறைக்கு, அதனூடாக பொருளாதாரத் துறைக்கு பெரும் பங்களிப்புச் செய்த சமூகமாக மாற முடியும். பல கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள ஒரு முஸ்லிம் கிராமம் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்தால் பக்கத்தில் இருக்கின்ற கிராமங் கள் இந்தக் கிராமத்தை முன்மாதிரியாக எடுத்து தங்களை தகவமைத் துக் கொள்வார்கள். இதுவே நாட்டில் பெரியதொரு சுத்தப் புரட்சிக்கு வழி வகுக்க முடியும்.

பல இடங்களில் ஈஸ்டர் தாக்குதலில் இறந்தவர்களுக்காக ஏற்றப்பட்ட வெள்ளைக் கொடிகள் இன்னும் கம்பங்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. நோன்புப் பெருநாள் புரியாணி விளம்பரத்துக்காகத் தொங்கவிடப் பட்ட பிளாஸ்டிப் பனர்கள் இன்னும் அகற்றப்படாமல் இருக்கின்றன. வட்ஸ் அப் குழுமத்தில் இருப்பவர்களைப் போல தனக்கு வரும் குப்பைகளை அடுத்தவனுடைய தொட்டியில் கொட்டு வது சகஜமாக மாறி வருகிறது. விதம் விதமாக சமைத்து உண்ணத் தெரிந்திருக்கிறதேயன்றி கழிவுகளை உரிய விதத்தில் அகற்றத் தெரியவில்லை. சற்று மழை பொழிந்தாலும் வண்ட வாளங்கள் எல்லாம் வெளிப்படும் படியாகத் தான் குப்பை முகாமைத்துவம் இருக்கிறது. இவற்றின் காரணமாக டெங்கு பரவினால் மட்டும் ஆர்வமுள்ள சிலரின் முன்னெடுப்பால் சிரமதானமொன்றுக்கு ஏற்பாடு செய்யப்படுவதோடு எல்லாம் சரி.

இந்த நிலைமையை விட சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கான நிரந்தரப் பொறி முறையை நோக்கி நகர வேண்டும். குப்பை முகாமைத்துவத்துக்கு அப்பால் குப்பைகளை செல்வமாக மாற்றுவதற்கான வழி முறைகள் கூட ஏராளமாக உள்ளன. அந்த வகையில் ஒவ்வொரு கிராமமும் தமது குப்பைகளை சிறந்த முறையில் முகாமை செய்யக் கூடிய வகையிலும், அதனைப் பணப் பண்டமாக மாற்றக் கூடிய வகையிலும் செயற்பட முடியுமாக இருந்தால், நாட்டின் ஆரோக்கியத்துக்குச் செய்த பெரும் பங்களிப்பாக அது அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் ஆளில்லா விமானத் தாக்குதல் ஒரு போர்ப் பிரகடனமாகும்

லெபனான் மீது இஸ்ரேல் ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தியமை லெபனானுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்ட ஒரு போர்ப் பிரகடனம் என லெபனான் ஜனாதிபதி மைக்கல் அவ்ன் தெரிவித்துள்ளார். லெபனானின் நில ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் உரிமை லெபனானுக்கு உண்டு என ஜனாதிபதி மைக்கல் அவ்ன் தலைநகர் பெய்ரூத்தில் தெரிவித்தார்.

கடந்த வார இறுதியில் லெபனான் மீது இஸ்ரேல் ஆளில்லா விமானத் தாக்குதல் ஒன்றை நடத்தியமைக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத்தாக்குதல் குறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது, ''நடந்தது ஒரு போர்ப் பிரகடனமாகும். இது எங்களது இறைமை, சுயாதீனம், ஆள்புல ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எங்களுக்குள்ள உரிமையை நினைவு படுத்தியுள்ளது'' எனத் தெரிவித்துள்ளார்.

லெபனான் பிரதமர் ஸஅத் அல் ஹரீரி, ''நாம் இஸ்ரேலுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்கே விரும்புகின்றோம். ஆனால், லெபனானின் இறைமையை மீறுகின்ற இஸ்ரேலின் குருட்டுத் தனமான வன்முறையை சர்வதேச சமூகம் நிராகரிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.


கடந்த ஞாயிறு (25) இஸ்ரேலின் ஆளில்லாத விமானமொன்று லெபனான் மீது தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஹிஸ்புல்லாஹ் இயக்கத்தின் முகாம் ஒன்றை இலக்கு வைத்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறி த்து ஹிஸ்புல்லாஹ் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ் தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில், ''இது போன்ற அத்துமீறலை ஹிஸ்புல்லாஹ் அனுமதிக்காது எனவும், இது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள தற்கொலை முயற்சி என்றும் வர்ணித்துள்ளார்.



# சர்வதேசப் பார்வை

# காஷ்மீர் தொடர்பில் ஐ.நா. விரைந்து செயல்பட வேண்டும்- இம்ரான் கான்



இந்திய நிர்வாகத்தின் கீழிலிருந்த காஷ்மீரின் சிறப்பதிகாரங்களை தன்னிச்சையாக ரத்துச் செய்த இந்தியாவின் தீர்மானத்தை ஐ.நா. சபை நிராகரிக்க வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் மீளவும் வலியுறுத்தியுள்ளார். தவறும்பட்சத்தில் அணுவாயுதப் பலம் கொண்ட இரு நாடுகளுக்கும் இடையிலான போர் சர்வதேச சமூகங்களையும் பாதிக்கும் என அவர் எச்சரித்துள்ளனார்.

சர்ச்சைக்குரிய இமாலய பள்ளத்தாக்கு குறித்து மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தோடு தீர்வு காணப்பட வேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கையை இந்தியப் பிரதமர் மோடி நிராகரித்ததை அடுத்து இம்ரான் கான் தனது கோரிக்கையை மீளவும் வலியுறுத்தியுள்ளார்.



பிஜேபி ஆட்சிக்கு வந்ததன் பின்னரேயே காஷ்மீர் முஸ்லிம்கள் மீதான அடக்கு முறை அதிகரித்ததோடு, இறுதியில் சிறப்பதிகாரம் ரத்துச் செய்யப்பட்டது. பாகிஸ்தானும் இந்தியாவும் உரிமை கோரும் காஷ்மீரில் குறிப்பிட்ட ஒரு பகுதிரை அவை கட்டுப்படுத்தி வருகின்றன. தற்போது இப்பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப் போவதாக பாகிஸ்தான் கூறுகின்றது. ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த சிறப்பதி காரத்தின்படி ஜம்மு காஷ்மீர் அரைச் சுயாதீனம் பெற்ற பிராந்தியமாக அங்கீ கரிக்கப்பட்டிருந்தது. பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல எனக் குறிப்பிட்டிருந்த பாகிஸ்தான், மோடியின் அசாதாரண தலையீடு இரு நாடுகளின் ராஜதந்திர உறவுகளை மேலும் பாதிக்கக் கூடும் என்று எச்சரித்துள்ளது.

1947 ஆம் ஆண்டில் காஷ்மீரியர்களுக்கு மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பினை நடத்தியிலிருந்தால் இப்பிரச்சினை இந்தளவு தூரம் வளர்ந்திருக்காது. காஷ்மீரியர்கள் இந்தியப் பக்கம் இணையப் போகின்றனரா, பாகிஸ்தானனோடு இணைந்து கொள்ளப் போகின்றனரா அல்லது தனிச் சுதந்திர நாடாக செயல்படப் போகின்றனரா என்பதை தீர்மானிப்பதற்கான ஏற்பாடாகவே இத்தகைய சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு ஐ.நா. இந்திய அரசைக் கோரியிருந்தது. ஆயினும் இந்திய அரசு இதுவரை தனது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று விமர்சிக்கப்படுகின்றது.

## இந்தியாவில் மெக்டொனால்ட் உணவகம் பகிஷ்கரிப்பு



இந்தியாவிலுள்ள மெக் டொனால்ட் உணவகங்கள் பகிஷ்கரிப்பு சவாலை எதிர்கொண்டு வருவதாக அல்ஜஸீராவின் நியூடில்லி செய்தியாளர் தெரிவித்துள்ளார். இந்தியாவிலுள்ள அனைத்து உணவகங்களும் ஹலால் சான்றிதழைப் பெற்றுள்ளதாகவும் இதனால் அவ்வுணவகங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் வலதுசாரி இந்துத்துவ இயக்கங்கள் வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மெக்டொனால்ட் உணவகங்கள் தமது டுவிட்டர் பக்கத்தில், தாம் ஹலால் சான்றிதழைப் பெற்றவை என செய்தி வெளியிட்டதை அடுத்தே இந்தச் சர்ச்சை அங்கு உருவாகியுள்ளது. அவர்களின் குறித்த பக்கத்தில், ''எங்கள் அனைத்து உணவகங்களுக்கும் ஹலால் சான்றிதழ்கள் உள்ளன. உங்கள் திருப்திக்காகவும் உறுதிப்பாட்டுக்காகவும் அங்குள்ள உணவக முகாமையாளரைக் கோரினால் அவர்கள் உங்களுக்கு அச்சான்றிதழ்களைக் காட்டுவார்கள்'' என செய்தி வெளியிடப்பட்டது. இது வலதுசாரி இந்துத்துவ அமைப்புகளுக்கிடையே எரிச்சலைக் கிளப்பியுள்ளதோடு, உணவகங்களைப் பகிஷ்கரிக்குமாறும் அவை பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

80 வீத இந்துக்களைக் கொண்ட இந்தியாவில் மெக்டொனால்ட் ஏன் ஹலால் உணவுகளைப் பரிமாறுகின்றது என்பது பல கேள்விகளை எழுப்பியுள்ளது. இந்தியாவிலுள்ள மெக்டொனாட்ல் உணவுப் பட்டியலில் மாட்டிறைச்சியோ பன்றி இறைச்சி உற்பத்திகளோ இல்லை. மாறாக, கோழி இறைச்சியும் தாவர வகை உணவுகளுமே பரிமாறப்படுகின்றன. இந்நிலையில் இஸ்லாமிய சட்டத்திற்கு உட்பட்ட ஹலால் சான்றிதழ் ஏன் பெறப்படுகிறது என பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## சீனா மற்றும் இந்தியாவின் மெத்தனம் மியன்மார் ரோஹிங்யர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்



மியன்மார் அரசாங்கம் தொடர்ந்தும் அங்குள்ள ரோஹிங்ய சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படுவதற்கும் அகதிகளை மீளப் பெறாமைக்கும் காரணம் சீனாவும் இந்தியாவுமே எனக் குற்றம் சாட்டப்படுகின்றது.

ரோஹிங்யர்கள் ஏழரை இலட்சம் பேர் ஆகஸ்ட் மாதம் ஒன்றிலேயே இனப் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு அந் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். 2017 ஆகஸ்டில் வெளியேற்றப்பட்ட மக்கள் 2 ஆண்டுகளாக அகதி முகாம்களில் அவதியுற்று வருகின்றனர். இந்நிலையிலேயே இனச் சுத்திகரிப்பின் இரண்டாம் ஆண்டு ரோஹிங்யர்களால் கவலையோடு நினைவு கூரப்படுகின்றது.

கடந்த சில மாதங்களில் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அலுவலகத்தில் ரோஹிங்யர்களுக்கு எதிரான குற்றங்கள் இழைத்தோர் குறித்து முழு அளவிலான மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. ஐ.நா. பொதுச் சபை சர்வதேச சுயாதீன பொறிமுறை யொன்றை இது குறித்து வகுப்பதற்கும் மியன்மார் அரசாங்கத்தின் ரோஹிங்யர்களுக்கு எதிரான போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கும் 28 மில்லியன் டொலர் பாதீட்டுத் திட்டமொன்றை அங்கீகரித்துள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சர்வதேசக் கடப்பாடு குறித்து மியன்மார் அரசாங்கம் பதில் சொல்ல வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் இம்முயற்சிகள் வரவேற்கப்படும் அதேவேளை, ரோஹிங்யர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வரவில்லை என்று கவலை வெளியிடப்படுகின்றது. பங்களாதேஷில் தங்கியிருப்போர் மிகப் பயங்கரமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர். உணவு, தங்குமிடம், மருத்துவம், போதுமானளவு அவர்களுக்குக் கிடைக்கப் பெறவில்லை. இன்னொரு புறம் பெண்கள், குழந்தைகள், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் வியாபார நடவடிக்கைளுக்குப் பயன்படுத்தப் படுகின்றனர்.

சினாவும் இந்தியாவும் மியன்மார் குறித்து கொண்டுள்ள அரசியல் நிலைப்பாடுகளும் மியன்மார் இராணுவ அரசாங்கத்திற்கு வழங்கி வரும் ஆதரவுமே ரோஹிங்யர்கள் தொடர்ச்சியாக ஒடுக்கப்பட்டு வருவதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## எகிப்தின் சீஸி அமெரிக்காவுக்கு மிக முக்கியமானவர்- டொனால்ட் ட்ரம்ப்

மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் ஸ்திரப்பாட்டை பேணிப் பாதுகாப்பதில் எகிப்தின் ஜனாதிபதி அப்துல் பத்தாஹ் சீஸி ஐக்கிய அமெரிக்காவுக்கு மிகவும் முக்கியமானவர் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஏற்கனவே சீஸியின் தலைமையில் எகிப்து பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளது என்று ஜனாதிபதி ட்ரம்ப் சீஸியைப் பாராட்டியுள்ளார்.



''எகிப்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பரஸ்பர புரிதலும் கௌரவமும் மகத்தானது. நாம் உங்களை ஏற்கனவே வாழ்த்தினோம். இன்னொரு சந்தர்ப்பத்திலும் உங்களை வாழ்த்தவுள்ளோம்'' என ட்ரம்ப் தெரிவித்தார்.

கெய்ரோவுக்கும் வொஷிங்டனுக்கும் இடையிலான நீண்ட கால நட்பின் விளைவே எகிப்தில் ஜனநாயகம் தோற்கடிக் கப்பட்டு சீஸியின் இராணுவச் சர்வதிகாரம் நிலைநிறுத்தப் பட்டமைக்கான காரணம் என்று அரசியல் அவதானிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

## ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவம் முழுமையாக வெளியேற வேண்டும்

ஈராக்கிலுள்ள ஷீஆ இராணுவத்தை இலக்காகக் கொண்டு இஸ்ரேல் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து ஈராக்கின் பாராளுமன்றக் குழு எஞ்சியுள்ள அமெரிக்க இராணுவம் ஈராக்கை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என காட்டமாக வலியுறுத்தியுள்ளது.

இஸ்ரேலின் அத்துமீறல் ஈராக் மீதும் ஈராக் மக்கள் மீதும் மேற்கொள்ளப்படும் போர்ப் பிரகடனம் என ஈராக் பாராளுமன்றக் கூட்டணியான பத்தாஹ் தெரிவித்துள்ளது. இதில் ஈரான் சார்பு அரசியல் கட்சிகளும் இடம்பெறுகின்றன. லெபனானிலும் ஈராக்கிலும் உள்ள ஷீஆ இராணுவக் களத்தை இலக்காகக் கொண்டு இஸ்ரேல் நடத்திய தாக்குதலை அவ்விரு நாடுகளின் அரசாங்கங்களும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய அறபு அமீரகமும் அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனமும்

• Aram Rostom







உலகின் இராட்சத செவி என புகழ் பெற்ற அதேவேளை, கம்யூனிஸ நாடுகளால் மிகக் குரூரமானது என்று வர்ணிக்கப்பட்ட அமெரிக்காவின் மத்திய உளவு நிறுவனம் உலகின் பெரும்பாலான நாடுகளில் உளவு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றமை பகிரங்க ரகசியம். ஆனால், மத்திய கிழக்கிலுள்ள நாடுகளில் அமெரிக்க உளவு நடவடிக்கைகளுக்கு உட்படாத ஒரு நாடாகவே அமீரகம் இருப்பதாக மத்திய உளவு ஸ்தாபனத்தின் அதிகாரிகள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இன்றைய மத்திய கிழக்கின் பேசு பொருள்களில் ஒன்றாக விளங்கும் ஐக்கிய அறபு அமீரகத்தின் செயற்பாடுகள் குறித்து அரசியல் ஆய்வாளர்கள் பல்வேறு கோணங்களில் தமது கண்ணோட்டங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், அமீரகம் குறித்து வெளியிடப்பட்ட இத்திடுக்கிடும் தகவலை ரொய்டர் செய்திச் சேவை அறிவித்துள்ளது.

லிபியாவில் ஐ.நா.வினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குப் போராடி வரும் இராணுவத் தலைவருக்கு அமீரகம் நிதியாதரவு வழங்குகின்றது. கட்டாருக்கு எதிரான பொருளாதாரத் தடையை விதிப்பதற்கு ஏனைய அறபு நாடுகளுக்கு முன்னோடியாக இருந்த நாடும் அதுவே. யெமனிலிருந்து படைகளை முற்றாக விலக்கிக் கொண்டபோதும், யெமனை இரண்டாகப் பிரிக்கின்ற அரசியல் நிகழ்ச்சிநிரலை அமீரகம் மறைமுகமாக அமுல்படுத்தி வருகின்றது.

இவ்வாறான அரசியல் தோற்றப்பாடுகளுக்கு மத்தியிலும் அமெரிக்காவின் மத்திய உளவு ஸ்தாபனம் ஐக்கிய அமீரக அரசாங்கம் குறித்து உளவு பார்ப்பதில்லை என்று அந்நிறுவனத்தின் முன்னாள் மூத்த அதிகாரிகள் மூன்று பேர் தெரிவித்துள்ள கருத்து மிகப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியள்ளது.

இது அமெரிக்க உளவுத் துறையிலுள்ள பெரும் ஆபத்தான விடயம் என அமெரிக்கச் சார்பு ஆதரவாளர்கள் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளனர். முழு உலகையும் கண்காணிக்கும் ஓர் உளவு நிறுவனம் இச்சிறு நாட்டைக் கைவிட்டது ஏன் என அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

ஐக்கிய அமீரகம் ஒரு சிறிய நாடாக இருந்தபோதும் ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு முழுவதும் பல்வேறு நாடுகளில் தலையீடு செய்கின்ற செல்வாக்கு மிக்க ஒபெக் அங்கத்துவ நாடாகத் திகழ்கிறது. உலக அரசியலை மாற்றுவதற்கு தனது பணப் பலத்தைப் பயன்படுத்தும் நாடுகளுள் அமீரகமும் ஒன்றாகும்.

தொடர்ந்தும் அமெரிக்க மத்திய உளவு (CIA) நிறுவனம் மட்டுமன்றி, தேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனம் (NSA) எனப்படும் மற்றொரு உளவு நிறுவன மும் ஐக்கிய அறபு அமீரகத்தை விட்டு விடுகின்றன. அமெரிக்க உளவு அதிகாரி கள் அல்கயிதாவை தோற்கடிப்பது மற்றும் ஈரான் குறித்த விவகாரங்களில் உளவுத் தகவல்களை தமக்குள் பரிமாறிக் கொள்கின்றன. ஆனால், ஐக்கிய அறபு அமீரக அரசாங்கம் குறித்து அமெரிக்க உளவு ஸ்தாபனம் அலட்டிக் கொள்ளாமல் இருப்பது அதன் நேச நாடான சவூதி அறேபியாவுக்கே ஆச்சரியத்தை அளித்துள்ளது.

அமீரக அரசாங்கத்தின் உள்விவகாரங்கள் குறித்து தரவுகளைப் பெறுவது அமெரிக்க உளவு நிறுவனத்திற்கு மிகக் கடினமாகியுள்ளது என இதற்கொரு காரணம் முன்வைக்கப்படுகின்றது. ஆனால், உளவு நிறுவனத்தின் கடந்த கால அனுபவங்களோடு பொருத்திப் பார்க்கும்போது இது ஏற்புடையதல்ல.

ரொய்டருக்கு தகவல்களைப் பரிமாறிய அமெரிக்க மத்திய உளவு நிறுவனத்தின் முன்னாள் அதிகாரிகளது கூற்றுப்படி, ஐக்கிய அறபு அமீரக ஆட்சி இயந்திரம் சர்வதிகாரம் கொண்டது, தன்னிச்சையானது, இறுமாப்புக் கொண்டது. அதனோடு அமெரிக்க உளவு நிறுவனங்கள் இணைந்து செயற்படுகின்ற போதும், CIA எனப்படும் அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனமோ NSA எனப்படும் தேசிய பாதுகாப்பு நிறுவனமோ வெள்ளை மாளிகையோ ஐக்கிய அறபு அமீரகம் குறித்து தாம் உளவு வேலைகளில் ஈடுபடாமைக்கான காரணம் குறித்து கருத்து வெளியிட மறுப்புத் தெரிவிக்கின்றன.

அமீரகத்திலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஆலயமோ அமீரகத்தின் வெளிவிவகார அமைச்சோ இது குறித்து எந்தக் கருத்தினையும் வெளியிடுவதில்லை.

CIA என்பது தமக்கு வேண்டிய, வேண்டாத அனைத்து நாடுகளினதும் பலங்கள் பலவீனங்களை துருவி ஆராய்ந்து, அவற்றை தமக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கு உதவும் நோக்கிலும் செயல்படுகின்ற நிறுவனமாகும். அது ஐக்கிய அமீரகத்தின் விவகாரத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுவது ரியாதுக்கே ஆச்சரியத்தைத் தருகின்றது.

கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் வரிசையில் ஐக்கிய அமீரகமும் வைக்கப்பட்டுள்ளது. இந்நாடுகளின் பல்வேறு உளவுத் துறைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. அதே CIA சவூதி அரசாங்கத்தின் உள்விவகாரங்களைத் தொடர்ந்தும் துப்பறிந்து வருகின்றது.

CIA யின் முகவரும் எழுத்தாளருமான ரொபட் பியர், ஐக்கிய அறபு அமீரக அரச குடும்பங்கள் முக்கியமானவை. அமெரிக்கா ஒரு சர்வதேச உளவு நிறுவனத்தைக் கொண்டுள்ளது என பெருமைப்படுமானால் இத்தகைய அரச குடும்பங்களின் விவகாரங்களையும் அது துப்பறிய வேண்டும் என்கிறார். லிபியா, கட்டார், சூடான் ஆகிய நாடுகளின் உள்நாட்டுப் அரசியல், பொருளாதார விவகாரங்கள் குறித்து CIA அலட்டிக் கொள்வதில்லை. இவை தவிர்ந்த ஏனைய அனைத்து நாடுகள் குறித்தும் அது துருவி ஆராய்கின்றது என CIA அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமீரகத்திற்கு மிக நெருக்கமான நாடு சவூதி அறேபியா. பிராந்தியத்தில் அமீரகம் போன்றே, அமெரிக்காவின் நேச நாடுகளுள் ஒன்று சவூதி. ஒப்பீட்டு ரீதியில் அமீரகத்தை விட கால அடிப்படையிலும் பொருளாதார உறவுகளின் அடிப்படையிலும் வொஷிங்டனுக்கும் ரியாதுக்கும் இடையிலான நெருக்கம் ஐக்கிய அறபு அமீரகத்தை விட பழமையானது. சவூதி அதிகார வர்க்கத்தை பாதுகாக்கும் பொறுப்பை ஒப்பந்தமொன்றின் மூலம் ஏற்றுக்கொண்ட நாடு அமெரிக்கா.

ஆனால், சவூதி அரசாங்கம் மற்றும் அதன் உயர் அதிகாரிகள் குறித்து தொடர்ந்தும் அமெரிக்க உளவு நிறுவனம் புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. CIA இனால் இலக்கு வைக்கப்படுகின்ற முதலாவது அறபு நாடு சவூதியே என CIA அதிகாரிகள் ரொய்டருக்குத் தெரிவித்துள்ளனர். அதேவேளை, மத்திய உளவு நிறுவனமும் சவூதியின் உளவுத் துறையும் இணைந்தே பிராந்தியம் முழுவதும் பிரச்சினைகளில் முக்கிய பங்கு வகிக்கும் வெளிநாடுகளில் ஒன்றாக ஐக்கிய அறபு அமீரகம் விளங்குகின்றது.

சூடான் முன்னாள் ஜனாதிபதி உமர் அல் பஷீரை நீண்டகாலம் ஆட்சியில் அமர்த்தி வைப்பதற்கு ஐக்கிய அறபு அமீரகம் பல பில்லியன் டொலர்களையும் பல ஆண்டுகளையும் செலவு செய்திருக்கின்றது. ஐக்கிய அமீரகம் அவரைக் கைவிட்ட தருணத்திலேயே இராணுவத்தால் அவர் பதவி கவிழ்க்கப்பட்டார். அதிகாரத்தைக் கையேற்ற இராணுவத்தை இப்போது வழிநடாத்தும் சக்தியாக இருப்பது ஐக்கிய அறபு அமீரகமே.

சிவில் அரசாங்கத்தையும் தேர்தலையும் வேண்டி நின்ற அப்பாவி மக்கள் பலரை சூடான் அரச படையினர் சுட்டுக் கொன்றதை நாம் அறிவோம். அமீரகம் எரிட்ரியா எனும் ஆபிரிக்க நாட்டிலும் சுயபிரகடனம் செய்து குடியரசாக தன்னை அறிவித்த சோமாலிலாந்திலும் கூட இராணுவத் தளங்களைக் கட்டியுள்ளது. ஆபிரிக்காவில் நீ எந்தப் பக்கம் திரும்பினாலும் அங்கு ஐக்கிய அறபு அமீரகத்தின் வேலைத் திட்டமொன்று இருப்பதைக் காண்பாய் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முன்னாள் நிருவாக அதிகாரி ஒருவர் குறிப்பிடுவது [illegible]

ஐக்கிய அறபு அமீரகம் தனது அயல் அறபு நாடுகளிலிருந்து மிகத் தொலைவில் உள்ள உலக நாடுகளில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றது என்கிறார் சாரா வைட்ஸன். இவர், மனித உரிமைக் கண்காணிப்பகத்தில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கப் பிராந்தியத்தின் பணிப்பாளர். சோமாலியாவாக இருக்கலாம், எரிட்ரியாவாக இருக்கலாம், ஜிபூத்தியாக இருக்கலாம், யெமனாக இருக்கலாம். அங்கெல்லாம் நுழைவதற்கு ஐக்கிய அறபு அமீரகத்திற்கு அனுமதி தேவையில்லை என்கிறார் அவர்.




**CIA என்பது தமக்கு வேண்டிய, வேண்டாத அனைத்து நாடுகளினதும் பலங்கள் பலவீனங்களை துருவி ஆராய்ந்து, அவற்றை தமக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கு உதவும் நோக்கிலும் செயல்படுகின்ற நிறுவனமாகும். அது ஐக்கிய அமீரகத்தின் விவகாரத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுவது ரியாதுக்கே ஆச்சரியத்தைத் தருகின்றது.**

யெமனில் ஈரான் ஆதரவுப் படையான ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக ரியாதும் ஐக்கிய அறபு அமீரகமும் இணைந்து போராடின. ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். பெரும் மனிதாபிமான நெருக்கடி உருவானது. மில்லியன் கணக்கானோர் பட்டினியை எதிர்கொண்டனர். வொஷிங்டன் சவூதி அறேபியாவுக்கு ஆயுதம் விற்பனை செய்வதை நிறுத்தியது. (ஆனால், ட்ரம்ப் அதனை தனிப்பிட்ட வகையில் ஆதரித்தார்.)

மொத்தத்தில் இவ்விரு நாடுகளினதும் யெமன் மீதான வான்வழித் தாக்குதல்கள் தொடர்பில் கடும் சர்வதேச விமர்சனங்கள் எழுந்தன. உடனே ஐக்கிய அறபு அமீரகம் தனது படையை படிப்படியாகப் பின்வாங்கத் தொடங்கியது. 2017 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில் தனது ஆதரவு அலையை உயர்த்திக் கொள்வதற்கு 46.8 மில்லியன் டொலர்களை ஐக்கிய அறபு அமீரக அரசாங்கம் செலவு செய்துள்ளது. இவ்வாய்வுத் தகவலை Centre for Responsive Politics எனும் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்நாட்டின் பிராந்தியத் தலையீடுகளுக்கு அப்பால் சர்வதேச ரீதியில் அது கால் பதிக்கும் இடங்களை நோக்கும் போது அமெரிக்க மத்திய உளவு நிறுவனம் தனது உளவுப் பணிகளை இன்னும் விஸ்தரிக்க வேண்டும் என CIA இன் முன்னாள் அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர். இதற்கு இன்னொரு காரணம், அமீரகம் அமெரிக்காவின் எதிரியான ரஷ்யாவுடன் மிக நெருங்கிய உறவுகளை வளர்த்து வருகின்றது. பாதுகாப்பு, வணிகம், பெற்றோலிய சந்தை போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

சீனாவுடனும் அபூதாபியின் ஆட்சியாளர் முஹம்மத் பின் ஸயாத் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தி வருகிறார். இத்தகைய அமெரிக்கக் கண்ணோட்டங்களிலிருந்து அமீரகத்தின் உள்விவகாரங்கள் துப்பறியப்பட வேண்டும் என CIA இன் முன்னாள் மூத்த அதிகாரிகள் கூறி வருகின்றனர்.

ஐக்கிய அறபு அமீரகத்தின் வெளிநாட்டுக் கொள்கையைக் கட்டுப்படுத்தி வருபவர் அபூதாபியின் பட்டத்துக்குரிய இளவரசர் ஷெய்க் தஹ்னூன் பின் ஸயாத். இவரே அபூதாபி ஆட்சியாளரின் பாதுகாப்பு ஆலோசகர். அவரது மகன் ஷெய்க் காலித் பின் முஹம்மத் என்பவரே நாட்டின் தேசிய உளவுப் பிரிவின் தலைவராகச் செயல்படுகிறார்.

2011 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய அறபு அமீகரத்தில் ஜனநாயகம் வேண்டும் என்ற கோஷங்கள் வலுப்பெற்றன. அறபு வசந்தத்தின் எதிரொலியாகவே இது அமைந்தது. அமீரகத்தின் அரச மாளிகை இதனால் அதிர்ந்து போனது. ஆட்சியாளர்கள் அரசியல் இஸ்லாத்தைக் கண்டு மிரண்டு போயுள்ளனர். அங்கு நடந்த சிறு மக்கள் ஆர்ப்பாட்டம் தமது மன்னராட்சிக்கு அச்சுறுத்தல் என்று கருதிய ஆட்சியாளர்கள் அதிர்ந்து போனார்கள்.

நீண்டகாலமாக ஐக்கிய அறபு அமீரகம் அரசியல் இஸ்லாத்திற்கு எதிராகவும் சகோதரத்துவ அமைப்புக்கு எதிராகவும் போராடி வருகின்றது. 2011 இல் முன்னாள் எகிப்தின் ஆட்சியாளர் ஹுஸ்னி முபாரக்கிற்கு எதிராக திரண்டெழுந்த மக்கள் அலை எகிப்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தது. 2012 ஜனாதிபதித் தேர்தலில் அது முர்ஸியை வெற்றி பெறச் செய்தது. இதனால், எகிப்தின் அரசாங்கத்திற்கான நிதி ஆதரவை ஐக்கிய அறபு அமீரகம் நிறுத்திக் கொண்டது. தற்போது சீஸியின் அரசாங்கத்திற்கு மிகப் பெரும் தொகை நிதியாதரவை ஐக்கிய அறபு அமீரக ஆட்சியாளர்கள் வழங்கி வருகின்றனர்.

கானகி நிறுவனத்தின் அதிகாரி விட்டோரியின் கருத்தில், அமெரிக்காவுக்கும் ஐக்கிய அறபு அமீரக அரசாங்கத்திற்கும் இடையில் சில ஒருங்கிணைந்த இலக்குகள் இருக்கவே செய்கின்றன. ஆனால், இரு நாட்டு நலன்களிலும் வேறுபாடுகள் உள்ளன. ஐக்கிய அறபு அமீரக மன்னராட்சியோ தமது சுயத்தைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே முனைப்பாக உள்ளது. குறிப்பாக, எந்த விலை கொடுத்தாயினும் ஆட்சியைப் பாதுகாப்பதே அதன் இலக்காக உள்ளது.

நன்றி: Middleast Monitor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியாக வருபவர் எப்படி இருக்க வேண்டும்?

## இளைய தலைமுறையினரின் எதிர்பார்ப்பு

தொகுப்பு: ஹெட்டி ரம்ஸி

## "லீ குவான் யூ போன்ற தலைவரே நமக்குத் தேவை"



முஷ்பிக் சாஜஹான்,
ஜாமியா நளீமிய்யா கலாபீடம்

அடுத்த ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்கும் புள்ளியில் இலங்கை அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. சரியான தலைவரை தெரிவுசெய்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு நமக்குள்ளது. பன்மைத்துவமே எமது வரம். லீ குவான் யூ போன்ற பன்மைத்துவத்தை சரியாகப் புரிந்த ஒரு தலைவரே நமக்குத் தேவை.

தேசத்தின் பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் மக்களின் நலன் குறித்து சிந்திக்கின்ற, இனவாதத்தை அரசியலில் முதலீடு செய்யாத தலைவரே நமக்குத் தேவை. சர்வதேச சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்கு சோரம் போகாதா நாட்டை சுயமாக முன்னேற்ற முடியுமான, இக்கட்டான பிரச்சினைகளின் போது தீர்க்கமான முடிவுகளை எடுக்கக் கூடிய சாணக்கியம் படைத்த ஒரு தலைவரை நாம் தெரிவுசெய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

இனங்களுக்கிடையில் பாரபட்சமின்றி சட்டவாட்சியை நிலைநாட்டக் கூடிய, இனங்களுக்கிடையில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஒரு தலைவரே நமக்கு வேண்டும். இன நல்லிணக்கமே தேசத்தை கட்டியெழுப்பும் என்ற உயரிய சிந்தனையை மக்கள் மயப்படுத்தும் பொறுப்பை செய்யக்கூடிய தலைவரையே நாம் தெரிவு செய்ய வேண்டும். குறைந்தபட்சம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றும் தலைவரையாவது தெரிவு செய்வோம்.

நான் இலங்கையன், என் நாட்டின் எதிர்காலம் என் கையில் இருக்கிறது என்ற உணர்வுடன் வாக்களிக்க முன் வாருங்கள். நாமே நமக்கான தலைவரை தெரிவுசெய்ய இருக்கிறோம். வாக்குகள் துப்பாக்கி ரவைகள், யாருக்கும் வேட்டு வைக்கும்.

## "மக்களையும் அவர்களது உரிமைகளையும் பாதுகாப்பவராக இருக்க வேண்டும்"



எம்.எஸ்.எம். மும்தாஸ்,
கலைப்பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

பல்லின மக்களை கொண்ட இவ் இலங்கை நாட்டில் ஒரு ஜனநாயக ஆட்சி முறைமை என்பது தற்கால சூழ்நிலைகளைப் பொறுத்து அமைய வேண்டியது கட்டாய நிலைமையாகவே இருக்கின்றது. இதுவரை காலமும் இருந்த அரசாங்கங்களைப் பார்க்கும் போது சிறுபான்மை மக்களுக்கு ஆதரவானதொரு அரசாங்கமென நூற்றுக்கு ஐம்பது வீதம் கூட ஆணித்தரமாக குறிப்பிட முடியாமலேயே உள்ளது. நாட்டில் ஜனாதிபதியாக வரும் முக்கிய பிரமுகர் தன்னிலை தவறாத ஒரு தலைவராகவும், நடுநிலைமை மிக்க ஆட்சியாளராகவும் இருக்க வேண்டும். நாட்டின் ஜனாதிபதியின் தலையான கடமை நாட்டு மக்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களது உரிமைகளையும் மீறலாகாது என்பதாகும். "அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே" என வாழும் மக்களை ஒரு நேரான பாதையின் கீழ் கொண்டு செல்வது என்பது நாட்டினுடைய தலைவரது பாரிய பொறுப்பாகும்.

சிறுபான்மை மக்கள் மற்றும் கீழ் தட்டு மக்களின் பிரச்சினையை முழுமையாக பேசக்கூடிய ஒரு அரசாங்கம் இந்நாட்டில் அமையுமாக இருந்தால் நிச்சயம் நாட்டு மக்களின் அமைதியையும், ஒற்றுமையையும் எம்மால் கண்டுகொள்ளலாம்.

ஆகவே, சிறுபான்மை மக்களது மிகப் பாரிய எதிர்பார்ப்பும் இதுவாகவே உள்ளது. எதிர்வரும் காலத்தில் (டிசம்பர் மாதம்) நடக்கவிருக்கும் தேர்தலானது சிறுபான்மையான மக்களிற்கு சார்பானதொரு அம்சமாக திகழ வேண்டும். மக்களது எதிர்காலத்தை சிறப்பானதாக அமைக்கக் கூடிய ஒரு அரசாங்கம் அமைய வேண்டும். மாட மாளிகைகளில் இருந்து கொண்டு வேடிக்கை பார்க்கும் வேடிக்கையாளர்கள் தகுதிவாய்ந்த அதிகாரிகளல்ல. உண்மையிலேயே மக்களது பிரச்சினையும் தனது பிரச்சினை என உணர்ந்து நடுவீதிக்கு வந்து தீர்த்து வைக்கக் கூடியவரே மக்களின் சேவகன். ஆட்சி மாற்றம் என்றால் இவ்வாறான ஒரு மாற்றத்தையே ஏற்படுத்த வேண்டி இருக்கிறது.

எனவே தேர்தல்கள் என்பது ஒரு சமூகத்தின் தலைவர் மற்றும் மக்களின் தலையெழுத்தையே மாற்றி வைக்கக்கூடிய தொன்று. அவ்வாறான தேர்தல்கள் பக்கச் சார்பின்றி நடுநிலையாக நடைபெற வேண்டும். ஆட்சி மாற்றத்தில் வரக்கூடிய தலைவர்கள் நாட்டு மக்களின் நலன் கருதியே செயற்பட வேண்டும்.

## "சகல இன மக்களையும் ஒன்றிணைத்து நிலையான தேசத்தை கட்டியெழுப்பக்கூடியவராகத் திகழ வேண்டும்"



ஏ.பி. அஹமட் சரொத் சுஜா,
பொறியியல் பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலானது மும்முனை அரசியல் போட்டியாக சூடு பிடித்துள்ளது. எனவே நாட்டிற்கு சிறந்த சேவையை ஆற்றக்கூடிய ஜனாதிபதியை தேர்வுசெய்வது இலங்கைப் பிரஜை ஒவ்வொருவரினதும் எதிர்பார்ப்பாகும். ஒரு நாட்டினுடைய அபிவிருத்தி என்பது பொருளாதாரம், கல்வி, சமூகம், அரசியல் போன்ற விடயங்களில் தங்கிக் காணப்படுகின்றது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள புதிய கைத்தொழில் பேட்டைகளை உருவாக்கி உள்நாட்டு விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிக்க முயற்சி செய்யக்கூடியவராக காணப்பட வேண்டும். அத்துடன் அந்நிய செலாவணியை கட்டுப்படுத்தக் கூடியவராய் காணப்பட வேண்டும். மேலும் கைத்தொழில் பேட்டை மூலம் வறிய, நடுத்தர குடும்பப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடியவராக இருக்க வேண்டும். கடந்த காலங்களில் நாட்டில் நிகழ்ந்த கசப்பான சம்பவங்களால் ஏட்டிக்கு போட்டியாக நடக்கும் எல்லா இனமக்களையும் ஒன்றிணைத்து நிலையான தேசத்தை கட்டியெழுப்பக் கூடியவராக திகழ வேண்டும். அதே வேளை திட்டமிட்ட இனரீதியான குடியேற்றங்களை மேற்கொள்ளக் கூடாது.

மேலும் உள்நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்கு தாரை வார்க்காமல், உள்நாட்டு ஆளுமைகளை பயன்படுத்தி வெளிநாட்டு உதவியுடன் நிலையான அபிவிருத்தி மேற்கொள்ளக்கூடியவராகக் காணப்பட வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக சட்டம், அரசியலமைப்பை மீறாது செயற்படக்கூடியவராக காணப்படுவதுடன், சட்டம், நீதித்துறையில் அரசியல் தலையீட்டினை தடுக்க முயற்சி மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும். அடுத்த ஜனாதிபதியாக தேர்வுசெய்யப்படுகின்றவர் பாரம்பரியம் என்ற மக்களின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தி நவீனத்துவ சிந்தனையுடன் இளைஞர்கள், கல்விமான்களை கொண்ட அரசாங்கத்தை அமைக்கக் கூடியவராக காணப்பட வேண்டும்.

ஊழல் மோசடியற்ற அரசை உருவாக்கி நம்பகமான செய்திகளை சுதந்திரமான முறையில் வெளியிடக்கூடிய கொள்கைகளை வகுக்கக் கூடியவராக காணப்பட வேண்டும். இவ்வாறான இயலுமைகளை கொண்ட ஒரு நபரை தெரிவுசெய்வது ஆரோக்கியமான, சுபீட்சமான ஒரு இலங்கை தேசத்தை உருவாக்கும்.

## "தரமான முடிவுகளை எடுக்கக்கூடிய சிறந்த ஆளுமையாக இருக்க வேண்டும்"



ஹஸன் ஹனி,
ஜாமியா நளீமிய்யா கலாபீடம்

ஒழுங்கான தலைமைத்துவம் இல்லாத நாட்டில் அரசியல் நிலைமைகள் மற்றும் நடைமுறை பிரச்சினைகள் எவ்வாறு இருக்கும் என்பதை அண்மைக்கால அரசியல் நிலவரங்களை வைத்து கண்டிருப்போம். எமது அரசியல் என்பது சாக்கடையாவதும் ஒரு பூந்தோட்டமாவதும் நாம் தெரிவு செய்யும் தலைவர்களின் கைகளில்தான் இருக்கின்றது.ஒழுங்கான தலைவர்களை தெரிவு செய்ய வேண்டியது நமது கடமையாகும். இன்று இனவாதமே அரசியலின் மறைகரமாக மாறி இருக்கின்றது.

பன்மைத்துவ சமூக அமைப்பொன்றில் இனவாதத்தை வைத்துக்கொண்டு தாராளமாக அரசியல் செய்யலாம் என்ற நம்பிக்கை இன்று இழையோடிருக்கின்றது. இந்த அபத்தமான நம்பிக்கையை கட்டுடைப்புச் செய்ய வேண்டியது இளைய தலைமுறையாகிய எமது கடமையாகும். இதற்காக வேண்டி எமது வாக்குப் பலத்தை நாங்கள் கட்டாயமாக சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். நாம் முற்போக்கான முறையில் சிந்தித்து எமது சமூகம், எமது நாடு எத்தகைய முற்போக்கான பாய்ச்சல்களை எதிர்பார்க்கின்றதோ, பிராந்தியத்தில் எவ்வாறான செல்வாக்கை எதிர்பார்க்கின்றதோ அதை நோக்கி இந்த நாட்டை வழிநடாத்திச் செல்லக்கூடிய தலைமையை உருவாக்க வேண்டியது நமது கடமையாகும். அதனை நாம் அடிப்படையிலிருந்து எமது சமூகத்திலிருந்து உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். அதனை நோக்கி சிந்தனையை மக்கள் மத்தியில் விதைக்க வேண்டும்.

அதற்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும். எமது சமூக வலைதளங்கள் மற்றும் அச்சு ஊடகங்களை நாங்கள் அதற்கான காரணமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எம்மால் இயன்றவரை முயற்சிகளை மேற்கொண்டு சிறந்த தலைவரை உருவாக்க முயற்சிக்க வேண்டும். நாட்டின் சுய பொருளாதார வளர்ச்சியில் நாடு முன்னேற வேண்டும். இந்த நாட்டின் விவசாயத்தை முன்னேற்ற வேண்டும். நாட்டின் வர்த்தகத்தை முன்னேற்ற வேண்டும். சர்வதேச அரங்கில் நாடு தலைகுனிய வேண்டிய சந்தர்ப்பங்கள் வருகின்ற பொழுது சூட்சுமமான மற்றும் இராஜதந்திர ரீதியிலான முடிவுகளை எடுத்து நாட்டின் தன்மானத்தை பாதுகாக்க வேண்டும். இது போன்ற தரமான முடிவுகளை எடுக்கக்கூடிய தரமானதொரு ஆளுமைமிக்க ஒரு அரசியல் ஆளுமையே நாட்டின் தலைவராக தெரிவு செய்யப்படல் வேண்டும். இதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். நமது சிந்தனைகள்தான் இன்று மாறக்கூடியது. மாற்றத்தின் சக்தி, மாற்றத்தின் சாவி நமது கைகளில் தான் இருக்கின்றது. எனவே எமது நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லக்கூடிய ஒரு தலைவரை உருவாக்க வேண்டிய கடமையில் இருக்கிறோம். அதற்காக வேண்டி இந்த தேர்தலை பயன்படுத்திக் கொள்வோம். வாக்கு நமது கரங்களில்...

நமது வாக்கு நமது எதிர்கால செல்வாக்கு!!!

## "அனைத்து இன மக்களினது கோரிக்கைகளுக்கும் செவிதாழ்த்தக் கூடியவராக இருக்க வேண்டும்."



எம்.டீ.எம். நஜீம்,
கலைப்பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

ஒரு நாட்டினை ஆட்சி செய்யக்கூடியவர் நாட்டினையும் நாட்டு மக்களையும் நேசிக்கக்கூடியவராக இருக்க வேண்டும். அதன் பிற்பாடு நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத்தி, நாட்டில் உள்ள இளைஞர்களுக்கும் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கும் நல்ல தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும். மேலும் நாட்டில் மக்களை இன ரீதியான பாகுபாடின்றி மக்கள் அனைவரும் இலங்கை பிரஜை என்ற அடிப்படையில் சமமாக மதித்து அனைவரது உரிமை, சுதந்திரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

நாட்டில் ஏற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் சமத்துவமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். குறித்ததொரு இனத்திற்கு மாத்திரம் முன்னுரிமை வழங்காமல் அனைத்து இனங்களையும் கருத்திற் கொண்டு அவர்களது கோரிக்கைகளுக்கு செவிதாழ்த்த வேண்டும். இந்த நாட்டில் இன ஐக்கியத்தையும் இன ஒற்றுமையையும் நாட்டின் சிறந்த பொருளாதாரத்தினையும் சிறந்த அபிவிருத்தியையும் ஏற்படுத்தக் கூடிய ஒரு சிறந்த வேட்பாளரையே சிறுபான்மை மக்கள் வேண்டி நிற்கின்றனர். எனவே இவ்வாறான கொள்கையை எந்த வேட்பாளர் கொண்டிருக்கின்றாரோ அவரையே மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

## "பெரும்பான்மை, சிறுபான்மை வேறுபாடுகள் இன்றி அனைவரதும் உரிமைகளை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்"



எம்.எப்.எம். மின்ஹாஜ்,
சட்டபீடம், பேராதனை பல்கலைக்கழகம்.

இலங்கை அரசின் அடுத்த தலைவர் யார் என்று தீர்மானிக்க வேண்டிய மக்கள் அத்தலைவர் எவ்வாறான ஒருவராக இருக்க வேண்டும் எனவும் அறிந்திருக்க வேண்டும். நாட்டின் முதற் பிரஜை என்ற அந்தஸ்தை ஏற்கும் ஜனாதிபதி இலங்கை மக்களை இன, மத, மொழி, பிரதேச, பால்நிலை, கட்சி போன்ற எந்தப் பாகுபாடுகளும் இன்றி நாட்டில் வாழும் மக்கள் அனைவரையும் அதன் பிரஜைகள் என்ற கண்கொண்டு பார்க்கும் ஒருவராக இருக்க வேண்டும். 'சட்டத்தின் முன் சகலரும் சமம்'. ஆள்வோரும் ஆளப்படுவோரும் நாட்டு சட்டங்களை மதித்துப் பின்பற்ற வேண்டும்.

ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவரும் நாட்டுச் சட்டங்களை முறையாகப் பின்பற்றும் ஒருவராக இருத்தல் வேண்டும். (சட்ட, நிர்வாக மற்றும் நீதி) முத்துறைகள் மீதும் அதிகாரங்கள் பெற்ற பதவியாக ஜனாதிபதிப் பதவி இருப்பதனால் தெரிவு செய்யப்படுபவர் நாட்டின் அடிப்படையும் மேலானதுமான சட்டமாகிய அரசியல் யாப்பினை மதித்து பின்பற்றுவதோடு அச்சட்டங்கள் மீறப்படுவதற்கு முன் அவற்றுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யக்கூடியவாராகவும் அமைதல் வேண்டும். ஜனாதிபதி தனது முத்துறை அதிகாரங்கள், பணிகள் அல்லது சம்பிரதாய பூர்வப் பணிகளை நிறைவேற்றும்போது எச்சந்தர்ப்பத்திலும் பெரும்பான்மை, சிறுபான்மை வேறுபாடுகள் இன்றி அனைவரதும் உரிமைகள், சுதந்திரம் மற்றும் சமத்துவம் தொடர்பாக கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். பதவி மற்றும் அதிகார மோகத்திற்காக செயற்படும் [illegible] களின் நலன்கருதி சேவை புரியக்கூடிய ஆற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை தாய்நாடு தற்போது அனுபவிக்கும் தேசிய வளங்கள் மற்றும் நலன்களை பாதிப்படையாது பாதுகாப்பதோடு அது தொடர்பான முன்னேற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டின் பாதுகாப்பு, அபிவிருத்தி தொடர்பாக அதிகம் அக்கறையுள்ளவராகவும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுபவர் இருத்தல் வேண்டும். மேலும் தேசிய நலன் அல்லது அபிவிருத்திக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலாக செயற்படும் பிரமுகர்களினதும் சமூக, சமய, அரசியல் நிறுவனங்களினதும் அழுத்தங்களுக்கு கட்டுப்படாத மக்கள் நலன் பேணும் நேர்மையுள்ள ஒருவர் ஜனாதிபதி பதவிக்கு தெரிவாக வேண்டும். நாட்டின் பொது வளங்களை அல்லது தன்பதவி நிலையை தனது சொந்த நலன் கருதி பிரயோகிக்கக் கூடியவர்கள் ஜனா[illegible]க் கூடாது.

ஜனாதிபதித் தேர்தல் மக்கள் அபிப்பிராயங்களின் முடிவுக்கான ஒரு சந்தர்ப்பமாகும். வேட்பாளர்களாக போட்டியிடும் அனைவரும் அப்பதவிக்கு தகுதி யுடையவர்களா? என்பது நிச்சயமற்றது. ஆனால் அவர்களுள் தகுதி வாய்ந்த சிறந்த ஆளுமையுள்ள ஒருவரை மக்கள் தேர்ந்தெடுப்பது சாத்தியமானதே. வேட்பாளர்களின் கடந்த கால அரசியல் சமூக வாழ்வின் தெளிவாக உண்மையாக உறுதிசெய்யப்பட்ட வரலாற்றுத் தரவுகள் அவர்களை தெரிவுசெய்வதற்கான சிறந்த வழிகாட்டியாகும். ஜனநாயகத்தின் விதிப்படி முடிவு மக்களிடமே மக்களின் அபிப்பிராயங்கள் மாற்றத்தை விரும்புவதாக இருப்பினும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு சரியான ஒரு வரிடம் வழங்கப்பட வேண்டும்.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் நாட்டின் எதிர்கால அரசியலில் மட்டுமன்றி சமூக மற்றும் பொருளாதார ரீதியாகவும் தாக்கம் செலுத்தும். எனவே, வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருப்பதை விட தகுதியான ஒருவரை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய வாக்களிப்பதும், அவ்வாக்குகளை உரியமுறையில் பிரயோகிப்பதும் காலத்தின் தேவையாகவுள்ள மக்களின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் தலைமையாக இலங்கை முஸ்லிம் மருத்துவர் சங்கம்?

• ஸலாஹுதீன்

தேர்தல்கள் சூடுபிடித்துள்ள காலப் பகுதியில் இலங்கை முஸ்லிம்கள் மீண்டும் தமது தலைமைகளைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். முஸ்லிம் சமூகத்தின் தலைமை பற்றிச் சிந்திக்கும்போது, இலங்கையில் முஸ்லிம் சமூகத்துக்கென தனியான தலைமையொன்று அவசியமா என்றொரு கேள்விக்கும் இடமிருக்கிறது. பல்லினச் சமூகங்கள் வாழும் இலங்கைச் சூழலில் ஏனைய சமூகங்கள் அனைத்தும் தலைமை என்று வரும்போது அரசியல் தலைமையைத் தான் பொதுவாகக் கருதுவதுண்டு. இதனைத் தவிர்த்துப் பார்க்கும் போது, சிங்கள சமூகத்தின் தலைமை யார் அல்லது எது, தமிழ்ச் சமூகத்தின் தலைமை யார் அல்லது எது என்ற கேள்விகளுக்கும் விடைகாண முனைவது சில நேரங்களில் பொருத்தமாக அமைய முடியும்.

சமூகங்களின் தலைமை என்று வரும் போது கருதினால் மல்கம் ரஞ்சித் உடைய தலைமைப் பாத்திரம் சற்று வேறானது. இதனை வைத்து சிலர் ஆன்மீகத் தலைமையை நியாயப்படுத்தும் நோக்கில் வாதாட முற்பட முடியும். ஆனாலும் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆன்மீகத் தலைமைக்கு மேலாக தனது சமூகத்தையே, இன்னும் தாண்டிப் போனால் நாட்டையே வழிநடத்தும் அளவுக்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்ட ஒருவர் என்பது ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னால் வெளிப்பட்ட உண்மை. உள்நாட்டு அரசியல் முதல் உலகளாவிய பயங்கரவாதம் வரை சரியான புரிதல் அவரிடம் இருப்பது இதன்போது நன்றாகவே வெளிப்பட்டது. இந்த வகையில் அவரது பாத்திரம் வித்தியாசமானது. சிலபோது முன்மாதிரிமிக்கது.

உலகளாவிய பயங்கரவாத நிகழ்ச்சி நிரலுக்கு இலங்கை உட்பட்டிருக்கின்ற நிலையில், இதற்கு இலங்கை முஸ்லிம் சமூகம் பலிக்கடாவாக்கப்பட்டு வரும் வழமையில், ஆன்மீகத் தலைமையொன்று மட்டுமே இந்தச் சவால்களைத் தாக்குப் பிடிக்கும் என எந்த விதத்திலும் எதிர்பார்க்க முடியாது. உலகின் பல நாடுகளிலும் திணிக்கப்பட்டு அந்த நாடுகளைக் கற்பழிக்கின்ற அநீதிப் போராட்டத்தில் சிக்குண்ட எந்த நாடும் அண்மைக் காலத்தில் மீண்டெழும்புவதற்கான எதிர்பார்ப்புக்கள் எதுவும் இல்லாத நிலையில், இலங்கையில் சிறுபான்மையிலும் சிறுபான்மையாக இருக்கின்ற முஸ்லிம் சமூகம் இதனை எதிர்கொள்வது எம்மாத்திரம்? இந்த நிலையில் இந்த அபாய சூழலை தனியாக ஒரு குழுவினர் எதிர்கொள்ள நினைப்பது என்பது வடிகட்டிய முட்டாள்தனமன்றி வேறில்லை.

இலங்கை முஸ்லிம் சமூகம் அண்மைக் காலம் வரை அரசியலையும் ஆன்மீகத்தையும் வேறுபடுத்தித்தான் பார்த்து வருகிறது. இப்பொழுது படிப்படியாக அரசியல்வாதிகளையும் மிஞ்சிய அரசியல் ஆன்மீகத்தில் புகுந்து கொண்டு உறவென்கின்றது. இலங்கை முஸ்லிம் சமூகத்தில் இன்றிருக்கும் தலைமை அரசியல்வாதிகளுக்கு அப்பாலான ஆன்மீகம் கலந்த அரசியல் தலைமை என்பது தான் பொருத்தமானது. இன்னொரு வகையில் ஆன்மீகமுமற்ற அரசியலுமற்றதொரு தலைமை தான் இலங்கை முஸ்லிம் சமூகத்தை வழி நடத்துகிறது. இது எந்த விடயத்திலும் எந்த நிலைப்பாட்டையும் எடுக்க முடியாத ஒரு இரண்டும் கெட்டான் தலைமையைத் தான் தோற்றுவித்திருக்கிறது. இனிவரத் தொடங்கியுள்ள சவால்களை எதிர்கொள்வதில் முஸ்லிம் சமூகம் உறுதியான பலமானதொரு தலைமையை கட்டமைக்க வேண்டியதன் அவசியத்தையே இது உணர்த்துகிறது.



இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா என்பது தான்தோன்றித் தலைமையாக இன்றுவரை செயற்பட்டு வருகின்றது. முஸ்லிம் சமூகம் அதனைத் தமது தலைமையாக நியமிக்கவும் இல்லை. ஜம்இய்யதுல் உலமாவின் யாப்பின்படி அது இலங்கை முஸ்லிம்களின் தலைமை என எந்த இடத்திலும் அது குறித்துரைக்கவும் இல்லை. இந்த நிலையில் ஜம்இய்யதுல் உலமாவை தலைமையாக யார் நியமித்தது என்று கூறி ஒரு சமூகம் அதனது தலைமையில் இருந்து ஒதுங்கிக் கொள்வதோ, அல்லது ஏதோ ஒரு கட்டத்தில் நாங்கள் தான் முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள் என்று நாங்கள் எங்கும் சொல்லவில்லையே என ஜம்இய்யத்துல் உலமா ஒதுங்கிக் கொள்வதோ சிலவேளை நியாயமானதாகவே இருக்கலாம். இவ்வாறான ஒரு நிலையில் முஸ்லிம் சமூகம் சின்னாபின்னமாகிப் போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவைப் பொறுத்தவரை அது இலங்கையிலோ வெளிநாடுகளிலோ உள்ள மத்ரஸாக்களில் கல்வி கற்று வெளியேறுகின்ற மௌலவிமார்களின் அல்லது உலமாக்களின் கூட்டமைப்பாகும். இது போல இலங்கையில் பல்கலைக்கழக மாணவர்களின் அமைப்பொன்று இருக்கின்றது. முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கென தனியான அமைப்பொன்று இருக்கின்றது. முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கம், சட்டத்துறையில் பட்டம் பெறுகின்றவர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டிருக்கிறது. இது போல கதீப்மார்கள் சங்கம், முஸ்லிம் ஆசிரியர் சங்கம் என பல துறைசார் அமைப்புக்கள் சமூகத்துக்குள்ளால் இருக்கின்றன. அவசியம் இல்லை என்றாலும், முஸ்லிம் மருத்துவர் சங்கமொன்றும் கூட உருவாக முடியும். இப்படி துறைவாரியாக தோற்றுவிக்கப்படும் எந்த அமைப்பையும் இலங்கை முஸ்லிம்களின் தலைமையாக ஏற்றுக் கொள்ளும் நிலையிலா இலங்கை முஸ்லிம் சமூகம் இருக்கின்றது?

மருத்துவம், சட்டம், விஞ்ஞானம், கணிதம், வானவியல், அரசியல் என்பன வெல்லாம் மார்க்கத்தின் கலைகளாகப் போதிக்கப்பட்டு கற்றுத் தேர்ந்தவர்களாக உலமாக்கள் இருந்த காலத்தில் உலமாக்கள் சமூகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றதில் நியாயம் இருந்தது. இன்று இவை எல்லாவற்றையும் பிரித்தெடுத்து ஷரீஆ என்பது தனிக் கலையாகப் வடிகட்டப்பட்டிருக்கின்ற நிலையில், அதுவும் மத்ரஸாக்களில் போதிக்கப்படுவது சரியா என்ற கேள்விகளுக்கு விடை காணப்படாத நிலையில் ஒரு சமூகத்துக்குத் தலைமைப் பொறுப்பு வழங்குவதற்கான தகுதியாக இதனைக் கருத முடியாமல் இருக்கிறது.

இலங்கையில் ஷரீஆவைப் போதிக்கின்ற ஒரே ஒரு பல்கலைக்கழகம் மட்டுமே இருக்கின்றது. ஏனைய முன்னூறு மத்ரஸாக்களும் தீனிய்யாத்தையே போதிக்கின்றன. இவற்றைக் கற்று வருபவர்கள் பணி செய்யும் தலமான ஒரு பள்ளிவாசலையோ மத்ரஸாவையோ நிர்வகிக்கின்ற கலைகளாவது இங்கு போதிக்கப்படுவதில்லை. 90 வீதமானவர்கள் இந்தக் கல்வியறிவுக்கு வெளியில் இருக்கும் நிலையில் ஒரு சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பை இவர்களிடம் வழங்குவது அறிவுடைமையல்ல. அதிலும் உலகளாவிய அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் பயங்கரமான சவால்களுக்கு மத்தியில் ஒரு துறைசார் தலைமை சமூகத்தை வழிநடத்துவது எந்தவகையிலும் ஆரோக்கியமானதாக இருக்கப் போவதில்லை.

அங்கத்துவம் பெற்றிருக்கின்ற உலமாக்களை முகாமைத்துவம் போன்ற கற்கை நெறிகளில் ஈடுபடுத்தி எடுத்தாலும் அவை அனுபவங்களையும் சேர்த்துக் கொண்டு நடைமுறைக்கு வருவதற்கு இன்னும் பல வருடங்கள் எடுக்க முடியும்.

முஸ்லிம் சமூகத்தின் தலைமைக்கான தேவை நீண்ட காலத்தில் பெறப்பட வேண்டியதொன்றல்ல. அதற்கு உடனடியாகத் தீர்வு காணப்படாத போது சமூகத்தில் தற்போதிருப்பது போன்ற தான்தோன்றித் தலைமைகள் பல உருவாக முடியும். முஸ்லிம் சமூகத்தில் முதன் முறையாக இரண்டாவது தலைமை சம்பிரதாய முஸ்லிம்கள் தரப்பிலிருந்து தோன்றிருக்கின்றது. இலங்கை முஸ்லிம்களின் உயர் பீடம் எனப் பெயரிடப்பட்டுள்ள இது இலங்கை முஸ்லிம்கள் அனைவரையும் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட முடியாத தலைமைகளின் நீட்சி நிச்சயமாக இவ்வாறான பிளவுகளுக்கு வழிகோலும். ஏற்கனவே தௌஹீத் ஜமாஅத்தினர் தமக்கென ஓர் அமைப்பை உருவாக்கி இருக்கிறார்கள். தரீக்காக்கள் இப்போது தமக்கான அமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் போனால் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா யாருடைய தலைமை என்ற கேள்வி தான் மிஞ்சப் போகிறது.

உலமா சபையை மார்க்கத் தலைமையாக எடுத்துக் கொண்டாலும் மார்க்கத்திலுள்ள கருத்து வேறுபாடுகளால் பிரிந்து போய் உலமா சபையுடன் உடன்படாத பிரிவுகள் இருக்கின்றன. மத்ரஸாக்களில் கல்வி கற்று வருகின்றவர்கள் தான் இங்கு அங்கத்தவர்களாகச் சேர முடியுமென்றிருந்தாலும் மத்ரஸாக்களின் பாடத் திட்டம் உலமா சபையிடம் இல்லை. மத்ரஸாக்கள் கூட உலமா சபையின் கண்காணிப்பிலாவது இல்லை. பள்ளிவாசல்கள் உலமா சபையின் கீழ் இல்லை. ஹஜ் விவகாரம் இல்லை. பிறை விவகாரம் இல்லை (அது பெரிய பள்ளிவாசலின் கீழ் இருக்கிறது). ஹலால் தனியொரு நிறுவனத்திடம் இருக்கிறது. கடைசியாக முஸ்லிம் தனியார் சட்ட விவகாரங்கள் கூட உலமா சபைக்கு அப்பால்தான் இருக்கிறது.

மார்க்க விவகாரங்களில் இந்த நிலையில் இருக்கின்ற பொழுது சமூகத்தின் ஒட்டுமொத்த விவகாரங்களையும் இந்த மார்க்கத் துறை சார்ந்தவர்களிடம் ஒப்படைப்பது என்பது இன்றிருக்கும் சவால்களுக்கு முன்னால் சாத்தியமானதல்ல என்பதை உலமா சபையும் புரிந்து கொள்ள வேண்டும். சமூகத்தின் உரிமைப் போராட்டங்கள், மீள்குடியேற்றம், காணிப்பிரச்சினை, எல்லை நிர்ணயம் என விரிகையில் நிகாபுக்கான உரிமைப் போராட்டத்தை உலமா சபை முற்படுத்தியதில் இருந்து அது மார்க்க ரீதியான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறது என்பதை எடுத்துக் காட்டியுள்ள நிலையில், சமூகத்தின் ஒட்டுமொத்த விவகாரங்களுக்குமான தலைமையொன்றின் தேவை அவசரமாக அவசியமாகின்றது. தேர்தல்கள் நெருங்கும் இந்தச் சமயத்தில் அது கட்டாயக் கடமையுமாகின்றது.

ஆகவே சமூகத்துக்கான தலைமைத்துவ சபையொன்றை உருவாக்கும் பணி அவசரமாக நடைபெற வேண்டும். அது தனிநபர்களை முற்படுத்தியதாக அல்லாமல் சமூகத்தின் நலன் கருதிய பொதுத் தலைமையாக வர வேண்டும். இலங்கையிலுள்ள ஜமாஅத்துக்கள், இஸ்லாமிய இயக்கங்கள், தரீக்காக்கள் அனைத்தையும் இது பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். முஸ்லிம்கள் அண்மைக் காலங்களில் எதிர்நோக்கிய சோதனைகளின் போது பல ஆளுமைகள் வெளித் தெரிந்தன. இந்த ஆளுமைகளையும், இஸ்லாமிய சிந்தனையாளர்களையும் அதில் இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அது சமூகத்தின் தலைமையாக மாற முடியும்.

மீண்டும் முஸ்லிம் சமூகத்துக்கு மட்டும் தனியானதொரு தலைமை தேவையா என்ற கேள்வி வந்தால் அது மார்க்கக் கடமை என்று சொல்வதற்கப்பால் அதனை நியாயப்படுத்தக் கூடியதாக அந்தத் தலைமை அமைய வேண்டும். இலங்கைக்கு ஷரீஆ பல்கலைக்கழகம் தேவையா, முகத்தை மூட வேண்டுமா போன்ற ஒட்டுமொத்த சமூகத்திலும் தாக்கத்தை விளைவிக்கும் விடயங்கள் வரும் போது இந்தத் தலைமைத்துவ சபையிடம் கலந்தாலோசித்து முடிவெடுக்கின்ற நிலைமை வரவேண்டும்.

முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள பாரிய சவாலை ஒரு தரப்பின் பொறுப்பில் மட்டும் விட்டுவிடாமல் சமூகமே ஒன்றாக இணைந்து தாங்குகின்ற நிலை இதனால் உருவாகும் என்பதோடு, அது நாட்டின் நலனிலும் தேசிய பாதுகாப்பிலும் நல்லதொரு விளைவை முஸ்லிம் சமூகம் ஏற்படுத்தியதாக அமையும்.

# எந்தப் பிரச்சினை தீர்ந்தென்று பதவிகளைப் பெற்றார்கள்


• லத்தீப் பாரூக்

தமது பதவிகளை சமூகத்தைக் காரணம் காட்டி இராஜினாமாச் செய்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுள் பலர் மிகவும் வெட்கக்கேடான வெறுக்கத்தக்க விதத்தில் மீண்டும் ஜனாதிபதி முன்னிலையில் தமது பதவிகளை ஏற்றுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு சம்பவங்கள் தொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுக்களை சுதந்திரமாக விசாரிக்க வழியமைக்கும் வகையில் தாங்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்வதாகவே இவர்கள் முன்னர் அறிவித்திருந்தனர். ஆனால் எதிர்ப்பார்க்கப்பட்டது போலவே இந்த விசாரணைகள் முழுமையாகப் பூர்த்தியடையும் முன்பே அவர்கள் தமது பதவிகளை மீண்டும் ஏற்றுள்ளனர்.

இதுவொன்றும் எதிர்பார்க்கப்படாத ஒரு விடயம் அல்ல. சமூகத்தை ஏமாற்றும் ஒரு விளையாட்டே அவர்களது இராஜினாமா. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது சுயநிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு நெறிப்படுத்திய நாடகத்தில் வெட்கக்கேடான பாத்திரங்களை ஏற்ற நடிகர்கள் தான் இவர்கள்.

ஏப்பிரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் முஸ்லிம் சமூகத்தின் மீதான துன்புறுத்தல்களுக்குக் காரணமாக இருந்த மைத்திரி - ரணில் அரசோடுதான் இவர்கள் மீண்டும் இணைந்துள்ளனர். இது தான் அவர்களின் பாரம்பரியமாக இருக்கின்றது. குறிப்பாக ஐக்கியம் எனும் சுலோகத்தை முன்வைத்து வந்து இன்று பல கூறுகளாகப் பிளவுபட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலை இதுதான். அவர்கள் தாங்கி வந்த சமயக் கோஷங்கள் அந்தக் கட்சியின் பிறப்பிலேயே மரணித்தும் விட்டன.



உயிர்த்த ஞாயிறு சம்பவம் இடம்பெற்ற முதலே அந்த நிகழ்வுக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று முஸ்லிம் சமூகம் சார்பாக தெளிவாகக் கூறப்பட்டு வந்துள்ளது. இந்த சம்பவத்தில் பங்கேற்ற உள்ளூர் முஸ்லிம் இளைஞர்கள் வெளிநாட்டு சக்திகளால் தவறாக வழி நடத்தப் பட்டவர்கள். இவர்களின் பின்புலத்தில் பாரிய வெளிநாட்டு சக்திகள் உள்ளன என்று கர்தினால் மல்கம் ரஞ்ஜித் பல இடங்களில் பல தடவைகள் தெளிவாகக் கூறியுள்ளார்.

இருந்தாலும் கூட இந்தச் சம்பவத்தின் பின் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளையும் அட்டூழியங்களையும் தடுக்கத் தவறியவர்களாகவே ஜனாதிபதியும் பிரதமரும் காணப்பட்டனர். அர்த்தமற்ற அழிவை ஏற்படுத்தும் முஸ்லிம் விரோத நாசகார பிரசாரங்கள் [illegible] விழ்த்து விடப்பட்டதை அவர்கள் கண்டும் காணாமல் நாட்டு மக்களின் கவனம் வேறு பக்கத்தில் திசை திரும்ப அவர்கள் வழிவிட்டனர்.

இந்தப் பிரசாரமானது முஸ்லிம் சமூகத்தை அழிக்கும் நோக்கில் மிக நுணுக்கமாகத் திட்டமிடப்பட்ட ஒரு சதித் திட்டம் என்பது உயிர்த்த ஞாயிறு சம்பவம் இடம்பெற்று மூன்று மாத காலம் முடிந்துள்ள நிலையில் தெளிவாகப் புரிந்துள்ளது. அரசும் எதிர்த் தரப்பும் கூட்டாகவும், இனவாத மதகுருமார், இனவாத ஊடகம், இனவாத வர்த்தகர்கள், இனவாத அரச இயந்திரம் என எல்லாமே தத்தமது பாத்திரங்களை [illegible] நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட விரிவான கட்டமைப்பைக் கொண்ட முஸ்லிம்களின் அடித்தளம் வெறும் 20 நிமிட நேர குண்டு வெடிப்பில் சிதைக்கப் பட்டு விட்டது.

முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் உட்பட அவர்களுக்குச் சொந்தமான மற்றும் பல இடங்களில் தேடுதல் நடத்த அவசர காலச் சட்டத்தை அறிமுகம் செய்து ஜனாதிபதி உத்தரவிட்டார். இந்தத் தேடுதல் முஸ்லிம் குடும்பங்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியது. அற்ப சொற்ப காரணங்களுக்காக நூற்றுக் கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுள் பலர் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மோசமாக நடத்தப்படுவதாகக் கூட தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்தத் தேடுதல் போர்வையில் புனித றமழான் மாத காலத்தில் முஸ்லிம்களின் அடிப்படை உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் படையினர் சப்பாத்துக் கால்களோடும் மோப்ப நாய்களுடனும் பள்ளிவாசல்கள் உட்பட பல இடங்களுக்குள் பிரவேசித்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடையிலும் கைவைத்தார் ஜனாதிபதி சிறிசேன. குருநாகல் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் இன்னும் பல இடங்களிலும் முஸ்லிம்களைக் கொல்லவும் அவர்களின் சொத்துக்களுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் சேதங்களை ஏற்படுத்தவும் இனவாத காடையர்களுக்கு தாராளமாக இடமளிக்கப்பட்டது. இதுவரை வெளியாகி உள்ள சில அறிக்கைகளின் படியும் தகவல்களின் படியும் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் பற்றி ஜனாதிபதி முன்கூட்டியே அறிந்திருந்தும் அதைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல் முஸ்லிம்கள் இதை அனுபவிக்கட்டும் என்று விட்டு விட்டு அவர் வெளிநாடு சென்றார்.

ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளையில் தான் முஸ்லிம்களின் வீடுகளும் வர்த்தக நிலையங்களும் ஏனைய வாழ்வாதாரங்களும் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன. உயிர்ச் சேதமும் ஏற்படுத்தப்பட்டது. இந்த வன்முறைகளுக்காகவும் குற்றங்களுக்காகவும் பெயரளவில் கைதுசெய்யப்பட்ட பலரும் கூட இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள முஸ்லிம்களுக்காக ஆஜராக சிங்கள சட்டத்தரணிகள் மறுத்துள்ளனர். முஸ்லிம்களுக்கு மருத்துவம் பார்க்க சிங்கள வைத்தியர்கள் மறுத்துள்ளனர். சில இடங்களில் முஸ்லிம் பெண்கள் தமது முக்காட்டை நீக்கினால் தான் மருத்துவம் செய்ய முடியும் என வற்புறுத்தியுள்ளனர்.

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வகிபாகம் காலம் வேண்டி நிற்கும் ஒரு வணக்கம்

முஹம்மத் பகீஹுத்தீன்

இலங்கை வாழ் முஸ்லிம்கள் தாய் நாட்டின் நலன்களுக்காக உழைப்பதும் பாடுபடுவதும் ஒரு தவிர்க்க முடியாத வணக்கமாகும். தாய் நாட்டைக் கட்டியெழுப்புவதில் பங்காளிகளாக இருப்பது ஒவ்வொரு குடிமகன் மீதுமுள்ள தார்மீகக் கடமையாகும்.

ஒரு முஸ்லிம் சிறந்த தனிமனித ஆளுமைகளை உருவாக்கும் பிரசாரகனாகவே வாழ்ந்து மடிவான். பிரசாரத்தை அவனது வாழ்வியல் கடமையாகவே அவன் கருதுவான். அந்த வகையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் குடிமகன் தனது நாட்டின் அரசியல் வாழ்விலும் தேர்தல் வழிமுறைகளிலும் முன்மாதிரியாக நடந்து கொண்டால் அதுவே ஒரு சிறந்த, உயர்ந்த தஃவாவாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

தேர்தல் என்பது அரசியல் போராட்டத்திற்கான சக்திமிக்க ஒரு சாதனமாகும். சிறுபான்மையாக வாழும் இலங்கை முஸ்லிம்கள் அதில் பங்கு பெற்று போராடுவதற்கு இஸ்லாம் தாராளமாக அங்கீகாரம் வழங்குகிறது.

பின்வரும் சட்டவிதிகள் அரசியற் போராட்டத்தையும் வாக்குரிமையை பயன்படுத்துவதையும் அங்கீகரிக்கின்றன. அவற்றை சுருக்கமாக நோக்குவோம்.

1) 'ஒரு கடமையை நிறைவேற்றல் இன்னொன்றை நிறைவேற்றுவதில் தங்கியிருக்குமாயின் அந்த விடயத்தை நிறைவேற்றுவதும் கடமையாகும்' இது ஒரு சட்ட விதி. இந்த விதியின் படி முஸ்லிம்கள் தமது மார்க்க, கலாசார, சமூக உரிமைகளைப் பெறும் அரசியற் போராட்டம், தேர்தலில் கலந்து கொள்வதில் தங்கியிருக்குமாயின் தேர்தலில் பங்கு கொள்வுதும் வாக்களிப்பதும் அவர்கள் மீது கடமையாகும். வாக்குரிமை என்ற கடமையை புறக்கணித்து விட்டு மாற்றம் வேண்டும் என கனவு காண முடியாது.

எனவே சிவில் சமூகத்தின் அரசியல் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபாடுள்ள இஸ்லாமியவாதிகளை தீண்டத் தகாதவர்களைப் போல் புறக்கணிப்பது அறிவுடமையாகாது. அவர்களது அரசியல் பங்களிப்பு சமூக மேம்பாட்டிற்கான படிக்கல்லாகும்.

2) 'செயல்கள் யாவும் நோக்கங்களை வைத்தே தீர்மானிக்கப்படும்' இது சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட இன்னொரு சட்ட விதியாகும். எனவே அரசியல் போராட்டத்தில் கலந்து கொள்வது முஸ்லிம்களின் உரிமையைப் பெறல், மார்க்க சுதந்திரத்தைப் பெறல், கலாசார தனித்துவத்தையும் முஸ்லிம் அடையாளத்தையும் காத்தல் என்ற எண்ணத்தோடும் நோக்கத்தோடும் இருப்பின் அது கூலியைத் தரும் ஒரு வணக்கமாகும். காலத்தின் தேவையைப் பொறுத்து மார்க்க ரீதியான கடமையும் கூட.

எனவே விழுமிய அரசியலுக்காக களத்தில் இறங்குவதும் உயர் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஒரு பிரதிநிதியை சட்ட மன்றம் அனுப்புவதும் நல்ல நோக்கங்களாகும். நல்ல நோக்கம் நிச்சயமாக நாளை மறுமையில் தராசை கனமாக்கும் நற்கூலியைப் பெற்றுத் தரும். எனவே நல்லாட்சிக்காக அரசியல் மேடை மிதித்த போராளியின் மிம்பர் மேடைக்கு தூக்குப் போடக் கூடாது.

3) 'தீமைகளுக்கு இட்டுச் செல்லும் வழிகளை அடைத்தல்' என்பதும் ஒரு ஷரீஆ சட்ட விதியாகும். அரசியல் போராட்டத்தின் முக்கிய ஆயுதமான தேர்தலைப் புறக்கணிப்பது என்பது மார்க்க மற்றும் சமூகக் கூட்டிருப்புக்கு அபாய அறிகுறியாகும். நாட்டில் முஸ்லிம் சிறுபான்மை சமூகம் ஒதுக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்படும். நிறைய நன்மைகளை இழப்பதோடு பல சீர்கேடுகளும் தீமைகளும் உருவாகவும் இடமுண்டு. சிலபோது தேர்தல் புறக்கணிப்பானது முஸ்லிம்களின் இருப்புக்கே பேராபத்தாக அமைந்து விடும். இத்தகைய பாரிய தீமைகளில் இருந்து தடுக்கும் அரணாகவே தேர்தல் அரசியலும் காணப்படுகிறது.

எனவே பாதுகாப்பிற்கும் சீர்கேடுகளைக் குறைப்பதற்கும் வாக்குரிமை சிறந்த அரசியல் போராட்ட சாதனம். அதனைப் பயன்படுத்துவதில் அலட்சியமாக இருப்பது நிச்சயமாக பெரும் குற்றமே. எனவே சீரான சிவில் அரசியல் செயற்பாட்டிற்கு வழிகாட்டல்களை வழங்கி சமூகத்தை வழிநடாத்துவது சட்டத்துறை படித்தவர்களின் பொறுப்பாகும்.

4) 'அத்தியவசிய நிலைகள் தடுக்கப்பட்டவற்றையும் ஆகுமாக்கும்' மேலும் 'தேவை அத்தியாவசிய நிலையின் தரத்தைப் பெறலாம்' என்ற அடிப்படைகள் அரசியல் போராட்டத்தை நியாயப்படுத்தும் சட்ட விதிகளாகும். அரசியல் போராட்டம் சிறுபான்மை முஸ்லிம்களின் ஒரு தேவை. அது சமூகத்தின் உரிமைகளைக் காக்க வேண்டிய அத்தியாவசிய நிலைக்கு இன்று மாறியுள்ளது. எனவே இந்நிலையில் சில தீமைகளையும் இழைக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை இருப்பினும் அதில் பங்குபற்றுவது ஆகும் என்பதயே இந்த விதி கூறுகிறது. அதாவது பாராளுமன்றம் செல்பவர் அல்லது அது போன்ற ஒரு சட்ட சபைக்கு பிரதிநிதியாக செல்லும் ஒருவர் இஸ்லாமிய சட்ட ஒழுங்கிற்கு மாற்றமான விடயங்களைக் கொண்டுள்ள யாப்பை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டியுள்ளது. அல்லது ஷரீஆவிற்கு முரண்படும் யாப்புக்களையுடைய கட்சிகளுடன் கூட்டிணைய வேண்டியுள்ளது. சிறுபான்மை முஸ்லிம்களின் வாழ்வொழுங்கில் இவை நிர்ப்பந்த நிலைகளாகும். எனவே அவர்களது சாத்வீகமான அரசியல் போராட்டத்தின் தேவை இத்தீமையை செய்வதை ஆகுமாக்கிறது.

நபிகளார் (ஸல்) அவர்கள் தாயிப் நகரத்திலிருந்து மக்காவிற்கு திரும்பியபோது முஷ்ரிகான முத்இம் பின் அதியின் பாதுகாப்புடனேயே தாயகம் திரும்பினார்கள். அப்போது அபூபக்கர் (ரழி) அவர்கள் போன்ற பல தோழர்கள் மக்காவில் இருந்தும் கூட அவர்களை இறை தூதர் (ஸல்) அவர்கள் பாதுகாவலராக எடுப்பதற்கு நாடவில்லை. அன்று நபிகளார் சுதந்திரமாக மக்கா திரும்ப முடியாத அளவிற்கு எதிர்ப்பும் கொலை அச்சுறுத்தலும் இருந்தது. எனவே உயிர் பாதுகாப்பு பெறாமல் மக்காவினுள் நுழைவது அழிவை தன் கையால் தேடிக்கொண்டதாகவே அமையும் என்று கருதியே அன்றிருந்த பாதுகாப்பு மரபை நபிகளார் தனக்கு சார்பாக பயன்படுத்த முனைந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு கேட்டு முஷ்ரிகான முத்இம் பின் அதியிடம் தூதனுப்பினார்கள். அதற்கு முத்இம் சம்மதம் தெரிவித்தார்.

பின்னர் நபி (ஸல்) அவர்கள் முத்இமின் இல்லத்தில் அன்றைய இரவை கழித்து விட்டு அடுத்த நாள் காலையில் அவரும் இன்னும் அவரது ஏழு பிள்ளைகளுமாக உருவப்பட்ட வாள்களுடன் மக்காவில் நுழைந்தார்கள். அப்போது குறைஷித் தலைவன் அபூ ஸுப்யான் (அந்த சமயம் இஸ்லாத்தின் பரம எதிரியாக இருந்தவர்) எதிரிலே வந்து நீர் முஹம்மதின் பின்னால் அவரைத் தொடர்ந்து வருவது ஏன்? அவருக்கு நீர் பாதுகாப்பு வழங்கியுள்ளீரா எனக் கேட்டார். ஆம், நான் சும்மா வரவில்லை. முஹம்மதுக்கு பாதுகாப்பு கொடுத்துள்ளேன் என முத்இம் பதில் கொடுத்தார். அப்படியாயின் உனது பொறுப்பில் உள்ள உடன்படிக்கையை நீர் முறிக்கத் தேவையில்லை எனக் கூறி அந்த பாதுகாப்பை தலைவர் அபூ ஸுப்யானும் அங்கீகரித்தார். இதுபோன்ற ஏராளமான நம்பகமான நிகழ்வுகளை ஸீராவில் அதிகமாகவே காண முடியும்.

இவை சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினைகளை கையாள்வதற்கான வழிகாட்டல்களாகும். அநீதி நிலவும் அரசாங்கத்தில் தேர்தல் என்பது தீமையை குறைப்பதற்கான அல்லது நாட்டு நலனில் பங்களிப்பதற்கான அல்லது சத்தியத்தை பரப்புரைப்பதற்கான சிறந்த வழிமுறையாகும். அதனை பயன்படுத்துவது தவறல்ல என்பதையே நபிகளாரின் வழிகாட்டல் நமக்கு கற்றுத் தரும் பாடமாகும். சர்வதிகாரிகளின் கொடுமைகளை எதிர்ப்பதற்கான சாத்வீகமான அரசியல் போராட்ட சாதனமே தேர்தல் அரசியலாகும். மேற்குறித்த சம்பவம் இறைதூதர் (ஸல்) அவர்கள் உலக அரசியல் நலன்களை அடிப்படையாக கொண்டு ஒரு காபிரின் பாதுகாப்பை வேண்டுவது தவறல்ல என்பதையே சுட்டுகிறது.

இதனைத்தான் அறிஞர் அப்துல் கரீம் ஸைதான் அவர்கள் 'காபிரான அரசிடமிருந்து நலன்தரும் பகுதிவாரியான பயனை பெறுவது ஆகும்' என்ற சட்டவிதியின் அடிப்படையில் தெளிவுபடுத்தியுள்ளார். அந்நிய அரசாங்கத்தில் சில நலன்களை பெறுவதற்காக அதனை ஆதரித்து வாக்களிப்பது ஷரீஆ அங்கீகாரம் கொண்ட ஒரு செயலே என்பது இதனால் தெளிவாகின்றது. அதனை பகிஷ்கரிப்பது சீர்கேடும், தீமைகளும் பரவுவதற்கு உடைந்தையாக இருந்ததாகவே அர்த்தம். இந்தப் பின்புலத்தில் தான் வாக்குரிமையை பயன்படுத்துவது கடமை என்ற கருத்தை நவீனகால இஸ்லாமிய அறிஞர்கள் விளக்கியுள்ளனர்.

இதனை சிலர் குப்ருக்கான விசுவாசம் என மறுதலிப்பதற்கு இடமுண்டு. ஆனால் வாக்குரிமை அல்லது அரசியல் கட்சிகளுடன் கூட்டிணைவது என்பது நிராகரிப்புக்கு விசுவாசம் தெரிவிப்பதன்று.




முஸ்லிம்களின் நலனுக்கான விருப்ப வாக்கை கொடுப்பதாகும். இதற்கு பல இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகள் சான்றாக உள்ளன. உதாரணமாக மக்கா காலப் பிரிவில் பாரசீகத்துக்கு எதிராக ரோம் வெற்றி பெற்றபோது முஸ்லிம்கள் மகிழ்ந்தார்கள். காரணம் ரோமர்கள் வேதம் கொடுக்கப்பட்டவர்கள். பாரசீகத்தில் வாழும் நெருப்பு வணங்கியை விட அல்லாஹ்வின் வேதம் அருளப்பட்டவர்கள் மேல் என்பதே அந்த மகிழ்ச்சிக்கு காரணம். மாறாக அது கிறிஸ்தவர்கள் மீதான விசுவாசமாக நோக்கப்படவில்லை. இது குறித்து ஸூரா ரூமின் ஆரம்ப வசனங்கள் பேசுகின்றன.

அவ்வாறே ஹபஷாவில் நஜ்ஜாசியின் வெற்றிக்காக நபித் தோழர்கள் சந்தோசமடைந்தார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் ஜாஹிலிய்யா காலத்தில் அப்துல்லா பின் ஜுத்ஆனின் வீட்டில் தீமைக்கெதிரான கூட்டணியில் ஒன்று கூடியதை நினைவு கூர்ந்து, அது போன்ற ஒரு சமூக செயற்பாட்டிற்காக இன்று அழைக்கப்பட்டாலும் நான் நிச்சயமாக பதில் அளிப்பேன் எனக் கூறினார்கள். இவை உலக விவகாரங்களில் நபிகளார் (ஸல்) அவர்கள் தேச மற்றும் மக்கள் நலன் கருதி பற்றோடும் விசுவாசத்தோடும் அடுத்த தரப்பினரோடு சேர்ந்து செயற்பட்டுள்ளார்கள், ஒத்துழைத்துள்ளார்கள் என்பதையே காட்டுகின்றன. எனவே இத்தகைய செயற்பாட்டை குப்ருக்கான விசுவாசமாக ஆதாரம் காட்டி மக்களை திசை திருப்புவது ஒரு அரசியல் துரோகமாகவே நோக்கவேண்டும் என ஸீரா கற்றுத் தருகின்றது.

5) 'இரண்டு தீமைகளில் தாக்கம் குறைந்ததை தெரிவு செய்தல்' என்பதும் ஒரு சட்டவிதியாகும். இதே கருத்தை கொடுக்கும் இன்னும் பல சட்ட விதிகள் நிறையவே காணப்படுகின்றன. நன்மை மாத்திரம் உள்ள ஒரு விடயத்தை தெரிவு செய்வது இலகுவானதே. தீமை மாத்திரம் உள்ள ஒன்றை தவிர்ந்து கொள்வதும் இலகுவானதே. நன்மை தீமை இரண்டும் கலந்த அல்லது இரண்டு தீமைகளில் எந்த தீமையை தெரிவு செய்வது என்ற நிலை வரும்போது சொந்த நலன் பாராது ஷரீஆவின் நிலைக்களனில் நின்று குறைந்த பாதிப்பை தரும் தீமையை தெரிவு செய்வது அனுமதிக்கப்பட்டதாகும். எனவே பாராளுமன்றம் செல்வது அல்லது நாட்டினதும் மக்களினதும் நலன்கருதி ஒரு கட்சியுடன் கூட்டிணைவதும் அல்லது இரு வேட்பாளர்களில் இருவருமே பொருத்தமற்றவர் என்று கருதப்படும் போது ஒருவரை ஒப்பீட்டு ரீதியில் முற்படுத்தி தெரிவு செய்வதுவும் ஆகுமானதே என்ற கருத்தை இந்த விதி கூறுகிறது.

6) 'நலன்களை நிலை நிறுத்துவதை விடக் கேடுகளை தடுப்பது முதன்மையானது' என்பது இன்னொரு முக்கியமான சட்டவிதியாகும். சிறுபான்மையாக இருந்து அரசியல் போராட்டத்தில் கலந்துகொள்வதன் மூலம் தேச நலன்களையோ, சமூக மேம்பாட்டையோ அடைவது எப்படிப் போனாலும் கூர்மையடைந்துள்ள தீமைகளை குறைப்பது முதல் கட்ட தேவையாகும். எனவே கூர்மையடைந்துள்ள அதிகார வெறியை, அரசியல் சீர்கேடுகளை குறைப்பதற்காக தேர்தல் என்ற ஆயுதத்தை பயன் படுத்துவது கண்டிப்பான தேவையாகும். இங்கே தீமைகளை தடுப்பது முதன்மைப்படுத்தப்படுகிறது.

இந்த விதிக்கு சீராவிலிருந்து ஒரு சான்றாக பின்வரும் சம்பவத்தை குறிப்பிடலாம். நபி (ஸல்) அவர்கள் புனித கஃபாவை இப்ராஹீம் (அலை) அவர்கள் கட்டிய அதே அடித்தளத்தில் மீண்டும் இடித்துக் கட்டுவதை மிகவும் விரும்பினார்கள். இருப்பினும் புதிதாக இஸ்லாத்தை தழுவியர்கள் மத்தியில் அது குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கஃபாவின் மீது வைத்துள்ள மதிப்பும் கண்ணியமும் மாசுபடும் என்றும் கஃபாவை புனர்நிர்மாணம் செய்வதை கைவிட்டு விட்டார்கள். கஃபதுல்லாவை ஆதியில் இருந்த அத்திவாரத்தில் கட்டுவது சர்வதேச உம்மத்துக்கான ஒரு பொது நலன். அதனால் உருவாகும் பித்னா அந்த நலனை மிகைத்துவிடும் தீங்காகும். எனவே தீங்கை தடுப் பதை இங்கு நபி (ஸல்) முதன்மைப்படுத்தியுள்ளார்கள். இந்த சம்பவம் புகாரியில் பதிவாகியுள்ளது. எனவே எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் அரசியல் தீமைகளை தவிர்ந்து கொள்வதற்காக நமது வாக்குரிமையை பயன்படுத்துவது அல்லது சிவில் அரசியலில் ஈடுபடுவது கடமையாகும். நன்மைகள் கிடைக்காது என்றிருப்பினும் தீமைகள் குறைவதற்கு அது பயன்படுமே என்ற சிந்தனை நாம் கருத்திற் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

இஸ்லாமிய சட்டப் பரப்பில் கடுமையான வாதப் பிரதி வாதங்களைக் கொண்ட சிறுபான்மை அரசியல் போராட்ட வழிமுறைக்கான ஆதாரங்களையே மேலே பார்த்தோம். இதனை அறிந்தோ அறியாமலோ இலங்கைக்கான சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பிருந்தே அரசியல் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு தொடர்கிறது.

எனினும் சிறுபான்மை முஸ்லிம்களின் வாழ்வொழுங்கில் அரசியல் போராட்ட வழிமுறைக்கு ஷரீஆ அங்கீகாரம் உண்டு என்பதை அறிந்து செயற்படும் போது அது ஒரு வணக்கம் என்ற உணர்வோடு உழைக்க முடியும். அப்போது தான் வெறும் ஆசனத்தை பெறுவதற்காக மாத்திரம் போட்டி போடுவதை தவிர்த்து விழுமிய அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உழைக்க முடியும். நிலைமை இவ்வாறிருக்க இந்தப் பாதையில் உழைக்கும் இஸ்லாமிய வாதிகளை அசூசையாக பார்ப்பது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

நலன்களை முற்படுத்தி தீமைகளை தவிர்ப்பதற்கோ அல்லது அழிவுகளை, சேதங்களை குறைப்பதற்கோ சிவில் அரசியல் செயற்பாடு ஒரு சிறந்த ஆயுதமாகும். சிறுபான்மைக்கான அரசியல் போராட்டத்தில் வாக்குரிமை என்பதும் மாற்றத்திற்கான மிக முக்கிய சாதனமாகும்.

தாய் நாட்டின் குற்றச் செயல்களை ஒழித்து நீதி, நேர்மை, இனங்களுக்கு இடையிலான சௌஜன்யம், சமாதானம், பொருளாதார சுபீட்சம் போன்றவற்றை உருவாக்குவதற்கான அரசியல் போராட்டம் ஒரு மார்க்கக் கடமையாகும். இத்தகைய சிவில் அரசியல் செயற்பாட்டிக்காக ஒத்துழைப்பது நாட்டின் பெருந் தீமையொன்றை ஒழிப்பதற்காக நீங்கள் செய்யும் உதவியாகும். தூய எண்ணத்துடன் அது நடந்தால் கூலி நிச்சயம். அல்லாஹ் விளைவுகளை பார்த்து கூலி வழங்குவதில்லை. எண்ணத்திற்கே வெகுமதி தருகின்றான்.

அல்லாஹ்வே மிக அறிந்தவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பஹா மாவட்ட முஸ்லிம் கல்வி – 05

# தரவுப் பகுப்பாய்வு

**கலாநிதிப் பட்டத்திற்காக றவூப் ஸெய்ன் மேற்கொண்ட கம்பஹா மாவட்ட இடைநிலைப் பாடசாலை மாணவர் இடைவிலகல் எனும் தலைப்பிலான ஆய்வின் அறிக்கை முக்கியத்தும் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**



தரவுகள் திரட்டப்படுவது எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கு அத்தரவுகளை முறையாகவும் அறிவியல் பூர்வமாகவும் புறவயமாகவும் பகுப்பாய்வு செய்வதும் அவசியம். தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டால்தான் அவற்றை வியாக்கியானம் செய்ய முடியும் என்பதோடு சரியான முடிவுகளையும் கண்டடையலாம். அந்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டே பொருத்தமான விதப்புரைகளையும் ஆலோசனைகளையும் முன்வைக்கலாம்.

கம்பஹா மாவட்டத்திலுள்ள 1AB, 1C, வகை II தரங்களை உள்ளடக்கிய 18 தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் இடைவிலகல் எந்தளவுக்கு இடம்பெற்றுள்ளது, எந்தத் தரத்திலுள்ள மாணவர்கள் ஒப்பீட்டு ரீதியில் அதிகம் இடைவிலகுகின்றனர், இடைவிலகலுக்குப் பங்களிக்கக் கூடிய காரணிகள் எவை, கல்விப் பங்காளர்களான (அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர், கல்வி நிருவாகம்) ஆகியவற்றுக்கும் இடைவிலகலுக்குமிடையில் உள்ள தொடர்பு யாது என்பவற்றை ஆராயும் நோக்கில் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்குத் தனித் தனியான வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன.

அதேபோன்று பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஐந்து பேர் என 90 மாணவர்களும் இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர்கள் 90 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அதிபர்களும் தனித் தனி நேர்காணல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இடைவிலகல் தொடர்பான தரவுகளைப் பெறும் நோக்கில் பாடசாலைகளிலுள்ள மாணவர்களை சேர்த்துக் கொள்ளல், வகுப்பேற்றம் செய்தல், பாடசாலையிலிருந்து விலகிச் செல்லல் தொடர்பான இடாப்பு (Register for Admissions, Promotions and Withdrawals) நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டது.

வினாக்கொத்துக்கள், நேர்காணல்கள், ஆவணங்கள் மற்றும் குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டு எண்ணிக்கை, நூற்று வீதம், கோட்டு வரைபு, முப்பரிமாண கூட்டுச் சலாகை வரைபு, சில்லு வரைபு என்பவற்றின் அடிப்படையிலும் இணைவுக் குணகத்தைப் பயன்படுத்துவதன் மூலமும் இவ் அத்தியாயத்தில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

கம்பஹா மாவட்ட இடைநிலைப் பாடசாலை இடைவிலகல் என்ற ஆய்வுப் பிரச்சினையைக் கொண்ட இவ் ஆய்வானது பின்வரும் உப தலைப்புக்களின் கீழ் பகுப்பாய்வினை மேற்கொள்கின்றது.

01. பாடசாலைகளிலுள்ள மாணவர்களைச் சேர்த்தல், வகுப்பேற்றல், விலகிச் செல்லல் தொடர்பான இடாப்புக்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல். விலகிச் சென்ற மாணவர்களின் எணண்ளவுப் பெறுமானத்தைக் கணிப்பதற்கு இத்தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

02. மாணவர் இடைவிலகல், அதன் தொகை, அதற்கான காரணங்கள் குறித்து பாடசாலை அதிபர்கள் கொண்டுள்ள புலக்காட்சியைப் பகுப்பாய்வு செய்தல்.

03. மாணவர் இடைவிலகலில் ஆசிரியர்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பங்களிக்கின்றனரா என்பதைப் பரிசீலிக்கும் நோக்கில் அல்லது இடைவிலகல் எனும் சார் மாறியும் ஆசிரியர் கார்ணி என்ற சாரா மாறியும் சுயாதீனமானவையா அல்லது சுயாதீனமற்றவையா என்பதைப் பரிசீலிக்கும் நோக்கில் ஆசிரியர்களின் வினாக்கொத்துக்களைப் பகுப்பாய்வு செய்தல்.

04. பெற்றோர், பாடசாலை இடைவிலகலை ஏற்படுத்துவதில் தாக்கம் செலுத்துகின்றனரா என்பதைக் கண்டறியும் நோக்கில் பெற்றோரின் வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.

05. இடைவிலகிய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை அறிந்து கொள்ள இடைவிலகிய மாணவர்களுடனான நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.

**ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு.**

மாணவர்களை சேர்த்துக் கொள்ளல், வகுப்பேற்றம் செய்தல், பாடசாலையிலிருந்து விலகிச் செல்லல் தொடர்பான இடாப்பில் (Register for Admissions, Promotions and Withdrawals) கடந்த ஐந்தாண்டு கால இடைவெளியில் தரம் 06 இலிருந்து தரம் 13 வரையில் இடைவிலகிச் சென்ற மாணவர்களின் எண்ணளவுப் பெறுமானம் துல்லியமாகப் பரிசீலிக்கப்பட்டது. இந்த இடாப்பில் தரம் 06 இலிருந்து 13 வரை பாடசாலையை விட்டு மாணவர்கள் விலகிச் செல்வதற்கு பல்வேறு காரணங்கள் குறிக்கப்பட்டுள்ளன. பெற்றோரின் விருப்பம், வேறு பாடசாலைக்குச் செல்லல், அறபு மத்ரஸாக்களுக்குச் செல்லல், பெற்றோர் தமது இருப்பிடங்களை மாற்றுவதனால் விலகிச் செல்லல் போன்ற காரணங்களோடு நீண்ட காலம் பாடசாலைக்கு வருகை தராமை என்ற காரணமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்டகால வரவீனத்துக்குப் பின்னர் (After Long Absence) பெற்றோர் சடுதியாக விடுகைப் பத்திரத்தை பெற்றுச் சென்றுள்ளனர். இத்தகைய மாணவர்கள் பெரும்பாலும் பாடசாலைக் கல்வியிலிருந்து முற்றாகவே விலகியவர்களாவர். ஏனெனில், 03 தொடக்கம் 09 மாதங்கள் வரையான காலப்பகுதிகளில் இவர்கள் பாடசாலைக்குத் தொடர்ச்சியாக வருகை தரவில்லை. இதனால் இடைவிலகிச் சென்ற பின்னரும் வேறு பாடசாலைகளில் இவர்கள் இணைவதற்கான வாய்ப்பு இல்லை. தனியார் நிறுவனங்களில் சில தொழிற்தகைமைசார் கற்கைகளைத் தொடர விடுகைப் பத்திரத்தை (Leaving Certificate) பெற்றுச் சென்றுள்ளனர். முறைசார் பாடசாலைக் கல்வியிலிருந்து இத்தகைய மாணவர்கள் முற்றிலும் விலிகியுள்ளனர் என்பது வேறுசில காரணிகளுடன் உறுதி செய்யப்பட்டது.

பெரும்பாலான மாணவர்கள் 08 ஆம், 09 ஆம் தரங்களிலிருந்தே இடைவிலகிச் சென்றுள்ளனர் என்பதை மேற்போந்த இடாப்பிலிருந்து அறிய முடிகின்றது. 18 பாடசாலைகளிலும் 70% ஆன பாடசாலைகளில் இவ்விரு இடைநிலை வகுப்பறைகளைச் சேர்ந்த மாணவர்களே அதிகம் விலகிச் சென்றுள்ளனர். அதேபோன்று விலகிச் சென்ற மாணவர்களில் கணிசமானோர் இம்மாவட்டத்திலுள்ள இஸ்லாமியக் கற்கை நெறியை வழங்கும் நோக்கிலான அறபு மத்ரஸாக்களில் இணைந்துள்ளனர். இம்மாவட்டத்தில் சுமார் 22 அறபு மதர்ஸாக்கள் உள்ளன. இவற்றுள் 40% ஆன மாணவர்கள் முறைசார் கல்வியை இம்மத்ரஸாக்களில் தொடர்ந்து பெறுகின்றனர். எனவே, இத்தகைய மாணவர்கள் முறைசார் கல்வியிலிருந்து இடைவிலகியதாகக் கொள்ள முடியாது. ஆனால், கம்பஹா மாவட்டத்திலுள்ள 60% ஆன அறபு மத்ரஸாக்களில் பாடசாலை முறைசார் கல்வி தொடரவில்லை. அதாவது முறைசார் கல்வியைத் தொடர்ச்சியாகப் பெறும் வாய்ப்பு மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, இது இடைவிலகல் என்றே கருத வேண்டியுள்ளது.

---

## அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் – 11

# மு:.மின்களின் தாய்

எனக்கு 6 வயதாக இருக்கும்போது ரஸூல் (ஸல்) அவர்கள் என்னைத் திருமணம் முடித்தார்கள். எனக்கு 9 வயதாக இருந்தபோது என்னோடு வீடு புகுந்தார்கள். நாம் ஹிஜ்ரத்தின்போது மதீனாவுக்கு வந்தோம். எனக்கு தலை வலியாய் இருந்த வேளையில் எனது தாய் உம்மு ரூமான் என்னிடம் வந்தார். என்னோடு எனது தோழியர் இருந்தனர். எனது தாய் என்னை சத்தமிட்டு அழைத்தார். அவள் என்னிடம் என்ன நாடுகிறாள் என்பதை அறியாது நான் அவளிடம் சென்றேன். எனது கையைப் பிடித்துக் கொண்டு வீட்டின் கதவடியில் என்னை நிற்க வைத்தாள். எனது மூச்சுத் திணறும் அளவுக்கு நான் எச்சரிக்கை தொனியில் பேசினேன். அவள் என்னை ஒரு வீட்டிற்குள் நுழையச் செய்தாள். அன்ஸாரியப் பெணகள் அவ்வீட்டினுள் இருந்தனர். அவர்கள் நலவும், பரகத்தும் கிடைக்கட்டும் எனக் கூறினர். எனது தாய் என்னை அவர்களிடம் ஒப்படைத்து விட்டாள். அவர்கள் எனது தலையைக் கழுவி, என்னை சீர்படுத்தி விட்டனர். ரஸூல் (ஸல்) அவர்கள் முற்பகல் நேரத்தில் வந்தார்கள். அப்பெண்கள் என்னை அவரிடம் ஒப்படைத்து விட்டனர்.

ஆயிஷா (றழி) தோழிகளில் ஒருவரான அஸ்மா பின்த் யஸீத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு திருமண வைபவத்தின்போ வழங்கப் பட்ட விருந்துபசாரத்தைப் பற்றி பின்வருமாறு விபரிக்கிறார்:

அயிஷா (றழி)யை அலங்கரித்து, ரஸூல் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்த ஆயிஷாவின் தோழியருள் ஒருத்தியாக நான் இருந்தேன்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக ஒரு பால் கிண்ணத்தைத் தவிர வேறொன்றையும் நாம் காணவில்லை. நபி (ஸல்) குடித்து, ஆயிஷா நாயகியிற்கும் பரிமாறினார்கள். அவள் வெட்கப்பட்டாள். அதற்கு நாம், ரஸூல் (ஸல்) அவர்களின் கையை திருப்பி அனுப்பிவிடாதே, அக்கிண்ணத்தை எடு' என்றோம். ஆயிஷா (றழி) வெட்கத்தோடு அதனைப் பெற்றுக் குடித்தாள்.

நபி (ஸல்) அவர்கள், அதனை உமது தோழியருக்கும் கொடுப்பீராக' எனக் கூற, நாம், எமக்குத் தேவையில்லை' எனக் குறிப்பிட்டோம்.

நபி (ஸல்) அவர்கள், 'நீங்கள் பசியையும் பொய்யையும் சேர்த்துக் கூற வேண்டாம்' எனக் கூற, 'அல்லாஹ்வின் தூதரே! நம்மில் ஒருவர் ஒன்றை விரும்பிக் கொண்டு, தான் அதனை விரும்பவில்லை எனக் கூறுவது பொய்யாக அமையுமா?' என வினவினேன். அதற்கு நபி (ஸல்), 'பொய் பொய்யென்றே எழுதப்படும். சிறிய பொய் கூறினால் அது சிறிய பொய் என்றே எழுதப்படும்.

மிக ஏற்றமான கருத்தின்படி ரஸூல் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 01 ஷவ்வால் மாதம் பகலிலேயே ஆயிஷா நாயகியுடன் வீடு புகுந்தார்கள். ஆனாலும் அல்லாமா பத்ருத்தீன் ஐனி தனது 'உம்ததுல் காரி' எனும் நூலில், ''பத்ர் போராட்டம் நடந்ததன் பின்னர் ஹிஜ்ரி 02 ஷவ்வால் அன்று நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா நாயகியுடன் வீடு புகுந்தார்கள்'' எனக் குறிப்பிடுகின்றார்.

***நபி (ஸல்) ஆயிஷா (றழி)யை திருமணம் முடித்து, வீடு புகுந்ததன் முக்கிய சிறப்பம்சங்கள்.***

ஆயிஷா (றழி)யின் திருமண வைபவத்திற்கான நடைமுறை உதாரணம் எமக்குத் தெளிவாகியிருக்கும். மட்டுமன்றி, நபி (ஸல்) அவர்கள் மஹரை எவ்வாறு நிறைவேற்றினார். எவ்வாறு வீடு புகுந்தார், எவ்வாறு இவை அனைத்தும் இலகுவாக, எளிமையாக எவ்வித வலிந்த செயற்பாடோ அல்லது வீண்விரயமோ இன்றி நிறைவேறின என்பது எமக்குத் தெளிவாகி உள்ளது.

''போட்டி போடுபவர்கள் இதிலே போட்டி போட்டுக் கொள்ளட்டும்.'' (அல் முதப்பிபீன்: 26) (தொடரும்)

---

# மெய்ப்பாட்டுக் கோளாறு




**பிரதான வகைகள்**

மெய்ப்பாட்டுக் கோளாறுகள் அல்லது மாறாட்டங்கள் அதன் பிரதான அறிகுறிகள் குறித்து கடந்த பத்தியில் நோக்கினோம். இப்பத்தியில் அதன் பிரதான இரு வகைகள் குறித்து விளக்க முயல்கின்றோம்.

**முதல் வகை: ஹைப்போகொன்றியாசிஸ் *(Hypochondriasis)***

இக்கோளாறு உள்ளவர்கள் உடலைப் பற்றி எப்போதும் அளவுக்கு அதிகமாகக் கரிசனை கொண்டு தாம் சீரியஸான ஒரு நோயால் பாதிக்கப்பட்டுள்ளோம் என்ற பிரமையில் பல்வேறு மருத்துவர்களைச் சந்தித்து மருந்துகளை சேகரித்து வைப்பர். சிறு தலைவலி அல்லது வயிற்று வலி ஏற்பாட்டாலும் பெரிதும் பயந்து, பதற்றப்பட்டு தாம் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு அடிக்கடி வைத்தியசாலைகளுக்கு ஏறி இறங்குவர்.

உள மருத்துவர்களின் கருத்தில் இது உடல் நோய் இருப்பதான ஒரு நீடித்த பயத்தின் விளைவாகும். சாதாரண உடல் வெளிப்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள் தமது உளரீதியான அச்சத்தின் காரணமாக அவற்றுக்கு வேறுபட்ட விள்க்கங்களை வழங்குகின்றனர். உதாரணமாக, சமிபாட்டுக்கான ஏப்பத்தின் சப்தத்தை அல்லது வியர்த்தலை, தோலில் ஏற்படக் கூடிய ஒரு அடையாளத்தை சீரியஸானதும் ஆபத்தானதுமான ஒரு நோயின் அடையாளம் என இவர்கள் நம்புகின்றனர்.



சமிபாட்டுத் தொகுதி, நரம்புத் தொகுதி, சிறுநீரகத் தொகுதி, இதயம் போன்ற குறிப்பிட்ட உடல் பாதிப்புகள் குறித்து சீரியஸான கவனம் உள்ளவர்களாக இவர்கள் இருப்பதனால் மருத்துவர்களை சந்திப்பது அவர்களின் வாடிக்கையாகி விடும்.

ஒரு பரிபூரண மருத்துவப் பரிசோதனையோ நோய் எதுவும் இல்லை என்ற மருத்து வர்களின் மீள்உறுதிப்பாடோ இத்தகைய நோயாளர்களை அமைதிப் படுத்தாது என்பதுதான் கவலைக்கிடமானது. சில வேளைகளில் தற்காலிகமாக ஆறுதல் அடைந்தாலும், வெகு சீக்கிரமே இவர் கள் பழைய நிலைமைக்குத் திரும்பி விடுவர்.

பொதுவாக இத்தகைய மாறாட்டத்தினால் பாதிக்கப்பட்டோர் உடல் தோற்ற மாயத்திற்கு உட்படுகின்றனர். ஆரோக்கியம் தொடர்பாக ஒருவர் யதார்த்த நிலையிலிருந்து விலகிச் செல்வதே உடல் தோற்ற மாயம் (Somatic Delusion) எனப்படுகின்றது. ஆரோக்கிய பயம் அதிகமாகவும் மீள மீள ஏற்படுவதுமே இதன் முக்கிய பண்பாகும். ஏனைய உளமாறாட்டங்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட ஆய்வுகளின் அளவுக்கு ஹைபோகொன்றிசியஸ் குறித்து பரந்து பட்ட ஆய்வுகள் இடம்பெறவில்லை. உலகளவில் மருத்துவ சேவையை நாடி வருவோரில் நான்கு வீதமானவர்கள் இக்கோளாரினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது சிலவேளைகளில் நிர்ப்பந்த நீடிப்புக் கோளாரின் அறிகுறிகளையே வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது இளமைப் பருவத்திலோ வேறு எந்தப் பருவத்திலோ ஏற்படலாம். நோய்ப் பாதிப்பில் ஆண் பெண் என்ற வேறுபாடுகள் இல்லை.

**இரண்டாவது வகை - மாற்றுக் கோளாறு**

உளக் கோளாறாகிய பதகளிப்பு இத்தகையோரில் உடல் நோய்கள் போல் போலி அறிகுறிகளை ஏற்படுத்துகின்றது. உறுப்புகளில் உடல் ரீதியான பாதிப்புக்கள் இல்லாவிடினும், அவர்கள் இயங்குகின்றனர். புலனுறுப்புக்கள் செயலிழந்து பேச முடியாமல் ஊமையாகுதல், செவிட்டுத் தன்மை, குருட்டுத் தன்மை, மயக்கம், பாரிஸவாதம் போல கை கால் இயங்க முடியாமை ஆகியன இவர்களில் தென்படலாம். இவற்றுக்கு உடல் ரீதியான காரணங்கள் எதுவும் இல்லாதபோதும் உள ரீதியான இத்தோற்றப்பாடுகள் ஏற்படுகின்றன.

புருனர் என்பவர் இக்கோளாறினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாதவரை நடக்க வைக்கவும் பேச முடியாதவரை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதற் தடவையாக.... (01 ஆம் பக்கத் தொடர்)

உலகின் பயங்கரவாதிகளின் வலையமைப்பில் இலங்கையரின் பெயர்கள் உள்ளடக்கப்படுவது இதுவே முதல் தடவை என அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில் இலங்கையில் பயங்கரவாத அமைப்புக்களை உருவாக்கி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் தலைவர்கள் மற்றும் அவர்களது பரிவாரங்கள் பற்றிய தகவல்கள் சர்வதேச பயங்கரவாதிகளின் வலையமைப்பில் சேர்க்கப்பட்டு, இவர்களை உலகறியச் செய்வதும், இங்குள்ள சர்வதேச பொலிசார் சர்வதேச பயங்கரவாத வலையமைப்பினை பரிசீலனை செய்வதும் இதனால் முடியுமாகவிருக்கும். இலங்கையரொருவர் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டு வெளிநாடொன்றில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டால் அவர்களும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் இலங்கை வந்து சோதனைகளில் ஈடுபட்ட இன்டர்போல் அதிகாரிகள் ஐந்து பேரினதும் செயற்பாடுகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த இன்டபோலின் பொதுச் செயலாளர் ஜர்கன் ஸ்டொக் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் இலங்கைப் பொலிசாருடன் சேர்ந்து பயங்கரவாதிகளைத் தேடும் பணியில் இவர்கள் ஈடுபட்டதாகவும் இதன் விளைவாகவே சவூதியிலிருந்த ஹயாத் முஹம்மத் மில்ஹானை கைதுசெய்ய முடிந்ததாகவும், இனிவரும் காலங்களிலும் இந்த விடயத்தில் இலங்கைக்கு உதவத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மாநாடு முடிந்தபின் கருத்து வெளியிட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் இன்டர்போல் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அதிகாரி ரஞ்சித் வெதசிங்க ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போது, தௌஹீத் ஜமாஅத் உட்பட்ட பயங்கரவாத அமைப்புக்களினால் நாட்டுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதேவேளை பிரதமரின் அலுவலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த அவர், பூகோள பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தி பூகோளப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேசத்துடன் இணைந்து வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதன் அவசியத்தை உணர்ந்து செயற்படுகின்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கள் மூலமாக சர்வதேச பாதுகாப்பு வேலைத் திட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல தம்மால் முடிகிறது எனத் தெரிவித்தார்.

## எமது முன்னோர்களின்... (07 ஆம் பக்கத் தொடர்)

இவர்கள் நாடு எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிக்கான தீர்வுகளல்ல. இவர்கள் நெருக்கடியின் பெறுபேறுகளாகும். அவர்களாகவே இந்நாட்டின் பாதுகாப்பை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு அவர்களாகவே இதற்குத் தீர்வு வழங்க முன்வந்துள்ளனர். இவர்களாகவே இந்நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியுறச் செய்து அவர்களாகவே இதற்குத் தீர்வு காண்பதற்கு தலைவர்களை முன்னிறுத்துகின்றனர். இதனால் இவர்கள் நெருக்கடிகளுக்கான தீர்வுகளல்ல. நெருக்கடிகளால் உருவான விளைச்சல்களாகும். அவர்களிடம் தொடர்ந்தும் தீர்வுகளை எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை. எனவே பிரதான கட்சிகள் எந்த வேட்பாளரை நிறுத்தினாலும் நாட்டிற்கு எவ்விதப் பலனும் கிட்டப்போவதில்லை.

இதுபோன்று எத்தனையோ பேரை நாம் ஆட்சிக்குக் கொண்டு வந்திருக்கிறோம். கணவனை ஆட்சியில் அமர்த்தியிருக்கிறோம், மனைவியை அமர்த்தியிருக்கிறோம். மைத்துனரை ஆட்சியில் அமர்த்தியிருக்கிறோம். மகனை கொண்டு வந்திருக்கிறோம். தொடர்ந்தும் முன்னாள் ஜனாதிபதியின் சகோதரரை அல்லது முன்னாள் ஜனாதிபதியொருவரின் மகளை ஆட்சிக்கு கொண்டு வருவதில் எவ்வித பிரயோனசமும் கிட்டப்போவதில்லை. வரலாற்றில் எதிர்கொண்ட இக்கசப்பான அனுபவங்கள் மக்களுக்கு இன்னும் புளித்துப்போயுள்ளன. இவற்றுக்கு எதிரான பரந்ததொரு மக்கள் சக்தியை ஒன்றிணைப்பதே காலத்தின் தேவையாக உள்ளது.

## ஈஸ்டர் தற்கொலை.... (01 ஆம் பக்கத் தொடர்)

சியோன் தேவாலயம் மீது பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியவர் காத்தான்குடியைச் சேர்ந்த எம்.என்.எம். ஆஸாத் என, விசாரணைகள் மற்றும் டி.என்.ஏ. பரிசோதனைகள் மூலம் அடையாளம் காணப்பட்டார். சியோன் தேவாலயம் மற்றும் சுற்றுப் பகுதிகளிலிருந்து மீட்கப்பட்ட ஆஸாத்தின் தலை மற்றும் உடற் பகுதிகளை அவரின் தாயார் லத்தீபா பீவி உள்ளிட்டோர் அடையாளம் காட்டியிருந்தனர். தற்கொலைதாரி ஆஸாத்தின் உடல் பாகங்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான பின்னணியில், ஆஸாத்தின் உடற் பாகங்களை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு' மட்டக்களப்பு மாவட்ட செயலாளருக்கு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் கடந்த ஜுன் மாதம் உத்தரவிட்டது. இதற்கமைய திங்கட்கிழமை தற்கொலைக் குண்டுதாரி ஆஸாத்தின் உடல்பாகங்கள் மட்டக்களப்பு - கள்ளியங்காடு இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது. இதனையடுத்தே, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தற்கொலைதாரியின் புதைக்கப்பட்ட உடல் பாகங்களை குறித்த மயானத்திலிருந்து அகற்றுமாறும் கோரி, செவ்வாய்க்கிழமை மாலை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமது மாநகர சபைக்குட்பட்ட பிரதேசமொன்றில் சடலமொன்றினை அடக்கம் செய்வதாயின் அதற்காக, மாநகர சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்றும், ஆனால் குறித்த தற்கொலைதாரியின் உடற் பாகங்களை கள்ளியங்காடு மயானத்தில் அடக்கம் செய்வதற்கு மாநகர சபையின் அனுமதி பெறப்படவில்லை எனவும், எனவே குறித்த மயானத்தில் மேற்படி உடற்பாகங்கள் புதைக்கப்பட்டமையானது சட்டவிரோத நடவடிக்கை எனவும் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன் பிபிசிக்கு கருத்து வெளியிடும் போது தெரிவித்துள்ளார்.

## நாட்டை மீட்பவர்கள்... (04 ஆம் பக்கத் தொடர்)

கையாளான ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்தினவின் அபாயகரமான கருத்தொன்றை நினைவுபடுத்தியது. 2017 அக்டோபர் மாதம் இடம்பெற்ற வியத்மக கருத்தரங்கில் பேசிய அவர், புதிய அரசியல் யாப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் எந்தவொரு நபரும் தேசத்துரோகியாகவே இருந்து வருகின்றார் என முத்திரை குத்தினார்.' இந்த தேசத்துரோகிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும், இரண்டாவது கிளர்ச்சியின் போது ஜேவிபி செய்ததைப் போல, அந்த ஆட்களுக்கு கண்ணியமான விதத்திலான இறுதிக் கிரியைகள் மறுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த இரு சம்பவங்களும் கோட்டாபய ராஜபக்ஷவின் ஜனாதிபதி ஆட்சியின் கீழான இலங்கை எந்த மாதிரியான ஒரு நாடாக இருந்து வரும் என்பதற்கான தெளிவான முன்னெச்சரிக்கைகளாக உள்ளன. அதாவது, சகிப்புத்தன்மையற்ற, வன்முறை கோலோச்சும் ஒரு தேசமாக அது இருந்து வரப் போகின்றது. ஜனாதிபதியின் சாபத்தை சம்பாதித்துக் கொள்ளும் எந்தவொரு நபரும், அவருடைய ஆதரவாளர்களும் ஏதோ ஒரு வழியில் மௌனிக்கச் செய்யப்படுவார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக வர விரும்பும் அதே விதத்தில், சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக வருவதற்கு விரும்புகின்றார். கோட்டாபய ராஜபக்ஷ தன்னுடைய அபிலாசைகளை இரகசியமாக வைத்திருக்கவில்லை. அதே வேளையில், சஜித் பிரேமதாச தன்னுடைய அபிலாசைகள் குறித்து வெளியில் பேசுவதற்குக் கூச்சப்படுகின்றார்.

உரித்து அடிப்படையிலான அரசியல் மற்றும் குடும்பத்துடன் பிணைந்த அரசியல் என்பன ரணசிங்க பிரேமதாச வெறுத்தொதுக்கிய ஒரு விடயமாக இருந்து வந்தது. அவருடைய மகனின் விருப்பங்கள் அதற்கு நேர்மாறானவையாக இருந்து வருகின்றன. ''எனது பிறப்பிலிருந்து நான் தயார்படுத்தப்பட்டு வந்ததுடன், நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்வதற்கென பணியாற்றி வந்திருக்கின்றேன்'' என சஜித் பிரேமதாச கூறியதாக மேற்கோள் காட்டப்பட்டிருந்தது.

அஸ்கிரிய மற்றும் மல்வத்த தேரர்களுடன் நடத்தப்பட்ட உயர்மட்ட சந்திப்புக்களின் பின்னரே அவர் அப்படிக் கூறியிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் குறித்து கேட்கப்பட்ட பொழுது, அவர் நேரடியாகப் பதிலளிக்காமல் நழுவிச் சென்றார். அவர் கூறும் விதத்தில், ஜனாதிபதித் தேர்தல் அவருடைய குறியாக இருந்து வரவில்லை. அதற்குப் பதிலாக நாட்டில் 1,123 சைத்தியக்களை நிர்மாணிப்பது எப்படி என்பது குறித்தே தாம் சிந்தித்து வருவதாக அவர் சொன்னார்.

நாட்டு மக்கள் கழுதைகளாக இருந்து வருகின்றார்கள் என்றே சஜித் பிரேமதாச தெளிவாக நம்புகிறார். ஜனாதிபதித் தேர்தல் குறித்து தான் சிந்திக்கவில்லை என அவர் ஏன் கூற வேண்டும்? மேலும், 1123 சைத்தியக்களை நிர்மாணிப்பது இன்றைய கால கட்டத்தின் தேவையாக இருந்து வருகின்றது என அவர் நம்பினால் இலங்கை அரசு குறித்தும் இலங்கை வாழ் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் அவருக்கு எதுவுமே தெரியவில்லை என்பது அதன் பொருளாகும்.

இன்றைய இலங்கையைப் பொறுத்த வரையில் ஊழல் மற்றும் அறியாமையுடன் கூடிய அரசியல் வாதிகள் ஆகியோருக்கு அடுத்த படியாக, எம்மிடம் இருப்பது சமயச் சின்னங்கள் ஆகும்.

மேலும், சஜித் பிரேமதாசவின் மேலே குறிப்பிடப்பட்ட கருத்தானது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக வருவதற்கும், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைவதற்கும் அவர் சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் இருந்து வருகின்றார் என்பதனை வெளிப்படுத்துகின்றது. ஓர் உத்தி என்ற முறையில் சமய உணர்வுகளைத் தூண்டும் நிலைப்பாடு, கொள்கையற்ற ஒரு நிலைப்பாடாகவும், அறிவுக்கு ஒவ்வாத ஒரு நிலைப்பாடாகவும் இருந்து வருகின்றது.

அது நாட்டின் இன - சமயப் பிரிவினையை மேலும் மோசமாக்குவதுடன், ராஜபக்ஷ வெற்றியை தடுப்பதற்குப் பதிலாக, அதற்கு வழிகோலுவதற்கு உதவ முடியும். இனத்துவ - சமய அரசியலை முன்னெடுக்கும் விடயத்தில் ராஜபக்ஷ ஆட்கள் ஈடு இணையற்றவர்களாவும், எவராலும் முறியடிக்கப்பட முடியாதவர்களாகவும் இருந்து வருகின்றார்கள். அது அவர்களுடைய கோட்டையாக இருந்து வருகின்றது. அந்தக் கோட்டையில் அவர்களுடன் மோதும் எவருமே நிச்சயமாக தோல்வியையே தழுவிக் கொள்வார்கள்.

தனது ஜனாதிபதி வேட்பாளர் யாராக இருந்து வந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னடைவுகள் தேர்தல் காலத்தின் போது அக்கட்சியை பெருமளவுக்கு பாதிக்கும். இலங்கை முஸ்லிம்களை கல்லடித்துக் கொல்ல வேண்டும் என்று கூறப்பட்டதற்கு அஸ்கிரிய பீடத்தின் சங்கைக்குரிய மகாநாயக்க தேரர் அவர்கள் மறைமுகமாக ஆதரவளித்த பொழுது ஐக்கிய தேசியக் கட்சி எங்கிருந்தது? முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் தொடர்பான திருத்தங்களின் குரல்வளையை நெரிப்பதற்கு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா அமைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி இடமளித்தது ஏன்?

ஒரு புனைவின் அடிப்படையில் புத்த பிக்கு ஒருவரை விமர்சிக்கும் விதத்தில் சிறுகதை ஒன்றை எழுதியமைக்காக ஷக்திக சத்குமார என்ற சிங்கள பௌத்த இளம் எழுத்தாளர் அநீதியான விதத்தில் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி மௌனம் காப்பது ஏன்? திருகோணமலை ஐவர் வழக்கை வெற்றிகரமான விதத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசு தவறிய விடயத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு விளக்கமளிக்கப் போகின்றது?

தீவிரவாதிகளை தட்டிக் கொடுப்பதன் மூலம் தேர்தல் மீட்சியினை பெற்றுக் கொள்ள முடியுமென ஐக்கிய தேசியக் கட்சி சிந்திக்கின்றதா? அதன் அடிப்படை ஆதரவாளர்கள் மதித்துப் போற்றும் விழுமியங்கள் தொடர்பாக முன்வந்து குரல் எழுப்பத் தவறுவது, வெற்றிக்கான ஒரு வழியாக அல்லாமல், தானே தேடிக் கொள்ளும் தோல்விக்கான ஒரு வழியாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை அது புரிந்து கொள்ளவில்லையா?

### படுபாதாளத்திற்கு இட்டுச் செல்லும் பாதை

2015 ஆம் ஆண்டில் ராஜபக்ஷ ஆட்சியை தோற்கடித்த கூட்டு எதிரணியின் அடிப்படை தேர்தல் வாக்குறுதியாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகக் காணப்பட்டது. அவ்வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியமை சிறிசேன - விக்கிரமசிங்க ஆட்சியின் ஒவ்வொரு தனித்தனி சாதனையையும் ஆபத்துக்குள் தள்ளிவிடுவதாகவே இருந்து வந்தது.

குறிப்பாக, ஜனநாயகத்தை மீண்டும் நிலைநிறுத்துவதிலும், சட்டத்தின் ஆட்சியை ஸ்தாபிப்பதிலும் ஓரளவுக்கு சாதித்துக் கொள்ளப்பட்டிருந்த முன்னேற்றங்களையும் கூட அது பாதித்துள்ளது. இந்த முன்னேற்றங்கள் கணிசமானவையாக இருந்து வந்த போதிலும், எளிதில் உடைந்து நொறுங்கக் கூடியவையாக இருந்து வருகின்றன. வேரூன்றுவதற்கு அவற்றுக்கு ஒரு வெளியும், வளர்வதற்கு அவற்றுக்கு ஒரு காலப் பிரிவும் தேவையாக இருந்து வருகின்றது.

ஆனால், தற்போதைய ஆட்சியின் பெருந்தொகையான தோல்விகள் ராஜபக்ஷ ஆட்சிக்கான கதவுகளை மீண்டும் திறந்துவிடக் கூடிய ஒரு சூழலை உருவாக்கியிருக்கும் நிலையில், இலங்கைக்கு அந்த வெளி மற்றும் காலம் என்பன கிடைக்கக்கூடிய சாத்தியம் அநேகமாக இருந்து வரவில்லை.

அரசாங்கம் மிக முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்றான மற்றொரு வாக்குறுதியை நிறைவேற்றி, நாட்டில் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை நோக்கிய பயணத்தில் ஓரளவுக்கு வெற்றியை சாதித்துக் கொண்டிருந்தால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான தகைமைகள் மேலும் உயர் மட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்க முடியும்.

தற்போதைய ஆட்சியின் வஞ்சக புத்தி, பணத்தை குறியாகக் கொண்ட செயற்பாடுகள், கோழைத்தனம் மற்றும் செயல் திறனற்ற நிலை என்பவற்றின் காரணமாக அரசியல்வாதிகள் தொடக்கம் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் வரையில் தொழில் முயற்சியாளர்கள் தொடக்கம் டியூசன் ஆசிரியர்கள் வரையில் எந்தவொரு பேர்வழியும் தன்னை ஒரு (ஜனாதிபதி) வேட்பாளராக முன்னிறுத்தக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் வர்த்தகப் புள்ளியான தம்மிக்க பெரேரா ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் அநேகமாக 'பொது வேட்பாளராக' களமிறக்கப்பட முடியும் என கூறப்பட்டது. கழிவுப் பொருட்களை இறக்குமதி செய்த மாபெரும் ஊழலின் மையத்தில் இருந்து வரும் Hayles Free Zone நிறுவனத்தில் பெரும்பான்மை பங்குகளை பெரேரா வைத்திருப்பதுடன், நிறைவேற்றுத் தரம் சாராத தலைவராக இவர் இருந்து வரும் ஹேலிஸ் குழுமத்தில் இது ஒரு துணை நிறுவனமாகும்.

கொள்ளை இலாபமீட்டும் நோக்கில் சுற்றாடலை அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்ட போது ஹேலிஸ் துணை நிறுவனம் ஒன்று கையும் மெய்யுமாக அகப்பட்ட முதல் தடவை இதுவல்ல. 2013 ஆம் ஆண்டில் Dip products PLC என்ற ஹேலிஸ் குழுமத்தின் மற்றொரு துணை நிறுவனம் ரத்துபஸ்வல அனர்த்தத்திற்கு மூலகர்த்தாவாக இருந்து வந்தது. 28 கிராம சேவகர் பிரிவுகளில் தரைக் கீழ் நீர் மாசடைவதற்கும் அந்தக் கம்பனியே காரணமாக இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட குடிமக்கள் அமைதியான விதத்தில் தமது எதிர்ப்பைத் தெரிவித்த பொழுது, இராணுவத்தை அனுப்புவதன் மூலம் ராஜபக்ஷ நிர்வாகம் அதற்கு எதிர்வினையாற்றியது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட போது மூன்று பேர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தார்கள். அத்தகைய ஒருவர் நாட்டின் ஜனாதிபதிப் பதவியை பெற்றுக் கொண்டால் எமது நாட்டின் தலைவிதி எப்படி இருந்து வரும் என்பதனை கற்பனை பண்ணிப் பார்ப்பது சிரமமான ஒரு காரியமல்ல.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது பொது மக்கள் மத்தியில் நிலவி வந்த கருத்தொற்றுமை ஜனநாயகத்திற்குச் சார்பானதாகவும், இனவாதத்திற்கு எதிரானதாகவும், முற்போக்கானதாகவும், மதச்சார்பற்றதாகவுமே இருந்து வந்தது. ஆனால், இன்று இலங்கையில் ஆதிக்கம் செலுத்தி வரும் கருத்தொற்றுமை சர்வாதிகாரத்திற்கு சார்பானதாக, பெரும்பான்மை இனத்தின் இனவாதத்திற்குச் சார்பானதாக, தனிநபர் துதிபாடுவதாக, பிற்போக்கு இயல்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. நாட்டின் இன்றைய தருணம் ஒரு சிறந்த சர்வாதிகாரி மீதான பிரியத்தையே எடுத்துக் காட்டுகின்றது. ஆகவேதான் முன்னணி பௌத்த பிக்கு ஒருவர் கோட்டாபய ராஜபக்ஷ ''ஹிட்லரைப் போல ஆட்சியை நடத்த வேண்டும்'' என கேட்டுக் கொண்டுள்ளார்.

அதே வேளையில், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றுக்கு எதிராக கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மீண்டும் மீண்டும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருவதனை நாங்கள் பார்க்கின்றோம். வத்திக்கான் - II க்கு முற்பட்ட கால கட்டத்தில் பாப்பாண்டவர்-XI பெனிடோ முசோலினியுடன் (Lateran Accords) ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட காலத்துக்கும், (வருங்கால பாப்பரசர்) கார்டினல் பிரெலி அடொல்ப் ஹிட்லருடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட காலத்துக்கும் திரும்பிச் செல்பவராகவும் கார்டினல் ரஞ்சித் அவர்கள் இருந்து வருகின்றார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஒரு சர்வதேச சதிச் செயலாக இருந்து வருகின்றது என்றும், ஐஸிஸ் தலைவர் அமெரிக்க முகாம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் திவயின பத்திரிக்கை வெளியிட்ட அந்தப் புனைகதையை கார்டினல் அவர்களும் நம்புவது போல் தெரிகின்றது. அதாவது, அவர் என்ன கூறுகின்றாரோ அவர் அதனை அறிந்திருக்கவில்லை என்பதனை மட்டுமே எம்மால் ஊகிக்க முடியும்.

அரசாங்கத்தின் பல தோல்விகள் ஜனநாயகத்தின் தோல்விகளாகக் கருதப்படும் ஒரு பின்னணியில், வலுவான ஒரு தலைவர் குறித்த தொன்மம் அரசியல் களத்தில் செல்வாக்குப் பெற்று வருகின்றது. கடும் ஏமாற்றத்தில் அல்லது கோபத்தில் தமது சுயபுத்தியை இழந்திருக்கும் வாக்காளர்களுக்கு ஒவ்வொரு புதரின் மறைவிலிருந்தும், ஒவ்வொரு பாறைக்கும் பின்னால் இருந்தும் மீட்பர்கள் தோன்றி 'உங்களுக்கு மீட்சியளிப்போம்' எனக் கூறி வருகின்றார்கள்.

அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் மற்றும் சமயத் தலைவர்கள் ஆகியோர் 'வலுவான ஒரு தலைவர்' என்ற ஒரே கீதத்தை இசைக்கும் பொழுது, அவர்களுடைய நோக்கம், எமது தேசத்தை மீண்டும் ஒரு முறை அந்தப் பழைய நாட்களுக்கு - அதாவது, ஆட்சியாளர்கள் சட்டத்தையும், ஒழுங்கையும் மிதித்து, நசுக்கி, குற்றங்களை நிகழ்த்தி, தவறுகளை இழைத்து, அதே வேளையில் தாம் எந்தத் தவறும் இழைக்காதவர்கள் என்ற நற்பெயரை ஈட்டிக் கொண்ட அந்தக் கால கட்டத்துக்கு - எடுத்துச் செல்வதாகும். ஏனெனில், சக்கரவர்த்தி நிர்வாண கோலத்தில் உலா வருகின்றார் என்று சொல்லுமளவுக்கு எவரும் சுதந்திரமானவர்களாக இருந்து வரவில்லை.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலமாக்களே

தஃவா பணியோடு
தார்மீகப் பணியொன்றும்
உங்கள் மீது!

மனிதனாக வாழக்
கற்றுக் கொடுங்கள்.
தீவிரவாதம், பயங்கரவாதம்
ஆஹிறா துன்யாவுக்கு
உதசாதென்பதை
உறுதிபடக் கூறுங்கள்

ஒருசிலர் செய்த
வெறித்தனத்தால் தொடரும்
வெறுப்பூட்டும் நிகழ்வுகளை
வெளிச்சம் போட்டுக் காட்டுங்கள்
அப்பாவிகளைத் தாக்குதல்
மார்க்கத்தில் தடையென
தெளிவுபடுத்துங்கள்.

தற்கொலைக் குண்டுதாரிகள்
தங்குமிடம் நரகமேயென
அச்சமூட்டி எச்சரிக்கை செய்யுங்கள்
மாற்று மதத்தவர்களின்
தனித்துவங்களை மதிக்கும்படி
தயவாகச் சொல்லி வையுங்கள்.

அகிம்சாவாதத்தை
அழகுராணியாகக் காட்டுங்கள்
தீவிரவாதம் ஒரு
அசிங்க முண்டமேயெ
அடித்துச் சொல்லுங்கள்
ஆஹிறாவோடு
அஃலாக்குகள் பற்றியும்
அழுத்தமாகச் சொல்லுங்கள்

அடிமட்டத்துக்குச் சென்று
ஆணிவேரைச் சுற்றியுள்ள
அழக்குகளை அகற்றுங்கள்
மஸ்ஜிதுகளில் மட்டுமன்றி
சமூகத் தெருக்களிலும்
சிம்மாசனத்தை வைத்திருங்கள்

தீவிரவாதத்துக்கு
குர்ஆன் ஹதீஸால்
தீவிர சிகிச்சையளியுங்கள்
தார்மீகவாதிகளை உருவாக்குங்கள்
ஆன்மீகவாதிகள் தானாக உருவாகும்.




# உஸ்தாத் றஷீத் ஹஜ்ஜுல் அக்பர் விடுதலை செய்யப்பட வேண்டும்

சிராஜ் மஷ்ஹூர்



இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் முன்னாள் அமீர் உஸ்தாத் றஷீத் ஹஜ்ஜுல் அக்பர், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் செய்தி மிகுந்த அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

இயல்பிலேயே மென்மையும் அமைதியும் மிகுந்த சுபாவமுடையவர் அவர். எப்போதும் பயங்கரவாதத்திற்கும் வன்முறைக்கும் எதிரான கருத்துடையவராகவே இருந்து வந்தவர். சமூகப்பணியில் நீண்ட அனுபவம் கொண்டவர்.

அறிவாளுமையும் சிந்தனைத் தெளிவும் மிக்க அவர், பயங்கரவாத சக்திகளுக்கு துணை போயிருப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் எவ்வித அடிப்படையுமற்றவையாகும்.

வன்முறையற்ற, ஜனநாயக வழியிலான சமூக மாற்றத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்த அவரை, கைது செய்திருப்பதன் பின்புலம் குறித்து கடுமையான சந்தேகங்கள் எழவே செய்கின்றன.

வைத்தியர் ஷாபி, சமூக செயற்பாட்டாளர் டில்ஷான் போன்றோர் கைது செய்யப்பட்டதன் தொடரிலேயே இதையும் நோக்க வேண்டி யிருக்கிறது.

ஆதலால், உஸ்தாத் றஷீத் ஹஜ்ஜுல் அக்பர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அவருக்கு நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்துவோம். அதற்காக நம்மால் முடிந்த அழுத்தங்களைப் பிரயோகிப்போம்.

அப்பாவிகள் அநியாயமான முறையில் தண்டிக்கப்படக் கூடாது என்பதை மீள மீள வலியுறுத்துவோம்.

## 2005 தேர்தல்... (01 ஆம் பக்கத் தொடர்)

அவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடவுள்ள நிலையில் இந்த முறைப்பாடு சிக்கலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் அரசியல் யாப்பின் 89(அ) பிரிவின்படி, இலங்கையரல்லாத ஒருவர் இலங்கையில் தேர்தலொன்றில் வாக்களிக்க முடியாது. 1981 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 15 ஆவது பிரிவின்படி இது தண்டனை வழங்கப்பட வேண்டிய குற்றமாகும்.

ஊடக அறிக்கைகளின்படி கோத்தபாய ராஜபக்ஷ 2003 இல் அமெரிக்கப் பிரஜையாக மாறியுள்ளார். 2005 செப்டம்பர் 04 ஆம் திகதி சுற்றுலா வீசாவில் இலங்கை வந்த அவர் 2005 ஜனாதிபதித் தேரதலில் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சாரங்களில் கலந்து கொண்டுள்ளார். இது 1948 ஆம் ஆண்டின் 20 இலக்க குடிவரவு குடியகல்வு சட்டத்தின் 45 (1) (அ) பிரிவின் கீழ் குற்றமாகக் கருதப்படக் கூடிய செயற்பாடாகும்.

## சொத்துக்களை... (01 ஆம் பக்கத் தொடர்)

எம். ஏ. சுமந்திரன், விதுர விக்ரமநாயகக்க, எரான் விக்ரமரத்ன, ரஞ்சன் ராமநாயக்க ஆகிய ஆறு பேரும் 2017/18, 2018/19 இருவருடங்களுக்குமான சொத்துப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் செய்யத் அலி ஸாஹிர் மௌலானா 2017/18 வருடத்துக்கான சொத்துப் பிரகடனத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

செய்யத் அலி ஸாஹிர் மௌலானா சமர்ப்பித்துள்ள வருமானக் குறிப்பின்படி அவரை விட அவரது மனைவியின் தொழில் மூலமே அதிகமான வருமானம் ஈட்டப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மௌலானாவின் பாரியார் கடமை புரிகின்ற ஈஸ்டர்ன் கொலேஜில் இவர்கள் இருவரும் பங்குதாரர்கள் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சவேந்திர... (01 ஆம் பக்கத் தொடர்)

25 வருட கால உள்நாட்டு யுத்தத்தில் சவேந்திர சில்வா பாரதூரமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் நிலையில், இராணுவத் தளபதியாக அவர் நியமிக்கப்பட்டமை மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் உள்ளிட்ட பல தரப்பினரின் விமர்சனத்துக்குள்ளானது. இது மனித உரிமை துஷ்பிரயோக சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களை மதிக்காத செயல் என்றும் அரச நிறுவனங்கள் மீது இலங்கை சமூகம் நம்பிக்கை இழக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தின்படி கூறப்பட்ட பாரதூரமான குற்றச்சாட்டுக்களை விசாரித்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் எந்த முன்னேற்றமும் காணப்படாததையிட்டும் நாட்டின் பாதுகாப்புத் துறையின் சில உறுப்பினர்கள் தொடர்பாக பாரதூரமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையிலும் அத்துறையில் சீர்திருத்தங்களை மேற்கொண்டமை குறித்தும் நாம் கவலை கொள்கிறோம். இந்த அம்சங்களில் உடனடியாக முன்னேற்றத்தை காட்டுமாறு நாம் சம்பந்தப்பட்ட அதிகார தரப்பினரை வலியுறுத்துகிறோம் என்று வல்லுநர்கள் குழு மேலும் கூறியுள்ளது.

## வெறுப்புப் பேச்சு... (01 ஆம் பக்கத் தொடர்)

வெறுப்புப் பேச்சுக்களைக் கண்காணிக்கவும் பதில் நடவடிக்கை எடுக்கவும் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு இசைவான வழிமுறைகளும் பொறிமுறைகளும் வகுக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகளின் வழிமுறையூடாக தயாரிக்கப்பட்ட முறைகளான, வெறுப்புப் பேச்சுக்கு பதில் நடவடிக்கை எடுப்பதற்கான ரபாத் (Rabat) செயற்பாட்டுத் திட்டம், பாரிய வன்முறைகளைத் தூண்டுவதற்குப் பதில்நடவடிக்கை எடுப்பதற்கான பெஸ் (Fez) செயற்பாட்டுத் திட்டம் போன்றவை சட்டத்தை அமுல்படுத்துபவர்களுக்கு உபயோகமான பயிற்சிகளாக அமையும்.

அரசியல் தலைவர்களும் மதத் தலைவர்களும் வெறுப்புப் பேச்சுக்களுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். சிறுபான்மைச் சமூகங்களை ஒதுக்குகின்ற மற்றும் புறக்கணிக்கின்ற முயற்சிகளை நிறுத்த வேண்டும். தனித்துவ அடையாளங்களை உள்வாங்கக் கூடிய வகையில் கல்வி முறையில் அவசரமான சீர்திருத்தமொன்று அவசியப்படுகின்றது. சுதந்திரமான சமூகத்தில் பொறுப்புடன் வாழ்வதற்கு சிறுவர்களைத் தயார்படுத்தும் வகையிலும், இன மதக் குழுக்களுக்கிடையில் புரிந்துணர்வு, சமாதானம், சகிப்புத்தன்மை, பால்சமத்துவம், நட்புணர்வு போன்றவற்றை வளர்க்கும் விதத்திலும் சர்வதேச கடப்பாடுகளை பூர்த்தி செய்யும் வகையில் இலங்கை கல்விக்கான உரிமையை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2011 இன் 16/18 ஆவது பிரேரணைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள, சிறுபான்மைச் சமூகங்களை உள்ளீர்ப்பதை வளர்த்தல், அவர்களுடனான உறவை வளர்க்கும் வகையிலான உறவுப் பாலங்களை அமைப்பதற்கான நிகழ்ச்சிகளை நடத்துதல், மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல்களை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல்களை வரையும் பொழுது பெய்ரூத் பிரகடனத்தையும் மத நம்பிக்கை உரிமைகளுக்கான அதன் 18 நிபந்தனைகளையும் அதனுள் அரசாங்கம் உள்வாங்க வேண்டும். இவ்வாறான கலந்துரையாடல்களின் போது, அனைத்து சமூகங்களினதும் தன்னிச்சையான பங்களிப்பு உள்வாங்கப்படுவதோடு இந்தச் செயற்பாட்டில் சமயத் தலைவர்களை மட்டுமன்றி சமய செயற்பாட்டாளர்களையும் பெண்களையும் சிறுபான்மை மதங்களினதும் மதங்களற்றவர்களினதும் தலைவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

தகவல்களைப் பெறுவதையும் கருத்துச் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் அதேவேளை, சமூக ஊடகத் தளங்கள் வன்முறையைத் தூண்டுவதற்குப் பதில் நடவடிக்கை எடுக்கின்ற வகையிலும் அதனைக் கண்காணிக்கின்ற வகையிலும் முதலிடப்பட வேண்டும் என அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எந்தப் பிரச்சினை... (11 ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களைப் பகிஷ்கரிக்கின்றனர். முஸ்லிம்கள் தமது பிரதேச சந்தையில் வர்த்தகம் செய்ய முடியாது என பிரதேச சபைத் தலைவர் ஒருவர் தெரிவித்தார். முஸ்லிம்களோடு எந்தத் தொடர்புகளும் வைத்துக் கொள்ள வேண்டாம் என சில பௌத்த ஆலயங்களில் போதனை செய்யப்பட்டுள்ளது.

இன்றைய நிலைமைகள் பற்றி ஒரு பத்தி எழுத்தாளர் இவ்வாறு வர்ணித்துள்ளார். "சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை சங்கடம் மிக்கதாக ஆகிவிட்டது. இந்த நாட்டு முஸ்லிம்களின் வாழ்க்கைப் போக்கு இப்போது பெரும்பாலும் மாறி வருகின்றது. நெருக்குதல், பாரபட்சம், நன்கு திட்டமிடப்பட்ட வெறுப்புப் பிரசாரம் என்பன பொது அரங்கில் நன்கு உருவெடுத்துள்ளன. முஸ்லிம்களுக்கு எதிரான மோசமான மனநிலைகளை இவை பெருமளவில் உருவாக்கியுள்ளன.

இனவாதம் இலங்கையில் புதிய அர்த்தத்தைப் பெற்றுள்ளது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான எல்லாமே இலக்கு வைக்கப்பட்டுள்ளன. பொது இடங்களில் முஸ்லிம்கள் முழு அளவில் நெருக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். பொதுப் போக்குவரத்துக்கள் வாடகைப் போக்குவரத்துக்கள் வேலை செய்யும் இடங்கள் என எல்லா இடங்களிலும் இது தொடர்கின்றது. ஒவ்வொரு முஸ்லிமும் எந்தப் பாகுபாடுமின்றி சந்தேகத்தோடு நோக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. வெறுப்பும் கசப்புணர்வும் எல்லா இடங்களிலும் பரவி விட்டன. வைத்தியசாலை காவலர்கள் மட்டுமன்றி சுபர் மார்க்கெட்டுக்கள் மற்றும் ஏனைய கடைகளிலும் கூட முஸ்லிம் பெண்கள் தமது பாரம்பரிய முந்தானையைக் கூட நீக்கிவிட்டு வரவேண்டும் என்று வற்புறுத்தும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

முஸ்லிம்களின் நிலைமையை சுருக்கமாக விளக்கும் வகையில் பத்தி எழுத்தாளர் எஸ்.எம்.எம். பஷீர் எழுதியுள்ள ஒரு ஆக்கத்தில் இலங்கையில் உள்ள ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகமும் முற்றுகைக்கு ஆளாக்கப்பட்டுள்ள நிலை பெரும் கவலை அளிக்கின்றது. அவர்கள் தமது அன்றாட வாழ்வை முன்னெடுப்பதில் கூட பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் மீது பெரும்பான்மையினர் மேற்கொள்ளும் நெருக்குதல்கள் தாக்குதல்கள் போன்ற தகவல்களோடு தான் ஒவ்வொரு நாளும் விடிகின்றது.

முஸ்லிம்களுக்கு எதிரான இந்த அநீதிகளைக் கட்டுப்படுத்த திராணி அற்றவர்களாகவே படையினரும் பொலிஸாரும் காணப்படுகின்றனர். முஸ்லிம்களும் அவர்களின் சொத்துக்களும் உடைமைகளும் எல்லா இடங்களிலும் சோதனைக்கு ஆளாகியுள்ளன. முஸ்லிம் நிறுவனங்கள் சந்தேகத்தோடு பார்க்கப்படுகின்றன. முஸ்லிம்களும் பயங்கரவாதிகளாகவும் தற்கொலை குண்டுதாரிகளாகவும் நோக்கப்படுகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமைகளைப் பயன்படுத்தி ஜனாதிபதி முஸ்லிம் பெண்களின் ஆடைகளில் கை வைத்தது போல் பிரதம மந்திரி முஸ்லிம்களின் மத்ரஸா கல்வி முறையிலும் அவர்களின் தனியார் சட்டத்திலும் கை வைத்தார்.

முஸ்லிம் சமூகத்தின் மீது மிக ஆழமாகக் கை வைக்கும் வகையில் பள்ளி வாசல்களில் நிகழ்த்தப்படும் போதனைகளின் பிரதியை முன்கூட்டியே அரசுக்கு வழங்கி அனுமதி பெறும் ஒரு முறை குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரசாரம் எந்தளவு மோசமான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளதென்றால் ஒரு முஸ்லிம் நிறுவனம் பிரபல அரச ஆஸ்பத்திரிகளுக்கு அருகில் அங்கு சிகிச்சை பெற வரும் ஏழை மக்களுக்காக கடந்த பல ஆண்டுகளாக விநியோகித்து வந்த இலவச உணவுத் திட்டத்தையும் இந்தப் பிரசாரத்தின் மூலம் சந்தேகத்துக்கு உரியதாக்கி இப்போது அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு மோசமான பின்னணியில் தான் இனங்களுக்கு இடையிலான பிளவை மேலும் வலுப்படுத்தும் வகையில் பௌத்த உயர் பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடத்தின் இன்றைய தலைவர் சங்கைக்குரிய வரகாகொட ஸ்ரீ ஞான ரதன தேரர் முஸ்லிம்கள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டியவர்கள் எனக் குறிப்பிட்டு முஸ்லிம்களின் கடைகளுக்கு செல்ல வேண்டாம் அவர்களால் வழங்கப்படும் எந்த ஒரு உணவையும் உட்கொள்ள வேண்டாம் என்று பொது மேடையில் பகிரங்கமாகக் கூறினார். முஸ்லிம்கள் சிங்களவர்களை நேசிப்பவர்கள் அல்ல என்றும் அவர் கூறினார்.

இதேவேளை அமெரிக்க இஸ்ரேல் யுத்த வெறியர்களால் இந்த நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட இஸ்லாமோபோபியா அல்லது இஸ்லாத்துக்கு எதிரான அதீத அச்சம் அதன் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அதன் விளைவாக முஸ்லிம்கள் ஒரு [illegible] நோக்கித் தள்ளப்பட்டு [illegible] களால் எதிர்பார்க்கப்படும் அரசியல் கொந்தளிப்பு மற்றும் பொருளாதாரச் சீரழிவு என்பனவற்றை நாட்டில் ஏற்படுத்தி உள்ளது.

இந்தக் குழப்பங்களின் நடுவே நாட்டின் பிரதான பிரிவு ஊடகமும் முழு அளவில் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டு முழு முஸ்லிம் சமூகத்தையும் பயங்கரவாதிகளாக சித்தரித்தது. இதனை 'ஊடக பயங்கரவாதம்' என வர்ணிக்கும் அளவுக்கு ஊடகங்கள் நடந்து கொண்டன. சுமார் மூன்று வார காலங்களாக இந்தத் தீய பிரசாரங்கள் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டன. அவசரகால சட்டத்தின் கீழ் அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு சட்டத்தின் கீழ் முஸ்லிம் வீடுகளில் தேடுதல் நடத்தி சமையல் அறை கத்திகளைக் கூட பயங்கர ஆயுதங்களாக சித்தரித்துக் காட்டும் பணியை ஆயுதப் படையினரின் துணையோடு ஊடகங்கள் சிறப்பாக அரங்கேற்றின.

முஸ்லிம் அல்லாதவர்களை முஸ்லிம்களுக்கு எதிராக வேண்டுமென்றே தூண்டி விடும் ஒரு முயற்சியாகவே இவை முன்னெடுக்கப்பட்டன. இதே காலப் பகுதியில் தான் குருணாகல் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான சிங்களத் தாய்மாரின் கருப்பைக் குழாயை சிதைத்தார் என்ற பொய்யான பிரசாரத்தையும் டொக்டர் ஷாபிக்கு எதிராக இனவாத ஊடகங்கள் முன்னெடுத்தன. இன்னொரு 83 ஜுலையை உருவாக்க எல்லா முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் டொக்டர் ஷாபி தொடர்பான வழக்கு குருணாகல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டபோது அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான எந்த விதமான ஆதாரங்களையும் தாங்கள் மேற்கொண்ட விசாரணைகளின் போது பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தனர். அவர் பெண்களின் கருப் பையை சிதைத்தமைக்கோ அல்லது வரு மானத்துக்கு மிஞ்சிய சொத்துக்களை குவித்தமைக்கோ அல்லது பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தமைக்கோ எவ்வித ஆதாரமும் இல்லை என்று பொலிஸார் தரப்பில் நீதிமன்றத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. பின்னர் அவர் நிபந்தனைகளுடன் கூடிய பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மிச்சல் பச்சலெட் முஸ்லிம்களுக்கு எதிராக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் பற்றி தனக்குக் கிடைத்துள்ள அறிக்கைகளும் வன்முறைகளைத் தூண்டும் வகையிலான சில சமயத் தலைவர்களின் அண்மைக்கால கருத்துக்களும். தன்னை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில் இங்கே இப்போது சமூகங்கள் தோல்வி கண்டுள்ளன. ஆழமான அரசியல் சர்ச்சைகளின் கனத்தை தாங்க முடியாமல் அதற்குள் நாடு மூழ்கிக் கொண்டு இருக்கின்றது. பொருளாதாரமும் சமூகமும் சிதைவடைந்து வருகின்றன.

மைத்திரி - ரணில் அரசு இந்த நாட்டுக்கு ஒரு சாபமாகவே முடிந்துள்ளது. இவ்வாறு இந்த சமூகம் எதிர்நோக்கியுள்ள எந்தப் பிரச்சினைக்கும் நெருக்கடிக்கும் எவ்விதமான உறுதியான முடிவுகளும் தீர்வுகளும் எட்டப்படாத நிலையில் தான் முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்ளும் முஸ்லிம் சமூகத்துக்காகப் பதவி துறந்ததாகக் கூறிக் கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் தமது அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SALAMAH TALKS

சமாதானத்தை போதிக்கும் இனிய மாதம் - முஹர்ரம்

A special Programme in Tamil

Usthaz Azad Abdul Mueed
President - Salamah Society

Thursday 5th September 2019
6.30 to 8.00 pm @Salamah Auditorium
*Only for Gents

You are Welcome

1 A,Hill Castle place,Bandaranayaka Mawatha,Colombo 12

NOW @ AKURANA | HEMMATHAGAMA | MADAWALA
MATALE | DIGANA | DELTOTA | UDATHALAWINNA

O/L அல்லது A/L முடித்த மாணவ, மாணவிகளே! சிறந்ததோர் எதிர்காலத்தை அமைத்துக் கொள்வதற்காக அடிப்படை வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுக்கும் முதன்மைப் பாடநெறியில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

3 Certificates

ENGLISH + IT
SOFT SKILLS

Starts on Sep 23

100% Practical

Full Time 3 Months
Part Time 6 Months

இப்பாடநெறியில்
- English (Grammar & Spoken)
- Information Technology
- Life Skills வாழ்க்கைத் திறன் & Motivation
- Counseling உளவியல் & Psychology
- Social Media & Safety

மடவளையில் மாத்திரமே மாணவிகளுக்கு வதிவிட வசதி வழங்கப்படும்

அடிப்படையிலிருந்தே தேர்ச்சியைப் பெற்றுத் தரும் ஆங்கிலம், கணனி மற்றும் திறன்விருத்தி பயிற்சிகளுடன் கூடிய பாடநெறி

EMERRAD COLLEGE
No.36/3B, Srimalwattha, Madawala Bazaar, Kandy. Tel : 081 2050600

HOTLINE
0777 717129



'அலுத் பியாபத்' எனும் அமைப்பினால் ''அவளது கண்ணீர் கடினமானது எனும் தலைப்பில் முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பான கலந்துரையாடலொன்று கொழும்பு பொது நூலகத்தில் நடத்தப்பட்டது. முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ரஷ்மாரா ஆபிதீன், முன்னாள் அமைச்சர் பெரியல் அஷ்ரப், அஷ்ஷெய்க் முனீர் முழப்பர், சட்டத்தரணி எர்மிசா டீகள், சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்

O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேடமான பாடநெறிகள்

Real Access Program
இப்பாடநெறின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்
- Computer studies
- Graphic designing
- Web designing
- Hardware Engineering
- Spoken English

3 மாதம் Weekly 05 Days 8:30 to 4:30
Next Batch Sep-9 & 16

ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை அடிப்படையில் இருந்து கற்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும்
02 சர்வதேச ISO தரச் சான்றிதழ்கள் உட்பட
04 அரச அங்கீகாரம் கொண்ட (TVEC) சான்றிதழ்கள் வழங்கப்படும்

COMPUTERIZED ACCOUNTING
Contents
- Petty cash & Day book - General ledger, journal
- Bank reconciliation statement - Debtors and creditors ledger
- Sales and purchase registers - Fixed asset registers
- Inventory - Profit and loss accounts
- Balance sheets Payroll

Free Study Pack With Software CD
Individual Classes
Next Batch Sep - 16
Duration: 1-3 Months Full Time/Part Time (Weekdays/Weekends)

PACKAGES
MS Excel | MS Access | MYOB | Quick Books | ACCPAC | SAGE-50 | Peactree | Tally

HOTEL MANAGEMENT
COURSE CONTENTS
- Front Office
- House Keeping
- Food & Beverages
- Pastry & Bakery
- International Cookery
- Travel & Tourism Management
- Languages - French & English
- IT (Information Technology)

உயர்தரமான நட்சத்திர ஹோட்டல்களில் உறுதியளிக்கப்பட்ட ஆறுமாத கொடுப்பனவுகளுடன் கூடிய தொழில் பயிற்சி
பாடநெறி முடிவில் (TVEC) Sri Lanka தரச் சான்றிதழ் வழங்கப்படும்.
Duration : - 04 Months
Next Batch Sep-9 & 16

Islamic Banking & Finance
Conducted By :-
A world prize winner & an IBSL Lecturer with 10+ years of industrial experience.
100% JOB TRAINING GUARANTY
Globally over 01 Million Jobs available by 2020
Duration
02 Months Full Time
04 Months Part Time
Next Batch : - Sep-14
இப்பாட நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற (TVEC), ISO தரச் சான்றிதழ் வழங்கப்படும்.

TEACHER TRAINING PROGRAM
-Early Childhood Education-
Modules
- Association Montessori Internationale (AMI) - Methodology
- Preschool Education
- Child Psychology

பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட ISO / TVEC Sri Lanka தரச் சான்றிதழ் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்
Duration:- Full Time 03 / Part Time 06 Months
Next Batch Sep - 21
Industrial Training Will be Provided
With more than 600 hrs of Theory with Industrial Training

AIR CONDITIONING & REFRIGERATION
- A/C Repairing
- Refrigeration Repairing
- House wiring
100% செயல்முறைகளுடன்
Next Batch Sep - 16

ஆண் / பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி - Hostel Available

Golden College Learning For Success
GOLDEN COLLEGE CITY CAMPUS
An ISO 9001 : 2015 Certified Institute | TVEC Reg No : [P09/0148]
#548, Peradeniya Road, Kandy.
www.goldencollege.lk
HOTLINE 0777 222 529 / 0812 205 544

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Maninga Dharma Mawatha, Colombo 09.